Dr. U. V. SWAMINATHA IYER LIBRARY

# திருவாதவூர்த் தல புராணம்



ஐந்து மாட இராஜ கோபுரம்

# படங்கள் அட்டவணை


| எண் | | பக்கம் |
| --- | --- | --- |
| 1. | முன்புறம் (அட்டையில்) இராஜகோபுரம் | |
| 2. | ஸ்ரீ மாணிக்கவாசகர் | |
| 3. | புருஷாமிருகம் .... .... | 1 |
| 4. | ஆறுகால் மண்டபம் .... .... | 13 |
| 5. | நூற்றுக்கால் மண்டபம்.... .... | 16 |
| 6. | ஸ்தல விருட்சம் .... .... | 17 |
| 7. | திருமறை நாயகர் .... .... | 33 |
| 8. | ஸ்ரீ ஆரணவல்லியார் .... .... | 49 |
| 9. | ஸ்ரீ சிவகாமியாருடன் ஸ்ரீ நடராஜர்.... | 65 |
| 10. | ஸ்ரீ சுப்ரமண்யர் .... .... | 81 |
| 11. | ஸ்ரீ மாணிக்கவாசகர் தனிக்கோயில் | 96 |
| 12. | பின்புறம் (அட்டையில்) பதினாறுகால் மண்டபம் | |



ஸ்ரீ மாணிக்க வாசகர்

(பக்கம் 14)

உ

சிவமயம்

# திருவாதவூர்த் தல புராணம்


ஆசிரியர்

குகஸ்ரீ ரசபதி


தமிழக அறநிலையப் பாதுகாப்புத் துறை
ஆணையாளர்

**உயர்திரு. A. உத்தண்டராமன், I.A.S.**
அவர்கள் வாழ்த்துரையுடன்


**மதுரை ஸ்ரீ மீனாட்சிசுந்தரேசுரர் ஆலய**
**வெளியீடு**

பதிப்புரிமை]   **1968**   [விலை ரூ. 1

முதற் பதிப்பு 1958

லிபர்ட்டி அச்சகம்,
சென்னை - 1.

திருச்சிற்றம்பலம்

தமிழ் நாட்டு அறநிலையப் பாதுகாப்புத்துறை ஆணையாளர்
உயர்திரு. A. உத்தண்டராமன் I. A. S.

## அவர்கள் வாழ்த்துரை

அறுவகைச் சமயத்தோர்க்கு மவ்வவர் பொருளாய் வேறுங்
குறியது வுடைத்தாய் வேதா கமங்களின் குறியிறந்தங்
கறிவினி லருளான் மன்னி யம்மையோ டப்ப னாகிச்
செறிவொழி யாது நின்ற சிவனடி சென்னி வைப்பாம்.

ஆதியும் அந்தமுமில்லா அரும்பெருஞ் சோதியாய் விளங்கும் இறைவன், தன்னை ஆன்மகோடிகள் வழிபட்டு ...ய்யும் வண்ணம் கோயில்கொண் டெழுந்தருளிய தலங் ...ர் எண்ணிறந்தவை தமிழ் நாட்டில் உள்ளன.

'நோக்கிய இடங்க ளெல்லாம் நுவலரும் தலங்க ளாக
தேக்கிய தீர்த்தமாகச் சிவலிங்க மூர்த்தி யாக
ஆக்கிய தவத்தா னாலும் அடைந்தவர்க் கறமென் றேதும்
பாக்கிய மாக்கி மேலுய்ப் பதுமுது சென்னி நாடு'
என்றார் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை.

'சீர்மன்னு செல்வக் குடிமல்கு சிறப்பி னோங்கும்
கார்மன்னு சென்னிக் கதிர்மாமணி மாட வைப்பு
தார்மன்னு சிந்தைப் பலநற் றுறை மாந்தர் போற்றும்
பார்மன்னு தொன்மைப் புகழ் பூண்டது பாண்டிநாடு'

என்று சேக்கிழார் பெருமானாற் போற்றப் பெற்ற தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டில், சிறந்து

விளங்கும் தலங்களுள் திருவாதவூர் என்னும் பதி மிக வும் பழமையானது; சிறந்த பெருமை யுடையது; சமயாசாரியர் நால்வருள் உயரிய ஞான மார்க்கத்தை உபதேசித்த மாணிக்கவாசகப் பெருமான் அவதரித்த புண்ணிய தலம். அவரருளிய திருவாசகத்தின் பெருமையை அறியாதார் யார்?

'வேதம் ஓதில் விழிநீர் பெருக்கி
நெஞ்சம் நெக்குருகி நிற்பவர் காண்கிலேம்
திருவா சகமிங் கொருகால் ஓதில்
கருங்கல் மனமுங் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்பர் ஆகுநர் அன்றி
மன்பதை உலகில் மற்றையர் இலரே'

என்றார், சிவப்பிரகாச சுவாமிகள்.

'வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவை [கலந்தென்
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே

'வாட்டமிலா மாணிக்க வாசகநின் வாசகத்தைக்
கேட்டபொழுது அங்கிருந்த கீழ்ப்பறவைச் சாதிகளும்
வேட்டமுறும் பொல்லா விலங்குகளும் மெய்ஞ்ஞான
நாட்டமுறும் என்னில் இங்கு நானடைதல் வியப் [பன்றே'

என்று இராமலிங்க சுவாமிகள் பாராட்டி யுள்ளார்.

'திருவாசகத்துக் குருகாதார் ஒருவாசகத்துக்கும் உருகார்' என்ற பழமொழியே திருவாசகத்தின் சிறப்புக்குப் போதிய சான்று. இத்தகைய ஒப்பற்றதோர் அருள்நூலை உலகினுக்கு ஈந்த மாணிக்கவாசகப் பெருமான் அவதரித்த திருவாதவூரின் பெயராலேயே அவர் திருவாதவூரர் என்று அழைக்கப் பெற்றார்.

மாணிக்க வாசகர் வாழ்க்கை வரலாறு யாவரும் அறிந்ததே. அவர் வாழ்க்கை சிவஞானபோதம் எட்டாம் சூத்திரத்துக்கு நல்ல உதாரணம். அவருடைய திருவாசகம் எட்டாம் திருமுறை. பாண்டிய மன்னனால் அவர் சிறையி லிடப்பட்டு வருந்தியதும் இப்பதியிலேயே என்று, கீர்த்தித் திருவகவலில்

'வாதவூரினில் வந்தினி தருளிப்
பாதச் சிலம்பொலி காட்டிய பண்பும்'

என அவரே அருளிச் செய்திருப்பதைக் காண்கிறோம்.

ஆளுடைய அடிகளின் பெருமையைப் பாண்டிய மன்னனுக்கு அறிவிக்கும் பொருட்டு, சோமசுந்தரக் கடவுளே வந்திக்காகப் பிட்டுக்கு மண் சுமந்து பிரம்பா லடிபட்ட திருவிளையாடலைச் செய்தது, ஓர் ஆவணி மூலத்தன்று. அந்தத் திருவிழாவின் போது மாணிக்கவாசகர் உற்சவக் கோலத்தில் மதுரைக்கு எழுந்தருளும் காட்சி இன்றும் நடைபெறுகிறது. இத்தொடர்புடைய காரணத்தாலும்,

'மதுரைப் பெருநல் மாநகர் இருந்து
குதிரைச் சேவகன் ஆகிய கொள்கையும்';
'ஆடக மதுரை அரசே போற்றி
கூடல் இலங்கு குருமணி போற்றி';
'மண்பால் மதுரையில் பிட்டு அமுது செய்தருளி';

'மங்கையர் மல்கு மதுரை சேர்ந்த
வகையறிவார்—எம்பிரா னாவாரே';
'பெரிய தென்னன் மதுரை எல்லாம்
பிச்ச தேற்றும் பெருந்துறையாய்'

என ஆளுடைய அடிகளால் புகழ்ந்து பாடப்பெற்ற மதுரையம் பதியிலுள்ள திருஅங்கயற் கண்ணி சொக்கலிங்கப் பெருமான் கோயில் நிர்வாகத்துடன், திருவாதவூர் திரு வேதநாயகி வேதநாயகர் கோயிலும் இணைக்கப்பெற்றுள்ளது. இக்கோயில் திருப்பணிக்காக உயர்திரு. பி. டி. ராசன் அவர்கள் சீரிய தலைமையில் ஒரு திருப்பணிக் குழு அமைக்கப்பெற்று அரும்பணிகள் செய்யப் பெற்றுள்ளன.

'மாதவர் மடங்களாதி வரதன் மந்திரங்களாதி
நாதமா இலிங்க மாதி நளினபுட் கரணி யாதி
சேதமுற் றிடின்முன் போலச் செய்துளோர்க்கு
[உறுப லன்தான்
ஓதுமுன் செய்து ளோரின் ஆயிரங் குணிதம் ஓங்கும்'
(சிவபுண்ணியத் தெளிவு)

இத்திருப்பணிக் குழுவினர் கு க ஸ்ரீ இரசபதி யவர்களைக் கொண்டு இத்தல வரலாற்றினை எழுதுவித்து வெளியிட்டிருக்கின்றனர். இந்நூலாசிரியர் பல அரிய நூல்களை இயற்றிய பெரும் புலவர். சிறந்த முருக பக்தர். சிவபெருமானிடமும், தேவியினிடமும் பேரன்பு பூண்ட சைவ சீலர். அவருடைய இனிய எளிய தமிழ் நடை தற்காலத்துக்கு மிகவும் உகந்தது. பழைய புராண வரலாறுகளையும், இத்தலத்தில் வழிபட்டு முத்தி பெற்ற வரத நாரணர் முதல் மகாசேன பாண்டியர்வரை

பதினறு பேர்களுடைய வரலாறுகளையும் சுருங்கச் சொல்லி விளங்க வைத்துள்ளனர். திருவாதவூரர் வரலாறு விரிவாக அமைத்திருப்பது சாலப் பொருத்தமே. புருஷாமிருகத்தைப் பற்றிய வரலாறு நன்கு விளக்கம் பெற்றுள்ளது. "புலவர் உலகம் புகழ்ந்து போற்றும் கபிலர் தோன்றிய பெருமையையும் உடையது வளம் சிறந்த திருவாதவூர்" என்று குறிப்பிட்டிருப்பதும் ஓர் தனிச் சிறப்பு.

'நீதிமா மதூக நீழல் நெட்டிலை இருப்பை என்றோர்
காதல்கூர் பனுவல் பாடும் கபிலனர் பிறந்த மூதூர்
சோதிசேர் வகுளநீழல் சிலம்பொலி துலங்கக்காட்டும்
வேதநா யகனர் வாழும் வியன்திரு வாத வூரால்'

என்னும் பழைய திருவிளையாடலில், இத்தலத்தின் மகிமையையும் தலவிருட்சத்தையும் குறித்திருப்பதை நன்கு விளக்கி யுள்ளார். இத்தலத்திலுள்ள மூர்த்திகளின் அருமை பெருமைகளையும், பிரம்மதீர்த்தம், பயிரவ தீர்த்தம், கபில தீர்த்தம் முதலிய பல தீர்த்தங்களின் மகிமைகளையும் நன்கு புலப்படுத்தி யுள்ளார். இவைகளுடன், வரலாற்றுப் போக்கில் பல அரிய சமயக் கருத்துக்களைத் தெள்ளிய முறையில் விளக்கி யிருப்பது அறிஞருக்கு நல்விருந்து.

'மூர்த்தி தலம் தீர்த்தம் முறையால் தொடங்கினர்க்கோர்
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே'

என்றார் தாயுமானவர்.

இத்தல புராணத்தை எழுதி, அத்துடன் வழிபடுவோர்க்குப் பயன்படும் முறையில் ஆலய அமைப்பு, மூர்த்திகள், தீர்த்தங்கள் முதலியவற்றின் சிறப்புகளையும், சமய தத்துவங்களையும் விளக்கி, திருவாசகத்தி லிருந்து அரிய பாடல்களைத் தொகுத்து உதவிய நூலாசிரியர்க்கும்,

இதை வெளியிட்டுதவிய திருப்பணிக் குழுவினருக்கும் சைவ உலகம் பெரிதும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளது.

வாழ்க திருவாதவூரர் புகழ்!
வளர்க திருநெறி!!
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்!!!

'திருப்பணி செய்வார்க்குச் சிவனை உன்னிச் செம்பொன்
விருப்புடன் ஈவார் பெறுக வீடு'

'பெண்சுமந்த பாகப் பெருமான் ஒருமாமேல்
எண்சுமந்த சேவகன்போல் எய்தியதும் வைகைநதி
மண்சுமந்து நின்றதுமோர் மாறன் பிரம்படியால்
புண்சுமந்து கொண்டதும்நின் பொருட்டன்றோ
[புண்ணியனே'

—இராமலிங்கசுவாமிகள்.

திருச்சிற்றம்பலம்.

A. உத்தண்டராமன்.
30—1—58.

# முன்னுரை

அமுதினும் இனிக்கும் அருந்தமிழ் நாட்டில் தூய அருளாளர் பலர் தோன்றினர். படிமுறையாக அவர்கள் காட்டிய வழிகள் பதினாறு. அவைகளுள் ஒன்று ஞானத்துள் ஞானம். வாழ்விக்கும் அவ் வழியில் வளர்ந்து, உலகர்க்கும் வழிகாட்டியவர் திரு வாதவூர் அடிகள்.

அறிவே நுண்மை ஆலயம். கனிந்த உணர்வே கரு அறை. உணர்வின் நடுவில் ஒளி. சிறந்த அதனுள் சிவம்.

'' அருள் செய் சிவனே ! அலந்தேன் அந்தோ !
முறையோ ! முறையோ இறையோனே ! என்று ''

காதலித்த சிவத்தை விளித்துக் கதறி யழுது, சிறந்த கோவை செய்து, கதிதரும் அருள் ஒளியில் அடிகள் கலந்து இன்பம் கண்டவர்.

அகத்தை முகத்தால் அறிவது மரபு. அடிகள் திருவுளத்தை, அவரது திருமுகமான திருவாசகம் தெரிவிக்கின்றது. ஊன்றி அதனை உணர்ந்து, திருவாசக அன்புக் கடலில் திளைக்கின்றார் அறிஞர்.

'ஆணெல்லாம் சிவம். பெண்ணெல்லாம் தேவி. அடியார் பெருமக்கள் நடமாடும் கோயில்கள். சிவாலயத் திருப்பணி செய்பவர் சிவகணங்கள். பயனுனது இந்தப் பாவிகம். இதனில் சோதனை நேரில், நியதி விளைய மெய்ப் பொருள் நாயனாரை நினை ! சிவாலய வலத்தில் திருவாசக மனனம் செய் !'

இங்ஙனம் என் இளம் பருவத்தில் என் அன்னையும் அத்தரும், ஆன்றோர் பலரும் அறிவுறுத்திக் கொண்டே இருந்தனர். பேறான அவ் வாசக தீட்சை, பின்னி என்னில் பிணைந்தது. இந்நிலை என்னில் என்றும் இருக்க, மேலும் ஆசி செய்ம்மின்கள் என்று, மேலோர் பொன்னார் திருவடிகளைப் போற்றுகின்றேன்.

"இன்றெனக்(கு) அருளி, இருள்கடிந்(து) உள்ளத்(து)
எழுகிற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை, நினைப்பற நினைந்தேன்
நீயலால் பிறிதுமற் றின்மை;
சென்று சென்(று,) அணுவாய்த் தேய்ந்து தேய்ந்(து)
ஒன்றாம்
திருப்பெருந் துறையுறை சிவமே!
ஒன்றும் நீயல்லை, அன்றி ஒன்(று) இல்லை;
யார்உனை அறியகிற்பாரே!''

எனும் பாசுரத்திற்கு, சென்னை சீர்பாத தொண்டர்கள் சபையில் ஒருநாள் விரிவுரை யாற்றினேன். என் புல்லிய உரையைப் பொருளாக்கிய அன்பர்கள், பழைய வண்ணை திருவருட் பிரகாசர் பேரவையில், வாரத்திற்கு ஒருநாள் என வரையறை செய்து, எட்டு ஆண்டுகளாகத் திரு வாசகச் சொற்பொழிவில் எளியேனை யீடுபடுத்தினர். நிறைவு விழாவில் திருத்தருமபுரம், திருவாவடுதுறை, திருப்பனந்தாள் ஆதீன கர்த்தர்கள், அருளொடு ஆசிச் செய்திகளை அனுப்பி வைத்தனர்.

தொடர்ச்சியான இவைகளின் பயனோ என்னோ! இன்று திருவாதவூர் அடிகளின் திருவவதாரத் தல புராணத்தில் சிந்தனை செய்யும் செய்தி பிறந்தது; சிறந்த அத்தலத்தைச் சென்று சேவிக்கவும் செய்தது. இதை நினைக்கின்றேன்; என் உள்ளம் நெகிழ்கிறது.

உளத்தாலும், வாக்காலும், உழவாரப் படைமேல் பதித்த உணர்வாலும் சிறந்த பெருந்தகை. கலையுணர்வு கைவந்து கனிந்தவர். வீறு கொண்டு திருக்கோயில் திருப்பணிகளைக் காக்கும் விறல்மிண்டர். சிறந்த தலங்கள் அனைத்தையும் சேவித்து உயர்ந்த செம்மல் என்று, பண்பிற் சிறந்தோர் பாராட்டும் தமிழக அறநிலையப் பாதுகாப்புத் துறை ஆணையாளர் உயர்திரு. A. உத்தண்டராமன் I. A. S. அவர்கள், மிகச் சிறிய என்னையும் ஒரு பொருளாக்கி இத் தலவரலாற்றை எழுதப் பணித்தனர்.

வாழ்த்துரையும் வழங்கினர். சிறந்த அவர்கள் உள்ளத்திற்கு என்றும் வணக்கம் செலுத்துவன்.

திருவாதவூர்ப் புராண எழுத்துக்களில் நிறைவுளதேல், அது, உயர்தரு திருவருளின் உதவுதல்; குறையுளதேல், அது, என் அறிவினைத் தகையும் கருமல காரியம். உத்தம அறிஞர்கள் இதை உணர்வர்; உள்ள குறைகளை உணர்த்துவர்; மறு பதிப்பில் திருத்திக் கொள்வம் என்னும் நம்பிக்கை யுடையேன். ஸ்ரீ ஆரணவல்லி சமேத திருமறைநாதர் உவந்து எழுந்தருளிய திருவாதவூர்த் திருக்கோயில் திருப்பணி வரிசையில், இந்நூல் வெளியீடும் ஒன்ருக வழிசெய்த கனம் தங்கிய திருப்பணிக் குழுவினரான பெருமக்கட்கு, திசை நோக்கிய என் வணக்கம் என்றும் உரியது.

வடமொழியில் இருந்த இம் மகாத்மியத்தை மொழி பெயர்த்த பிரமஸ்ரீ சங்கர சாஸ்திரிகள் அவர்கட்கும், அன்பொடு பேணி அப்பிரதியை உதவிய தல ஓதுவார் திருயாழ்கீத சுந்தரம் பிள்ளை அவர்கட்கும், இந்நூல் வெளிவரும்வரை அன்பால் இன்முகம் காட்டி இடையிடை ஊக்கி வந்த பலமுகத் திருப்பணி செய்யும் ஸ்ரீ பாலசுப்ரமண்யம் கம்பெனியார்க்கும், காலத்தில் அச்சிட்டு உதவிய லிபர்டி அச்சகத்தாருக்கும் என் நன்றி என்றும் உரியது.

இத்தகைய திருப்பணி எற்கு என்றும் நேர, திருவருள் உதவுக; அன்பர்கள் ஆசி செய்க என்று பிரார்த்திக்கிறேன்.

## நேரிசையாசிரியப்பா

கடனிற வண்ணன் கண்ணெடுன் றிடந்து
மறைச்சிலம் பரற்று மலரடிக் கணியப்
பரிதி கொடுத்த சுருதிநா யகற்கு
முடிவிளக் கெரித்துங் கடிமலர்க் கோதைச்
சுரிகுழற் கருங்கண் துணைவியை யளித்தும்

அருமகள் நறும்பூங் கருமயி ருதவியும்
நென்முளை வாரி யின்னமு தருத்தியுங்
கோவண நேர்தனை நிறுத்துக் கொடுத்தும்
அகப்படு மணிமீ னரற்கென விடுத்தும்
பூட்டி யரிவா ளூட்டி யரிந்துந்
தலையுடை யொலிக்குஞ் சிலையிடை மோதியும்
மொய்ம்மலர்க் கோதை கைம்மலர் துணித்துந்
தந்தையைத் தடிந்தும் மைந்தனைக் கொன்றுங்
குற்றஞ் செய்த சுற்றங் களைந்தும்
பூக்கொளு மாதர் மூக்கினை யரிந்தும்
இளமுலை மாதர் வளமை துறந்தும்
பண்டைநா ளொருசிலர் தொண்ட ரர்யினர்
செங்கண்மால் தடக்கையிற் சங்க நாண
முட்டாட் டாமரை முறுக்கவிழ் மலர்மேல்
வலம்புரி கிடக்கும் வாதவூ ரன்ப
பாடும் பணிநீ கூடும் பொருட்டு
மதுரைமா நகரிற் குதிரை மாறியும்
விண்புகழ் முடிமிசை மண்பொறை சுமந்தும்
நீற்றெழின் மேனியின் மாற்றடி பட்டும்
நின்னைத் தொண்ட னென்னக் கொண்டனன்
இருக்கு மடுக்க லரக்க னெடுப்ப
முலைபொர வரைபொரு மொய்ம்பின்
மலைமகள் தழுவ மனமகிழ் வோனே.

வாழ்க திருவாதவூர்!

வாழ்வளிக்கும் திருவாசகம்

எங்கும் வளர்வதாக!!

ஓம்.

இங்ஙனம்,
**ரசபதி.**
திருமுருக நிலயம்.
1—2—58

97, சஞ்ஜீவிராயன்
கோயில் தெரு,
பழைய வண்ணை,
சென்னை-21



புனித ஏரிக்கம்பத்தின் மேல் புருஷா மிருகம் (பக்கம் 2)

சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# திருவாதவூர்த் தல வரலாறு

## தலமும் இருப்பிடமும்

திருவாதவூர், அமுதினும் இனிக்கும் அருந்தமிழ் காத்த பாண்டி நாட்டுப் பழம் பதி. மாபெரும் அதன் தலைநகர் மதுரை. பரிபாடலில் வையைக் கென்றும் தனக்கென்றும் முப்பது செய்யுள்களை வரைந்து கொண்ட மதுரையி லிருந்து, பதினாறு கல் தூரத்தில் திகழ்ந்து விளங்குகிறது திருவாதவூர்.

இது, தலங்களில் உயர்ந்தது; மூர்த்தியில் முதன்மை; தீர்த்த விசேடம் மூன்றும் கொண்டது. வாயுதேவன் வழிபாடு செய்த இடமாதலின், வாதபுரம், வாதவூர், சமீரணபுரம் என்னும் பெயர்களை எய்தியது. பாண்டிய பட்டணம், வயிரவபுரம், சம்யாக கானம் என்ற இனிய காரணப் பெயர்களும் இதற்கு இருக்கின்றன. இதன் ஜனத்தொகை ஏறக் குறைய மூவாயிரம்.

மதுரை ஜில்லா, மேலூர் தாலுக்காவைச் சேர்ந்த சிறந்த இத் தலத்தைச் சேவிக்கச் செல்பவர்க்கு, என்றும் பஸ் வசதி யிருக்கிறது. மதுரையி லிருந்து, மேலூர் பஸ்ஸில் ஏறி வாதவூர் எல்லையில்

வந்ததும், வானளாவி எழுந்த கோயில் கோபுரம், வருகின்ற பக்தர்களை வரவேற்பதுபோல் தோன்றும்.

அதை அணுக அணுக, வந்தேன் என்று அமைதி வரும்.

## காவல் தெய்வம்

கோபுரத்தின் இடத்திலிருந்து, இரண்டு பர்லாங்கு தூரத்தில் இருக்கும் பயனுன ஏரிக் கரையைப் பார்க்கிறோம். அந்த ஏரி, விஷ்ணு தீர்த்தம் எனப் பெறும். (கம்பீரமான ஏரியை, பாண்டி நாட்டார் கம்வாய் என்று கூறுவர்.) இந்த ஏரிக் கரை யோரத்தில், ஒரு கம்பத்தின் மேல், பொலிவொடு நிற்கிறது புருஷாம்ருகம். அதை, மக்கள் ஏரிக்காவல் தெய்வம் என்பர்.

மழையை வானம் மறந்த நாளில், ஊர் மக்கள் ஒன்று கூடுவர். நூறு தேங்காய்களைக் கறுக்குவர். சிறக்க மேள தாளத்துடன் செல்வர். புருஷா மிருகத்தின் மேல் அதைப் பூசுவர். அவ்வளவுதான். எங்கிருக்கும் மேகங்களும் ஒன்று சேரும். வேண்டும் அளவு மழை பொழியும். இங்குள்ள ஐதிகங்களுள் இது ஒன்று. அதன் கீழ் இருக்கும் கம்பங்கள், நீரின் ஆழம் காட்டும் அளவு கோலாக, நிமிர்ந்து கம்பீரமாக நிற்கின்றன.

## தீர்த்தத்தில் தெய்வம்

வேத நாதர், ஏரியின் நடுவில் வீற்றிருக்கிறார். உயர்ந்த மனம் கொண்டு அவரை உபாசிப்பவர், உபதேச நுட்பங்களை உணர்கின்றார். வேத ஜீவன் அவர்கட்கு விளங்கும்.

திருமறை நாதர் கோயில், ஆதியில் ஏரி நடுவில் தான் இருந்தது. இன்றும் தோற்றம், அப்படித் தான் இருக்கிறது. நெடுங்கரை மேல் நிற்கிறோம்; நீரைப் பார்க்கிறோம். நிமலனை மனம் நினைக்கிறது,

"ஏரி நிறைந்தனைய செல்வன் கண்டாய்"

என்று பக்தியோடு நம் வாய் பாடுகின்றது.

ஏரிக்கரையி லிருந்து, இப்பால் இறங்குகிறோம். இறங்கிய இடத்திலேயே ஒரு பிடாரி கோயில் இருக்கிறது. ஊர்க்குக் கோடியில் உள்ள ஏரியின் உள்ளிடத்தும் வெளியிடத்தும், காவல் தெய்வங்கள், கண்ணும் கருத்துமாகி, தலத்தை அப்படிக் காவல் செய்கின்றன. புனித இவர்கள் திருப்பணியை, எண்ணும் போதே நம் இதயம் நெகிழ்கிறது.

## வரத பிடாரி வழிபாடு

பொழுது தவறாமல் ஒரு பூசாரி, அருமையாக இத் தேவியை ஆராதிக்கிறார். வைகாசியில் அமா வாசை வருகிறது அல்லவா. அதற்கு முன் வரும் அங்காரக நாளன்று, அக் கோமளை கோயிலில் கொடியேறும். வேத நாயகர் கோயிலி லிருந்து, ஆதி சைவ அந்தணர்கள், வித்தகத் துர்க்கை விக்ரகத்தைக் குதூகலத்தொடு கொண்டு வருவர். மந்த்ர பூர்வ மான கிரியைகளை நடத்துவர். நலம் சிறந்த திரு விழா, பத்து நாள் அங்கு நடைபெறும். விக்ரகம், அதன்பின் வேதநாதர் ஆலயத்தை அடையும். அரு மையான இவ் வரலாறுகளை முதலில் அறிந்து கொள் கிறோம். அதன்பின், வாழ்விக்கும் அந்த ஆலயத்தை வலம் வருகிறோம். வணங்குகிறோம்.

தாயே! நலம் தரும் திருமறை நாதரை, ஸ்ரீ ஆரண வல்லி சமேதரை ஆராதிக்க வந்தோம். அதற்குத் தடையா யிருக்கும் பீடைகளை, இப்போதே அகற்றிவிடு; அம்மா! அம்மா என்று அலறுகிறோம்.

அத்தேவி அருளால், காமக் கயமை; மோக மோசம்; மதமாற்சர்ய மாயம் முதலிய பீடைகள் மாய்கின்றன. தூய்மை யடைந்தோம் என்ற நினைவு எழுகிறது. அங்கிருந்து கரையோர மாகவே வருகிறோம்.

## கோட்டையும் கோயிலும்

பாண்டியர்கட்கு இருந்த கோட்டைகள் பல. அவைகளுள் ஒன்று வாதவூர்க் கோட்டை. கோயிலைச் சுற்றி கோட்டை; கோட்டையைச் சுற்றி ஏரி; இது அருமையாக அமைந்த அமைப்பு.

நாளா வட்டத்தில் காலதேவன், தனது நாடகத்தை இங்கு நடத்தி யிருக்கிறான். கோட்டை யிடிந்தது. எஞ்சியது ஒரு புறமதில். அம் மதிலே ஏரிக்கு அரண்.

"ஆற்றங் கரையின் மரமும், அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழும்"

என்பர். எனினும், எம்பெருமான் திருக்கோயில் மட்டும் இருக்கிறது. இதன் வரலாறு, நீடித்து சிவ புண்ணியம் நிற்கும்; மற்றவை மங்கி மறையும் என்பதை, உறுத்தி நமக்கு உணர்த்துகின்றது.

## தவக்கோலக் காளி

மதிலைக் கண்டதும், வளமான வீதிக்கு வருகிறோம். ஆரம்பத்தில் ஒரு அரசமரம். அதன் எதிரில்

ஒரு காளி கோயில். அருந்தவம் செய்து அத்தேவி, பேறு இத்தலத்தில் பெற்றவள். காளிக்கு அருளிய காளீசரை, கண்ணுதலார் ஆலயத்துள் பிறகு காணப்போகிறோம். இங்கு அத்தேவியை இறைஞ்சி, சிறக்க மேலும் செல்கிறோம்.

## பொய்கையும் தேரும்

ரோட்டிற்குக் கிழக்கே, பிரம தீர்த்தம் என்னும் கம்பீரமான பொய்கையைக் காண்கிறோம். அதன் கரை மேல், நியதியான ஒரு இடத்தில், திருத்தேர் நிற்கிறது.

## திருக்கோபுரம்

எடுப்பான தேர் நிலைக்கு எதிரில், கிழக்கு நோக்கிய ஐந்து மாட இராஜ கோபுரம் இருக்கிறது. திருப்பனந்தாள் காசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் ஸ்வாமிகள்,

'சிவசிவ என்னச் சிவகதி தானே'

என்னும் மந்திர முறையை மதிகொண்டுணர, திருக் கோபுரத்தில் சிவநாம ஒளி விளக்கேற்றி, சிறக்க எவர்க்கும் உய்தி செய்துளர்.

வானளாவிய கோபுரமான தூல லிங்கத்திற்கு, வணக்கம் செலுத்துகிறோம். வாயிலுக்கு வலப் புறத்தில், ஏழாம் திருநாள் மண்டபம் இருக்கிறது. திருவிழாக் காலத்தில், வீதி வலம் வருகின்ற விமலன், இனிய கோலம்பெற அங்கு வந்து இறங்குவன். அருமையான இவைகளை யெல்லாம் அறிகிறோம். அதன்பின் கோபுர வாயிலுள் நுழைகிறோம்.

## கொடிமரம்

தூய கொடிமரம் எதிரில் தோன்றுகிறது. பயன்தரும் இதன் தத்துவங்கள் பல. **நேர்மை பெற நில்; வழிபாடே வெற்றிக்கு வழி;** இந்த நியதியையும் அது நினைவூட்டுகின்றது.

## கிழக்குப் பிராகாரம்

வெளிப் பிராகாரத்தை வலம் வர, தென்புறமாகத் திரும்புகிறோம். இனிய ஒரு நடைவாவி எதிரில் இருக்கிறது. அதன் பெயர் பயிரவ தீர்த்தம். அதன் கரையில் இருக்கும் மாபெரும் தலவிருட்சம் மகிழமரம். அது, ஆநந்தபுரி இப்பதி யென்பதை அறிவிக்கின்றது.

"சோதிசேர் வகுள நீழல் சிலம்பொலி துளங்கக் காட்டும்
வேத நாயகனுர் வாழும் வியன்திரு வாத வூரால்"

எனும் பழைய திருவிளையாடலில், இத்தலத்தின் சிறப்பையும், பய்னுன தலவிருட்சப் பெயரையும் பார்க்கிறோம்.

கிழக்குப் பிராகார வலப்புறக் கோடியில், எடுப்பான ஒரு நூற்றுக்கால் மண்டபம் இருக்கிறது. **அரிய இம் மண்டபத்தை மாணிக்க வாசகரே அமைத்தார்.** நம்பன் நரிபரி யாக்கிய நாளில், மாணிக்க வாசகா! வருகிறேன்! அறிந்துகொள் என்று, சிற்சபேசர் திருவடிச் சிலம்பொலி காட்டிய இடம் இது என்று, அறிந்த அறவோர் இவைகளை அறிவிக்கின்றனர்.

"ஆதர அடியார் முற்றும் அடிபணிந் தேத்தப் போந்து
வாதையம் புரத்து நண்ணி, மணிச்சிலம் போசை காட்டத்;
தீதற ஆண்ட எந்தை திருச்சிலம் போசை என்றே
ஏதமா முனிவர் தேறி இசைபடத் துதிக்கல் உற்ருர்"

எனும் வேம்பத்தூரார் திருவிளையாடலும், வாய்மையே இவ் வரலாறு என்று, அருமையொடு நமக்கு அறிவிக்கிறது அல்லவா!

இந்த மண்டபக் கொடுங்கைகள், அற்புத சிற்ப நுட்பம் அமைந்தவை. ஆயினும், சிறந்த அவைகள் இன்று சிதைந்திருக்கின்றன. அவைகளை, இயன்ற வரை சீர்திருத்த இன்றைய நிர்வாகிகள் எண்ணியுளர்.

## தெற்குப் பிராகாரம்

வலம் வரும் எண்ணத்தில், சிறக்க மேலும் செல்கிரேம். தெற்குப் பிராகாரத்தில் திரும்புகிரேம். அதில், எடுப்பான ஒரு மேடை யிருக்கிறது. அதன்மேல் ஏறுகிரேம். கருங்கல்லால் அழகிய கட்டுக் கோப்புடைய அது, ஆரணவல்லியார் திருக்கோயில் என்று அறிகிரேம்.

ஆரம்பத்தில் இருக்கும் கன்னி ஊஞ்சல் மண்டபத்தை, கண்டதும் மனம் கனிவு பெறுகிறது. ஆரம்பத்தில் இடபதேவர், இறைவி சந்நிதியை நோக்கியபடியேஇருக்கிருர்.வெளிமதில்சுவற்றில் எழுதியிருக்கும் துவார சத்திகளின் ஓவியத் திருவுரு இரண்டு, கண்ணையும் கருத்தையும் கவரக் காண்கிரேம்.

முதன்மையான வாயிலின் முகப்பில், கம்பீரமான கஜமுக கணபதி; அவர்க்கு இருபுறமும் இளங்

கணபதிகள் இருவர். ஆம். கிழக்கு நோக்கும் மூவரும் பழைய மூர்த்தங்கள். அவர்கட்குப் பக்கத்தில், நானும் இருக்கிறேன் என்கிருர் நாகேஸ்வரர்.

வழி முறைப்படி முதலில் வணங்குகிருேம். அதன் பிறகு வாயிலுள் நுழைகிருேம். புகுந்ததும், இதயத்திற்கு இதம் தரும் ஒரு மகாமண்டபம் இருக்கிறது.

இங்கும் ஒரு இடப தேவர் இருக்கிருர். அவர்க்கு இடப்புறத்தில், மதில் ஓரமாக, வாயில் காவலர் போல், கருணையே வடிவான சிந்தாமணி கணபதியும், வலப்புறமாக, வேலேந்தி மயிலேறிய ஸ்ரீ சுப்ர மண்யப் பெருமானும், ஸ்ரீ தேவ யானையாருடன் எழுந்தருளி யிருப்பதை அறிகிருேம்.

அமல சித்தைவிட்டு நீங்காத ஆநந்தம், விமலசத்தின் பூரிப்பாக வெளிப்பட்டு, கணபதி உருவம் கொண்டது. சத்தைவிட்டு அகலாத சகஜாநந்தம், வித்தக சித்தின் கொழுமையாக வெளிப்பட்டு, சிவசுப்ரமண்யம் என்னும் திருநாமம் எய்தியது. இனிய அத் தத்துவங்களை, இங்கு நம் **மனம் எண்ணுகின்றது.**

"தேவ யானையே திருந்திழை உமையவள் ஆமால்"

எனும் வாயுசங்கிதையை, பக்தியொடு **வாய் பாடுகின்றது.** கிழக்கு நோக்கி யிருக்கும் இம் மூர்த்தங்களை, இறைஞ்சுகிருேம், இன்புறுகிருேம்.

அதே மண்டபத்தில், தெற்கு நோக்கி யிருக்கும் பள்ளி யறையையும் பார்க்கிருேம். கம்பீரமான இவைகளைக் கண்டு களித்தபின், அங்குள்ள புனித

வாயிலுள் புக எண்ணுகிறோம். வாயிலில் ஒரு திரு வாசி. அது, மெய் சிலிர்க்கச் செய்து வித்தக விநயத்தை விளைவிக்கிறது. அதனுள் நுழைந்ததும், அங்கும் ஒரு மண்டபம். அதையும் கடந்துளது கர்ப்பக்கிருகம்.

## தேவி சந்நிதி

கர்ப்பக் கிருகத்தில், நலம்தரும் ஸ்ரீ வேத நாயகி யார், குதூகலமான புன்னகையுடன், அகில உலகிற் கும் நான் அன்னை என்னும் இன்ப அற்புத கோலத் தில் எழுந்தருளி யிருக்கிறார். எந்தக் கோயில்களி லும், பெரும்பான்மை, தேவ தேவனுக்கு இடப்புறத் தில், தேவி எழுந்தருளி யிருப்பது வழக்கம்.

அவைகட்கு மாறாக, மதுரையில் ஸ்ரீ மீனாட்சி யார், எம்மான் ஸ்ரீ சுந்தரேசர்க்கு வலப்புறத்தில் எழுந்தருளி யிருக்கிறார். அதுபோல் திருவாதவூரி லும், ஸ்ரீ வேதநாயகரது வலப்புறத்தில், கோமளை யான ஸ்ரீ ஆரண வல்லியார் கோயில் கொண்டிருக் கிறார்.

இப்படியிருக்கும் தலங்களில், ஆக்கம் சக்திக்கு அதிகம் என்று அருள் நூற்கள் அறிவிக்கின்றன. ஊக்கமுடன் எவ்வளவு நேரம் நோக்கினாலும், ஆரண வல்லியார் சந்நிதியை விட்டு அகல மனம் வருவ தில்லை. இஷ்ட சித்திகளைத் தரும் அத் தேவியை, பார்த்து இறைஞ்சியவர்களே பாக்கியசாலிகள்.

அம்பா! அம்பிகே! கன்ம நெருக்கடியில் கலங்கு கின்ற எங்களை, விமல தேவீ! வேதநாயகீ! இனிய உன் அருள் நிழலில் என்று இடுவையோ தாயே!

என்று, விம்மி நம் உள்ளம் வேண்டுகின்றது. ககன வடிவியைக் கைகுவித்து வணங்குகிறோம். அதன் பின், புனித சந்நிதியி லிருந்து புறப்படுகிறோம்.

## மேற்குப் பிராகாரம்

வலம் வரும் நினைவில், மேலும் செல்கிறோம். அருமையான மேற்குப் பிராகாரம் ஆரம்பம் ஆகிறது.

## ஸ்ரீ காளீசர் சந்நிதி

அங்கு, காளீசர் சந்நிதி முதலில் காட்சியாகிறது. மதியை மகிழ்விக்கிறது. அங்கும் உளது ஒரு மண்டபம். சம்பிரதாயப்படி, அதனில் இருக்கும் இடபதேவர் சந்நிதியை நோக்குகிறோர். காலம் பல கண்ட ஏரம்ப கணபதி, இன்ப வாழ்விற்கு இது இடம் என்பார்போல், இனிது கிழக்கு நோக்கி யிருக்கிறார். வாய்மை மிக வணங்கி, புனித வாயிலுக்குள் புகுகிறோம். ஆரம்பம் அர்த்த மண்டபம். அதையும் கடந்த கருப்பக்கிருகத்துள், எம்மை யாளும் ஸ்ரீ காளீசர் எழுந்தருளி யிருக்கிறார். ஸ்ரீ காளி தேவிக்கு அருளிய அம் மூர்த்தி, **வழிபடுவார்க்கு வாழ்வுண்டு** என்பதை யறிவிக்கும் வரதர். கூடாகிய உடலில் குடியிருக்கும் எளியேற்கு, **இதைவிட வேறு பணி ஏது பிரபு!** என்று ஏத்துகிறோம்; இறைஞ்சுகிறோம்.

ஸ்ரீ காளீசர் இன்ப சந்நிதியில் இருந்து, மேற்குப் பிராகாரத்தை விரிவுபடுத்த, நலம் சிறந்த திருப்பணி இன்று நடைபெற்று வருகிறது.

## வடக்குப் பிராகாரம்

வடக்குப் பிராகாரம் முழுதும் நந்தவனம். இனிய காட்சிதரும் அது, மூன்று பகுதிகளாக இருக்கிறது.

ஒன்று, நடுமண்டலம்–கோரக்கன் செட்டியாருடைய உறவினர்தம் உபயம்.

அடுத்தது, கீழைப்பூங்குடி—கண்ணப்ப செட்டியார் உறவினர்தம் உபயம்.

அதற்கு அடுத்தது, திருக்கோயில் தல ஓதுவார் யாழ்கீத சுந்தரம் பிள்ளையின் உபயம் என்று அறிகிறோம்.

வலம் வரும் நாம், முன் கண்ட கிழக்குப் பிராகாரத்திற்கே வருகிறோம்.

## உள் பிராகாரம்

துவஜ ஸ்தம்பம், பலிபீடம் முதலியவற்றைச் சேவித்து, உள் பிராகாரத்துள் புக முயல்கிறோம். வாயிலின் வெளியில், துவார விநாயகர், இன்ப முதல்வர் ஆக இருக்கிறார். அவர் முன், குண்டலினியின் கோலமான உயர்ந்த பெருச்சாளி ஊர்தியும், இருபுறத்தில் நாக லிங்கங்களும் இருக்கின்றன.

புற வழிபாடும், யோக முகமான உள்ளீடும் இருந்தால், ஞானப் பிள்ளையாகி ஞாலத்தில் வாழலாம் என்று உபதேசிப்பதுபோல் இருக்கிறது, அரிய அவர் திருவுருவம். கல்லான நம் மனம் கரைகிறது. கை குவித்து வணங்குகிறோம். வாழ்த்து

கிறோம்; வாயிலுள் நுழைகிறோம். அதனுள்ளும் நாலு பிராகாரங்கள் அமைந்திருக்கின்றன என்று அறிகிறோம்.

## பேருன கிழக்குப் பிராகாரம்


உள் வாயிலின் தென்புறமாகத் திரும்புகிறோம். முதன்மைக் கிழக்குப் பிராகாரத்தின் முதலில், சூரிய மூர்த்தி மேற்கு நோக்கி எழுந்தருளி யிருக்கிறார். பொன் தொடி; பொன் கேசம்; பொன் மேனி; பொற்கமல மலர் போன்ற முக்கண் உடையவர், முதன்மை **ஞாயிறு மூர்த்தி** எனும் சாந்தோக்ய உபநிடதம், இங்கு நம் நினைவில் எழுந்து நிற்கிறது.

> "அருக்கன் பாதம் வணங்குவர் அந்தியில்
> அருக்கன் ஆவான் அரன்உரு அல்லனோ
> இருக்கு நான்மறை யீசனையே தொழும்
> கருத்தினை நினையார் கல் மனவரே"

எனும் மாபெரும் தமிழ் மறையை, பக்தியொடு இங்கு நம் வாய் பாடுகிறது.

தென் கிழக்கில், ஸ்ரீ மாணிக்க வாசகர் புதிய உற்சவ விக்ரகம், மேற்கு நோக்கி இருக்கிறது. இவர் புனித கோவணம் பூண்டு, நிமிர்ந்து கம்பீரமாக நிற்கிறார். இவர் திருக்கரத்தில், திருவாசகச் சுவடி யிருக்கிறது. துறவை நினைவுறுத்தும் தூய திருமேனி, அன்பின் அடையாளம் எனலை அறிவிக்கின்றது. அவரை யடுத்துளது மடைப்பள்ளி.

கிழக்குப் பிராகார வட கோடியில் யாக சாலைகள்; அதை யடுத்து சனீஸ்வரரும், அவரை யடுத்து சந்திர மூர்த்தியும் எழுந்தருளி யிருக்கின்றனர்.



ஆறுகால் பீடம்

## தெற்குப் பிராகாரம்

தெற்குப் பிராகார ஆரம்பத்தில் (store room) வெஞ்சன அறை, கிழக்கு நோக்கி யிருக்கிறது. தேவஸ்தான ஆபீஸ், மேற்கு நோக்கி யிருக்கிறது.

இந்தப் பிராகாரத்தி லிருந்து, ஸ்ரீ ஆரணவல்லி யார் சந்நிதிக்குச் செல்லவும் வாயில் ஒன்று இருக்கிறது.

மேலும் இப்பிராகார நடுவில், தெற்கு நோக்கிய எடுப்பான ஒரு மேடை யிருக்கின்றது. அதன் மேல் உளது ஆறுகால் மண்டபம். சிற்பிகளின், மதி நுட்பத்தை, இம்மண்டபக் கொடுங்கைகள் சிந்திக்கச் செய்கின்றன. என்ன செய்யலாம்? இன்றைய நிலையில், அதுவும் இடிந்து நிற்கிறது.

மேடைமேல் ஏறுகிறோம். அங்கிருக்கும் அநுக்ஞை விநாயகர் திருமுன் குட்டிக்கொள்கிறோம்; தோப்புக் கரணம் போடுகிறோம்; மண்டபத்தின் வழியாக ஸ்ரீ நடராஜரையும், திருமறை நாயகரையும் சேவிக்கவும் அமைந்துள்ள வழி அது.

தெற்குப் பிராகாரக் கோடியில் ஸ்ரீ தட்சிணாமூர்த்தி யிருக்கிறார். மூல முதலான அந்த மௌன தேசிகரை, நினையாமல் நினைந்து நெஞ்சம் நெகிழ்கிறது.

## மேற்குப் பிராகாரம்

தூய சுற்று மண்டபம், இங்கிருந்து தொடங்குகிறது. ஆரம்பத்தில், கிழக்கு நோக்கிய கணபதி.

அவரை யடுத்து, ஸ்ரீவிசாலாட்சி சமேத ஸ்ரீகாசி விஸ்வநாதர்; ஸ்ரீ விஸ்வ நாதர்க்கு அண்மையில் இடப தேவரும், சண்டேஸ்வரரும் இருக்கின்றனர்.

அவர்களை அடுத்து, உற்சவரைக் கொணர்ந்து வைக்கும் அறை.

ஸ்ரீ கணபதி, ஸ்ரீ விஸ்வநாதர், உற்சவர் மூவர்க்கும் எதிரில் இருக்கிறது திருமண மண்டபம்.

மேற்படி பிராகாரத்தில், ஸ்ரீ மாணிக்க வாசகருடைய மூலஸ்தானம் கிழக்கு நோக்கி யிருக்கிறது. இங்கு எழுந்தருளிய மூர்த்தம், எத்தலத்தும் காணாத மிக அற்புதமான தோற்றம். பிராகாரத்தில் இது தனிச் சந்நிதி.

இந்தப் பிராகார நடுவில், லிங்கோற்பவர் மேற்கு நோக்கி யிருக்கிறார்.

பிராகார வட மேற்கில், ஸ்ரீ வள்ளி தெய்வயானை சமேதராய், மயிலேறி வேல் ஏந்திய மூலவரான ஸ்ரீ சுப்ரமண்யர் திருக்கோலம், எவ்வளவு நேரம் தரிசித்தாலும் மனம் சலிப்பதில்லை. அவ்வளவு அற்புதமான தோற்றம்.

அடுத்து சண்டிகேஸ்வரர் தியான கோலத்தில் இருப்பதை அறிகிறோம். அவரைப் பார்த்து வணங்குகிறோம். பேருன பயபக்தி பிறக்கிறது.

## வடக்குப் பிராகாரம்

வடக்கில் உள்ள சுற்று மண்டபத்தில், பழைய வாகனங்கள் பல இருக்கின்றன. இப்பிராகாரத்தில் மூலவரான ஸ்ரீ நடராஜர், ஸ்ரீ சிவகாமியார், வியாக்,

கிரபாதர், பதஞ்சலி முனிவருடன் இனிய திருக் கோலத்தில் எழுந்தருளி யிருக்கிருர். இது தனிக் கோயில். ஸ்ரீ மாணிக்க வாசகர், ஸ்ரீ சுப்ரமண்யரும் இங்கு எழுந்தருளி யிருக்கின்றனர்.

வடக்குப் பிராகார இறுதியில், இனிய திருவுரு வம்கொண்டு பயிரவர் எழுந்தருளி யிருக்கிருர். பழையபடி கிழக்குப் பிராகாரத்திற்கே வருகிருேம்.

## மூலவர் சந்நிதி

சிறந்த மூலவர் சந்நிதிக்கு நுழைய, சித்தமாகி ருேம். ஆரம்பத்தில் கொடிமரம், பலிபீடம், இடப தேவர். இம் மூன்றும், பதினறு கால் மண்டபத்தில் இருக்கப் பார்க்கிருேம். இத்தலத்தில் வழிபட்ட ஸ்ரீ ஆஞ்சநேயர், ஸ்ரீ மாணிக்க வாசகர் முதலிஞேர் திருவுருவங்களை, தூண்களில் செதுக்கி யிருக்கும் அருமையே அருமை.

இனி, புனித திருமறை நாதரை சேவிக்கப் புறப்படுகிருேம். எடுப்பான ஒரு மேடைமேல், சோமவார மண்டபம் இருக்கிறது. கார்த்திகை கடைசி வாரத்தில், வேத நாயகர்க்கு, இம்மண்டபத் தில், நலம் பெருக சங்காபிஷேகம் நடைபெறும்.

இந்த மண்டபத்தின் ஒரு முனையில், மிகப் பழைய கபில விநாயகரைப் பார்க்கிருேம். கபில முனிவரையும் காண்கிருேம். அவர்கட்கு எதிரில், கபில தீர்த்தம் இருக்கிறது. இதுதான் அபிஷேக தீர்த்தம்.

மண்டபத்தின் மற்று ஒரு முனையில், முருகப் பரமன் இனிய தம் தேவியருடன் எழுந்தருளி யிருக்

கிறுர். மாபெரும் வாயிலைச் சார்ந்த மதில்களில் எழுதியிருக்கும் திருவாசக திருவெம்பாவைப் பகுதிகள், தேனினும் இனித்து, ஊனையும் உருக்கும் திறத்தன.

வாயிலுள் நுழைந்ததும், மகிழ்வைத் தருகிறது அங்குள்ள மகா மண்டபம்.

## உற்சவ மூர்த்திகள்

ஆரம்பத்தில் ஸ்ரீ ஆரணவல்லியார்; திருமறை நாதர்; சோமாஸ்கந்தர் போலவும் காட்சிதரும் உற்சவ விக்ரகங்கள்.

தேவியின் திருமுன், அஸ்திர தேவர் எனும் முத்தலைச் சூலம்.

அதை அடுத்து, ஸ்ரீ மாணிக்க வாசகருடைய பழைய உற்சவத் திருவுருவம்; இவர் முழங்காலுக்கு மேல் ஆடையர்; குழைந்த திருமேனி கொண்டவர்.

அவரை யடுத்து, விநாயகர்; ஸ்ரீ தேவயானையாருடன் ஸ்ரீ சிவ சுப்ரமண்யர்; தனியாக வேல்படை; சண்டேஸ்வரர்.

தேவியுடன் பிரதோஷ சந்திரசேகரர்; ஊடல் உற்சவத்தில் வரும் சுந்தரர்; பிடாரி.

இவ்வளவு மூர்த்தங்களும், எடுப்பான விமானத்துள், கிழக்கு நோக்கி இருத்தலை யறிகிறோம்.

இதே மண்டபத்தில் ஸ்ரீ சிற்சபேசர், தேவியுடன், உற்சவ மூர்த்தியாகத் தெற்கு நோக்கி இருப்பதையும் கண்டு இறைஞ்சுகிறோம்.



ஸ்ரீ மாணிக்க வாசகரே அமைத்த நுட்ப வேலைப்பாடுடைய நூற்றுக்கால் மண்டபம்
(பக்கம் 6)



பயிரவ தீர்த்தமும், மாபெரும் தல விருட்சமான மகிழ மரமும் (பக்கம் 6)

அவர்க்கு இடப்புறத்தில், பாத்திரங்கள் வைத்திருக்கும் அறை இருக்கிறது. வலப்புறத்தில், (நகைக ளிருக்கும்) கருவூலம்.

பிரதோஷ வெள்ளிவிடை வாகனம், வெள்ளி விமானத்துள், மேற்கு நோக்கியபடி களங்கமற்ற தன் கோலத்தைக் காட்டிக்கொண் டிருக்கின்றது.

மண்டபத்தில் ஒரு உண்டி வைக்கப்பட்டிருக்கிறது. தரிசனத்திற்கு வருகிறவர்கள், தமது அன்பின் காணிக்கையை அதில் சமர்ப்பிக்கிருர்கள்.

இவ்வளவையும் கண்டபின், மூலவரையே நோக்கி யிருக்கும் பயனுர்ந்த விடைத் தேவரையும், பலிபீடத்தையும் பார்க்கிருேம்.

வளமார்ந்த சந்நிதி வாயிலில் நிற்கும் இரண்டு துவார பாலகர்களின் அற்புத சிற்ப கோலத்தை, என்றும் எவராலும் மறக்கவே முடிவதில்லை.

இருக்கும் துவார பாலர்க்கு இடத்தில் ஆநந்த கணபதி; வலப்புறத்தில் முருகன்; சிறக்க இவர்களைச் சேவிக்கிருேம். வாயில் வழியே புனித அர்த்த மண்டபத்தில் புகுகிருேம். அம் மண்டபத்தையும் கடந்திருக்கிறது கர்ப்பக் கிருகம்.

## திருமறை நாயகர்

மூலவர், வாயு தேவர் பூசித்த மூர்த்தி; வேதம் வழிபட்ட விமலர்; ஆத்ம நாதர்; பிராணநாதர்; ஜீவநாதர்; வாதபுரீசர் என்னும் திருநாமம் பல தாங்கி, இன்ப கர்ப்பக் கிருகத்தில் எழுந்தருளி யிருக்கிருர். அவர்க்கு அண்மையில் ஸ்ரீ ஆரண வல்லியார், தவக்கோலத்தில் அமர்ந்திருக்கிருர்.

ஏதமிலாத வேதங்களை, ஓதினவர்கள் சிலர்; அவைகளின் பெயர்களை அறிந்தவர்கட்கோ அளவில்லை. ஓதினரும் அறிந்தவரும் சிறந்தவர்கள்; அவர்களைவிட, அவைகளை உணர்ந்தவரே உயர்ந்தோர். விமலன் வேத சொருபமாக விளங்குகின்றான். திருவாதவூர் மூலஸ்தானத்தில், கனிந்த தன் சொருபத்தையும் காட்டுகின்றான்.

வாழ்விக்கும் இப்பெருமானை வழிபடுவார்க்கே வேத ஜீவன் விளங்கும்; ஞான யோகம் சித்திக்கும்; இம்மைப் பயனும் மறுமைப் பேறும் விளைவது திண்ணம். இறைவரோ வேத நாதர்; தேவியோ ஆரணவல்லி. இந்த அற்புதத்தை எண்ணியே, அகில உலகமும் மாபெரும் திருவாதவூரை மனனம் செய்கின்றன. அருங்கலை நுணுக்கம் அறிய வேண்டினோர், வாதவூர்க்கு வருவர். சிறக்கத் திருப்பணி செய்வர். வழிபாட்டு வகையில், அகம் புறம் இரண்டையும் அர்ப்பணம் செய்வர். அதன் பின், ஆன்ம நாதர் உபதேசம் அருமையா யிருக்கும்; இது, அன்றும் இன்றும் என்றும் அனுபவம்.

## திருவடி நிலைகள்

திருமறை நாதர்க்கு வலப்புறத்தில், திருப்பள்ளியறைக்குச் செல்லும் திருவடி நிலைகள் (பாதுகைகள்,) இருக்கின்றன. மதுரையிலும், திருவாதவூரிலும் பள்ளி யறைக்குச் செல்வது பாதுகைகள் தான். நான் எனது அற்ற பரிபூரண ஞானமே திருவடி. வேதமே பாதுகை. திருவடித் தியானம் சித்தித்தால், வேத நுட்பம் விளங்கும்; சிவபோகம் சேரும்; அரிய இது இத்தலத்தின் அனுபவம்.

## தீர்த்தங்கள்

இத்தலத்தில் சிவதீர்த்தம், விஷ்ணு தீர்த்தம், பிரம தீர்த்தம், வாயு தீர்த்தம், அக்னி தீர்த்தம், பயிரவ தீர்த்தம், கபில தீர்த்தம் என ஏழு தீர்த்தங்கள் இருக்கின்றன.

## ஸ்ரீ மாணிக்க வாசகர் தனிக்கோயில்

இது, ஆத்மநாதர் ஆலயத்திற்குத் தெற்கே, இரண்டு பர்லாங்கு தூரத்தில் இருக்கிறது. ஆதியில் இங்கு அவர் திரு மாளிகை இருந்தது. ஏக வேகம் படும் காலப் போக்கில், அது இடிந்தது. வியன் மிகுந்த அந்த இடம், இன்று வெட்டவெளியாகி யிருக்கிறது.

ஊருள் இருந்த பிரமுகர்கள், ஒன்று சேர்ந்தனர். மூண்டு முயன்றனர். அந்த இடத்தில், மாணிக்க வாசகர்க்கு என்று ஒரு தனி ஆலயத்தை அமைத்தனர். 1934-ல் குடமுழுக்கு விழாக் கொண்டாடினர். இச் செய்திகளை எவரும் அறிவர்.

இது, சாலையின் கீழ்ப்பக்கம் கிழக்கு நோக்கிய சந்நிதி; சிறிய மதில்களும், ஒரு சிறு விமானமும் கொண்டது. தெய்வக் கர்ப்பக் கிருகத்தில் மாணிக்க வாசகர் திருவுருவம், அதி சுந்தரமாக அமைந்திருக்கின்றது. திருக்கோயில் வெளிப்புறத்தில், விநாயகரும் ஸ்கந்தரும் எழுந்தருளி யிருக்கின்றனர்.

மாணிக்க வாசகருடைய முன்னோர்கள், **மானமங்கலம்** என்னும் ஊரில் இருந்து, இங்கு வந்து குடியேறினர்.

"மன்னும் இந் நகரிதன்னுள் மானமங் கலத்தார் ஆகும்
தொன்னெறி முனிவராம் ஆமாத்தியர் தொழுகுலத்து
நன்னெறி விடையிற் போந்தோர் நன்கணத் தலைவர்நாமம்
இன்னெறி வாதவூரர் என்னவந் துதயம் செய்தார்"

எனவரும் பழைய திரு விளையாடலிலும், இவ் வர லாற்றைப் பார்க்கிறோம்.

சிவகணங்களில் ஒருவர் மாணிக்கவாசகர்; அவர் திருநந்தி தேவர் திருவவதாரம் என்றெல்லாம், அவர் வரலாற்றை உவந்து புராணங்கள் உரைக்கின்றன.

## சங்ககால கபிலர்

பயன்தரும் கடைச் சங்கப் பாடல்களில், பெரும் பகுதி பாடியவர்; உத்தம பாரியின் உயிர் நண்பர்; குறிஞ்சித் திணை பாடுவதில், தமக்கு ஒப்பானவரும் மிக்கானவரும் இல்லாதவர்; இப் படிப் புலவர் உலகம் புகழ்ந்து போற்றும் கபிலர் தோன்றிய பெருமையையும் உடையது, வளம் சிறந்த இந்த வாதவூர்.

"நீதிமா மதூக நீழல் நெட்டிலை இருப்பை என்றோர்
காதல்கூர் பனுவல் பாடும் கபிலனார் பிறந்த மூதூர்
.... .... .... .... .... .... ....
வேத நாயகனார் வாழும் வியன்திரு வாத வூரால்"

எனும் பாடலால், கபிலர் அவதரித்த பழம்பதி இது என்று காண்கிறோம்.

காலம் பல கண்ட தலம் என்பதுடன், கபி லரைப்போல், மாணிக்க வாசகரைப் போல், பாக்கள் பொழியும் மேலோர் அவதரித்த பழந்தலம் ஆகவும் இருந்து வருகிறது இவ்வூர்.

அந்தக் கபிலர் பெயரையும் நினைவூட்டுகின்றது, கோயிலில் உள்ள கபில தீர்த்தம்; இவ்விதம் எல்லாம் எண்ணி இன்புறுகிறது நம் இதயம்.

இப்படி யெல்லாம் இருக்கும் அருமைச் செல்வங்களை அனுபவியாமல், மாணிக்க வாசகர் யாருடைய அவதாரம்? தேவாரம் பாடிய மூவர் முதலிகட்கும் முற்பட்டவரா? பிற்பட்டவரா? என்று விறுவிறுத்து விளையும் விவாதங்கள், மணிவாசகருடைய நியதியையும் தொன்மையையுமே நினைவூட்டுகின்றன.

வீண்வாதம் வேண்டா! திருவாசக அன்புக் கடலில் திளைமின்கள்; திருக்கோவையார் என்னும் திருவருள் கடலில் ஆழ்ந்து இன்பம் அனுபவியுங்கள் என்று சமிக்ஞை காட்டும் திருவாதவூர், ஏதமற்ற வேதவூராக நின்று என்றும் நிலவுகின்றது.

வேத ஆதாரம், பிராண ஆதாரம், ஜீவ ஆதாரமாக இருந்து, அகில உலகிற்கும் வாழ வழி காட்டும் புனிதமான இத் திருப்பதியில், வழிபட்டுப் பேறு பெற்ற பெருமக்கள் வரலாற்றையும், இனி எண்ணுவது இன்பு தரும்.

உ

சிவமயம்

# திருவாதவூர் மகாத்மியம்

பயன்தரும் புராணங்கள் பதினெட்டு. பெரிதும் உதவும் அவைகளுள் ஒன்று, பிரம கைவர்த்தம். மாபெரும் அதனுள் ஒரு பகுதி, திருவாதவூர்ப் பிர பாவம். வானவர் இதனை மனனம் செய்துளர். ஆலாஸ்ய மகாத்மியம் சொன்ன அகத்தியர் பெருமான், அரும்பெரும் தவசிகட்கு, வாதவூர்ச் சிறப்பை விரிவாக எடுத்து விளக்கினர் என்று புகல்கிறது அப் புராணம்.

சொல்லால் வரும் குற்றம்; சிந்தனையால் வரும் தீங்கு; பார்வையால் வரும் பாவம் முதலியன. சிறந்த இப் புராண சிரவணத்தால் தீரும். ஆதலின், சுருக்கமாக இது இங்குச் சொல்லப் பெறுகிறது.

## 1. வரத நாரணர்

மானம் சிறந்தவர் வானவர். செய்த புண்ணியத்தால் சிறந்தனர். நினைத்தவை அனைத்தும் அவர்கட்கு நிறைவேறின. அதைக் கண்டனர் அசுர கண்டகர்.

பொறுமையால் புழுங்கினர். சூழ்ச்சி பல செய்தனர். மங்கையர் பலரைப் பங்கம் செய்தனர். காம தேநுவைக் கவர்ந்தனர். பொன்னுட்டைப் பல இடங்களில் பொசுக்கினர். அலறினர் அமரர்.

வாதம் வளர்ந்தது. மோதல் எழுந்தது. வான வரும் தானவரும் கட்டிப் புரண்டனர். கடும்போர் செய்தனர். அசுர ஆவேசம் அதிகரித்தது.

புனித தேவர்கள் புறங்காட்டி ஓடினர். தொடர்ந்து அசுரர் துரத்தினர். பலரைப் பற்றினர். விலங்கிட்டனர். கடும் தண்டம் செய்தனர். கண் கலங்கியது கற்பக நாடு.

உயிர் பிழைத்த உம்பர் சிலர், வைகுந்தம் சென் றனர். அச்சுதரைச் சரணம் அடைந்தனர். கதறி அழுதனர். நடந்தது கூறி நடுங்கினர்.

அஞ்சவேண்டா. அசுர வேகத்தை அடக்குவம் என்று, ஆறுதல் கூறித் திருமால் அபயம் அளித் தார்.

அதனை அசுரர் அறிந்தனர். சீறி எழுந்தனர். செறுத்து எதிர்த்தனர். கருடன்மேல் அமர்ந்த மாதவர், அவர்களுடன் கடும்போர் செய்தார். பல காலம் நிகழ்ந்தது பயங்கர யுத்தம். அப்போரில், அசுரர் பலர் அழிந்தனர்.

அவுணர் தலைவர்கள் அஞ்சி ஓடினர். தூய மாதவர் தொடர்ந்து துரத்தினர்.

பெருந்தவ சிரேட்டர் **பிருகு முனிவர்**. கற்பு மிக்க அவர் தேவியின் பெயர் **காவ்ய மாதா**. அவர் கள் வழி வந்தவர் **சுக்ரர்**. அந்த சுக்கிரர் அசுர குரு.

அவரைச் சரண்புக அவுணர்கள் வந்த அமயம், அசுர குருவும் அங்கு இல்லை. பிருகு முனிவரும் வெளியிற் சென்றுளர். காவ்ய மாதா தனித்திருக் கிறார்.

அடைக்கலம் அம்மா! அடைக்கலம் என்று அலறியபடி, ஆஸ்ரமத்துள் நுழைந்தனர் அவுணர்கள். விதிர்விதிர்த்தனர். விவரம் கூறினர். அதே சமயம் விஷ்ணுவும் வந்தார். தலையான அவுணர்களை, பிருகு பத்தினி, ஒரு அறையில் தள்ளித் தாளிட்டாள். வந்த திருமாலையும் வரவேற்றாள்.

அம்மா! வெளியில் அவுணர்களை விடு என்று, வெடுவெடுத்தார் திருமால்.

அவர்கள் அதிகம் அஞ்சியுளர்; அடைக்கலம் ஆயினர். கதியற்று வந்தாரைக் காப்பது என் கடன். என் கணவரும் இல்லை. சுக்ரனும் எங்கோ போயுளன். என் வழிபாட்டை ஏற்றுக்கொள்ளும்! உருளும்படித் தலைகளைச் சிதறும் உக்ரத்தை விட்டு விடும்! என்று, கனிந்து வேண்டினள் காவ்ய மாதா.

அம்மா! விஷம் நிறைந்த பாம்புகளை விட்டுவிடக் கூடாது. பதுங்கினர் இன்று, தர்ம சீலர்களை அழிக்க, நாளை அவர்கள் பாய்வது திண்ணம். இப்படியே கால அனுபவம் பல கண்டிருக்கிறேன். அதர்மமே அவுண மதம். அவர்களை விட்டு வைப்பது தர்ம விரோதம். பாவமும் இல்லை; இவர்கள் அழிவால் பழியும் இல்லை; இத்தகையவரை நீர் பாதுகாப்பதுதான் உமக்குப் பாவம் என்று, தெளிய உரைத்தார் திருமால்.

எத்தனை சொல்லியும், பிருகு பத்தினி இடம் தரவில்லை.

ஆத்திரம் திருமாலுக்கு அதிகரித்தது. எடுத்து ஆழியை ஏவினர். ஆக்ரமித்துச் சென்ற சக்கரம்,

அவள் தலையை அறுத்தது. செறுக்கு மிக்க அவு ணர்களையும் சிதைத்தது.

வளரும் தவத்துப் பிருகு முனிவர், அதே சமயம் வந்தார். மனையாளின் உடலும் தலையும் உருண் டதை உணர்ந்தார். குருதி வெள்ளம் குமிழியிட, இமையவர் விரோதிகளும் இறந்து கிடந்தனர்.

கதியில்லை வேறு என்று வந்தாரைக் காத்தாள். அதற்காகத் திருமால், இவள் தலையை அறுத்தார் என்பதை, ஒரு நொடியில் உணர்ந்தார். கொள்ளித் தேள் போலக் குதித்தார்.

ஆழி மாயா! கடமையைச் செய்தவளின் கழுத்தை அறுத்தாய்! மனையாளை யிழந்தேன்! என் இல்லற நல்லறம் என்ன ஆவது? என் வயிறு எரிகிறதே!

இடிப்பிற்கு உரிய பல பிறவி எடுப்பாயாக! ஒரு பிறப்பில், உரிய தேவியை இழந்து, வெந்து மனம் நொந்து நீ வேதனை யடைக என்று, கொதித் துச் சாபம் கொடுத்தார்.

பரந்தாமன் திருவுளம், அது கேட்டுப் படபடத் தது. அங்கு மேலும் இருக்க நாணினர். அங்கிருந்து அகன்றார். பொல்லாங்கு செய்வார்க்குப் புகலளித் தாள் ஒருத்தி. தர்மம் வாழ அவளைத் தண்டித்தேன். பெற்ற பயன் சாபம். என்ன இது? என்று, எண்ணிப் பல காலம் ஏங்கினர்.

அச்சுதா! அயர்வை விடு! தெளிவு மிகுந்தது தென்னாடு. அங்குளது சம்யாக வனம். சிறந்த அத் தலத்தில், சிவத்தை நோக்கித் தவம் செய்!

தர்ம சங்கடமான வாழ்க்கையில், தளர்வு பிறப்பிக்கும் குரூர சாப வேகம் குறையும் என்று, ஆதரவு காட்டியது அசரீரி.

மகிழ்ந்தது திருமால் மனம். புனித அப்பதி நோக்கி அப்போதே புறப்பட்டார். களங்கம் அற்ற அத் தலத்தைக் கண்டார். அங்கு சிறக்க இருந்தது ஒரு சிவ தீர்த்தம்.

நாராயணன் என்பது தனது நாமம். (நாரம்—நீர்; அயநம்—இருப்பிடம்;) நியதியான அதை நினைந்தார். பொய்கை நீரில் புகுந்தார். அதன் மயமே ஆயினர்.

செந்தாமரை, வெண் தாமரை, கருங்குவளை முதலியன, மலர்ந்து பொய்கையில் மணம் கமழ்கின்றன. தன் நிலைக்குப் பங்கம் இன்றி, நீர் வடிவாகித் திருமால் இப்படி நெடுங்காலம் தவம் செய்தார்.

ஆயிர இதழ்க் கமலம் ஒன்று, பொய்கை நடுவில் ஒரு நாள் பூத்தது. அதைத் திருமால் அறிந்தார்.

வனப்பு மிகுந்த பசு ஒன்று, மற்றொரு நாள் வந்தது. இனிய பொய்கையில் இறங்கியது. ஆயிர இதழ்க் கமலத்தை அணுகியது. அதன்மேல் புனித பாலைப் பொழிந்தது. அதன் பின், மாபெரும் பசு மறைந்தது. அதையும் அறிந்தார் அச்சுதர். பெருகும் வியப்புப் பிறந்தது.

என்ன ஆச்சரியம்! என்னை யறியாது, இக் கமலம் எப்படி எழுந்தது? இன்று வந்த மாபெரும் பசுவும் மறைந்ததே. இந்தத் தாமரையில் என்ன

விசேடம்? எப்படியும் இதை அறிய வேண்டும் என்று எண்ணினர். அரிய கமலத்தை அணுகினர்.

மாயமாய் அக் கமலம் மறைந்தது; அங்கு ஒரு சுயம்பு லிங்கம் எழுந்தது.

வைகுந்தர் வியந்தார். விதிர்த்தது மேனி. வீழ்ந்து வணங்கினர். அருவியெனப் பெருகியது ஆநந்தக் கண்ணீர். என்னை யேற்க எம்பெருமானே! இங்கு எழுந்தருள எண்ணியதோ நின் திருவுள்ளம்! இப்படிப் பலபடத் துதித்துப் பாடினர். அதன்பின் இலிங்கத்தை, அகத்தாலும் புறத்தாலும் ஆராதிக்க லாயினர். இடையில், உருண்டு பல நாள்கள் ஓடின.

ஒருநாள், அருவுருவமான அந்த இலிங்கத்தில் இருந்து, இன்ப சதாசிவம் எழுந்தது. திருமால் திருமுடியில் திருக்கரம் வைத்து, சிறந்த தீக்கையும் செய்தது. உரிய முறைப்படி, ஐந்து எழுத்தை உபதேசித்தது. அதன்பின், மாபெரும் இலிங்கத்தில் மறைந்தது. இருந்த பொய்கையும் கரந்தது. அந்த இடம் ஒரு தலமாக அமைந்தது.

கண்டார் திருமால். களித்தது மனம். அங்கே சிறக்கத் திருப்பணிகள் செய்ய நினைத்தார். அரிய மண்டபங்களை அமைத்தார். வகையாகப் பிராகாரங்களை வகுத்தார். சிவாகம விதிப்படி சிவ பூஜை செய்தார். அந்நிலையில், **வேதாஹம்** என்ற நாதம், இனிய இலிங்கத்தில் இருந்து எழுந்தது.

**வேதமே நாம்** என்பது, அதன் வியஞர்ந்த பொருள். உணர்ந்தார் மாதவர். உவந்தது உள்ளம்

ஓஹோ! மூவா முதல்வர் இவர், வேத சாரமான விமலர். புனித உபநிடதப் பொருளானர் என்று, புந்தி உருகிப் போற்றினர். **வேதநாயகர்** என்று இயைந்த திருநாமம் இட்டார். விமலேக்கு ஒரு திருக் கோயில்; கணபதிக்கு ஒரு ஆலயம்; கந்தர்க்கு ஒரு சினகரம்; தெய்வப் பரிவார தேவதைகட்கு, பயனுன சந்நிதிகள் பல. இப்படி அமைத்தார். வழுத்திப் பல காலம் சிவத்தை வழிபட்டார்.

வேத நாயகியுடன், நாத நாயகர் ஒருநாள் விடைமேல் அமர்ந்து வெளிப்பட்டார். பரமன் திருக்காட்சி கண்ட பரந்தாமர், தன்வசம் கெட்டார்; பரவசப்பட்டார்.

சாம்ப சதாசிவ சாம்ப சதாசிவ சர்வேசா! சகள நிஷ்கள சகள நிஷ்கள ஜகதீசா! தயாநிதே! சந்திர மௌலீ! சடாதரா! கங்காதரா என்று பலபடத் துதித்துப் பாடினர்.

கமலக் கண்ணு! கடும் சாபம் என்ற கலக்கம் விடு; நல்லாரைக் காக்கவும், அல்லாரை அடக்கவும், நீ எடுக்கும் பிறவிகள் இனிது பயன் தரும்.

மூவுலகங்களேயும் இராவணன் முறியடிக்கும் காலத்தில், தசரதன் மைந்தனுய்த் தரணியில் வருவை. மனேவியை இழப்பை என்ற மாதவர் சாபம், அக்காலத்தில், சிலநாள் இருந்து அகலும். அரக்கர் பூண்டை வேரொடு அறுப்பை! அதன் மூலம், புனித உன் புகழை உலகம் போற்றும்.

இங்ஙனம் அருள் செய்து, மூல இலிங்கத்தில் பிரவேசித்தார் முதல்வர். கை குவித்து வணங்கிய

கடல் நிறவண்ணர், புனித அப்பதியில் இருந்து புறப்பட்டார்.

யானை மலைக்கு அணிமையில் உள்ள திருமுகூர் எனும் தெய்வப் பதியில், உலகநலம் உன்னி, மண்மகள், மலர் மகள் இருவர் நடுவில், காளமேகராய், அத் திருமால் இன்றும் எழுந்தருளி இருக்கின்றார்.

## 2. நான்முகர்

அரிய வேத ஆகமங்களால் அறியக் கூடியவர்; ஐந்தொழில் இயற்றும் அத்தர்; மெய்ப்பொருள் இன்ப மேனியர்; முதன்மை வித்தைகட்கு எல்லாம் மூலர்; தகராலய ரகஸ்ய தற்பரர்.

நான்கு வேதங்களை ஓதி உணர்ந்த நான்முகர், இப்படி சிவத்தைப் பல காலம் சிந்தித்தார்.

பிரம தேவனே! வேத புரியில் வழிபாடு செய்! சிறந்த பேறு அங்கு சித்திக்கும் என்று, அருள் முகமாக எழுந்தது அறிவிப்பு.

மலர்மேல் உள்ள பிரமதேவர் மனம் மகிழ்ந்தது. எண்ணுவார்க்கு வழி காட்டும் ஏந்தால்! என்று, சிவத்தை ஏத்திப் போற்றி இறைஞ்சினர்.

சரஸ்வதி, காயத்திரி, சாவித்ரி யெனும் தேவியர் மூவர்; சநகர், சநந்தனர், சநாதனர், சநற்குமாரர் எனும் மக்கள் நால்வர்; வசிட்டர் முதலிய தூய முனிவர்கள் தொடர, புனித அன்ன வாகனர் புறப்பட்டார். வாழ்விக்கும் திருவாதவூர்க்கு வந்தார். சிவதீர்த்தம், விஷ்ணு தீர்த்தங்களில் நியதியொடு

நீராடினர். தன் பெயரால் ஒரு தீர்த்தம் சமைத்தார். உயர்ந்த அகமருடண மந்திரங்களை உருவேற்றினர். வாழ்விக்கும் ஸ்ரீ வேத புரீசரைப் பல காலம் வழி பட்டார்.

ஸ்ரீ ருத்ரம், நமகம், சமகம், புருஷ சூக்தம், பஞ்சப் பிரும்ம மந்திரங்களைப் பாராயணம் செய்தார். ஆயிரத்தெட்டு நாமங்களால் அர்ச்சித்தார்.

அதன் பயனுக, ஒரு தினம், கண்ணுதல் பரமர் காட்சி தந்தனர். ஸ்ரீ வேதவல்லியுடன் எழுந்தருளிய நலம் சிறந்த திருமறை நாயகரை, வீழ்ந்து மகிழ்ந்து வணங்கினர் நான்முகர்; துதிமொழி பல சொல்லித் தொழுதார். மகிழ்ந்தார் திருமறை நாதர்.

நான்முக! வேதபுரமான இவ் வியன்பதி, பெருகிய உன் வழிபாட்டால் பிரமபுரம் எனவும் பெயர் பெறும். சிவ விஷ்ணு பிரம்ம தீர்த்தங்களில் நீராடினேர், பேறு பெரிது பெறுவர். உன் போல் எம்மை உணர்வோர் எவரும், முதலதான முத்தியும் பெறுவர் என்று அருளினர் எம்பெருமான்.

## 3. ஆரணவல்லி தந்த அருள்

**ஆரண கேதகம்** என்பது, ஒரு அருமையான வேள்வி. பேருன அவ்வேள்வி செய்யப் பிரமதேவர் எண்ணினர். திருவாதவூர் ஆலயத் தென்கிழக்கில், அதற்கென்று சாலை அமைத்தார். உத்தம தேவியர் மூவரும், உடனிருந்து அவர்க்கு உதவி செய்தனர். ஆங்கீரஸர், வசிட்டர் ஆதியோர், இன்பத் திசைப் பாலகராக இருந்தனர்.

ஆகவனிய தானத்தில், பிரமதேவர் அமர்ந்தார். மாபெரும் அக்கினியை மந்திரித்தார். எழுப்பிய ஜெபத்துடன் எடுத்தார். உத்தர வேதி என்னும் ஓமத்தில் இட்டார்.

அதன் நடுவில், பயன்தரும் சதாசிவத்தைப் பாவித்தார். ரித்விக்குகள், சிறக்கத் தம் கடனைச் செய்தனர். அரிய வபை ஓமம் ஆனதும், ஒவ்வொரு வர்க்கும் உரிய தட்சிணைகளை உதவினர்.

முதன்மை ஓமம் முடிந்ததும், நலம் சிறந்த அக் கினி நடுவில், கண் குளிர்விக்கும் பசுமை ஒளி யெழுந்து படர்ந்தது. நலம் சிறந்த அதன் நடுவில், உயர்ந்த பீதாம்பரம் உடுத்து, நீலமணி போன்ற நிறங்காட்டி, அணி பல அணிந்து, கதிதரு மதிமுக **அம்பிகை** காட்சி யாயினள்.

பிரமனே! நீ செய்த மாபெரும் வேள்வி கண்டு மகிழ்ந்தோம். யாது வேண்டும் கேள் என்றுள் யாமளை.

தேவ தேவீ! ஆருணகேத வேள்வி நடுவில், கனிவொடு எளியேற்குக் காட்சி தந்தாய்! அரிய இச் செய்தி, என்றும் எவர்க்கும் நினைவில் இருக்க, **ஆரணவல்லி** யென்னும் திருநாமம், எக்காலத்தும் உமக்கு இருப்பதாக! வந்து இங்கு உம்மை வழிபடு வார்க்கு, எண்ணிய அனைத்தும் எய்த அருள்!

மதிமறை நாளும் மதிநிறை நாளும், வாதவூரில் அடியேன் வந்து, வாழ்விக்கும் உம் மலரடிகளை, வழிமுறை உணர்ந்து வந்திக்க அருள் என்று, பெரிது வேண்டினர் பிரமதேவர். தன்னலம் இன்றி

வேண்டும் அதையறிந்த தற்பரி, அங்ஙனேயாக என்று அருளினள்.

அன்று முதல் தேவி, **ஆரணவல்லி** நாமத்தால், என்றும் அறியப் பெறுகிருள். மாதத்தில் இரு நாள், கலைமகள் கணவர், ஒருவரும் அறியாதபடி உருக்கரந்து வந்து, வாதவூர் இறைவரையும் தேவி யையும் இங்கு வழிபடுகின்ருர்.


## 4. கனல் கடவுள்

வேதம் வல்லவர் ஒரு வேதியர். புனிதரான அவர்க்கு ஒரு புதல்வர். அவர் பெயர் அக்கினி. அந்த அருந்தவர் மைந்தரான அக்கினி, செய்தற்கு அரிய பெருந்தவத்தைச் செய்தார். அதன் பயனுக, எண்திசை யதிபரில் ஒருவர் ஆயினர். ஆகவநீயம், காருகபத்தியம், தென்திசை அங்கி என்னும் ஓமத் தீயாகி உயர்கின்ருர்; சமயலுக்கும் தீயாஞர். இவ்வகையில், அக்கினிக்கு இரு சொரூபம் இருக் கிறது.

### சாப தாபம்

பிருகு முனிவர், ஒருநாள் நீராடித் திரும்பி வர நினைத்தார். அருமை மனைவியை அணுகிஞர்.

தேவீ! அழகிற் சிறந்தாய்; அறிவில் உயர்ந் தாய்; இந்த இரண்டும் உடையவர்க்கு, என்றும் உண்டு இடையூறு. மேலும் நீ, இன்று நிறைந்த கர்ப்பிணி. வீட்டைவிட்டு வெளிப்படாதே! எச் சரிக்கையாக இரு என்று உரைத்து, ஆஸ்ரமத்தை விட்டு அகன்ருர்.



திருவாதவூர்த் திருமறை நாயகர் (பக்கம் 17)

**புலோமன்** என்று ஒரு அசுரன், பிருகு ஆஸ்ர மத்துள் நுழைந்தான். **புலோ மாதாவைக்** கண் டான். ஹி ஹி ஹி என்று பல்லிளித்தான். அஞ்சிப் பின் வாங்கினள் அந்த அணங்கு.

புலோமாதா! தெய்வ அழகு, உன்னிடம் திமித நடை யிடுகிறது. தெரிந்தே உன்னை மணக்கத் திட்டம் இட்டேன். வித்தகர் உன் தந்தை. அவரிடம் இது குறித்து விண்ணப்பித்தேன்.

இடையில் என்னை யறியாமல், மாபெரும் முனிவன் பிருகு உன்னை மணந்தான். ஏமாற்றப் பட்டேன். உணவை மறந்தேன். உறக்கம் துறந்தேன். உன்னைக் கவர்ந்து செல்லக் கருதி யிருந்தேன். காலம் வாய்த்தது. வந்தேன். என்னை மறுக்காதே! ஏற்றுக் கொள் என்று இறைஞ்சினன்.

உத்தம மங்கை, அவனுக்கு அஞ்சி ஒதுங்கினள். பயப்படாதே! புலோமாதா! ஒதுங்கிப் போகாதே! உன்னை எடுத்துச் செல்ல, எனக்கு உரிமை உண்டு. கேள் கேள் என்று, குண்டத்தில் இருந்த அக்கினி யைக் குலுக்கினன்.

ஏ மந்திராக்கினியே! இவளை முதலில் விரும் பினவர் யார்? பிருகுவா? நானா? இவள் தந்தை, இவளை எனக்கே தருவன் என்றார். பின் வந்தார் பிருகுமுனி. மாதவன் மொழியில் மயங்கி, அவனுக்கு இவளை மணத்தில் அளித்தார். முதலில் கொடுத்த வாக்கின்படி, எனக்கே உரியள் இவள். பொய்யா மெய்யா நான் புகன்றது? நீயே உலகிற்கு ஒரு சான்று. நினக்கே தெரியும் உண்மை நிலை. நான் புலோமன்; இவள் புலோ மாதா; ஒற்றுமை

பெயரிலும் உளது. இவளைப் பெறும் உரிமை எனக்கு உளதா? இலதா? நீயே சொல் என்றான்.

தேவாக்கினி, அச்த்தியம் சொல்ல அஞ்சியது. வாக்குக் கொடுத்தபடி, உனக்கே உரியவளானாலும், மணந்து வாழ்வாளை நீ மனத்தால் நினைத்தாலும் குற்றங்காண்! இன்று வாழும் இவள், பிருகுவிற்கே உரியவள் என்றது வாய்மைத் தீ.

கொடியன் புலோமன் மனம் கொதித்தது. குரூரமான பன்றியுருக் கொண்டான். கண்டு கலங்கினள் காரிகை. அவளை அகப்படுத்தினான். தூக்கியெடுத்தான்; தோளில் இட்டான். ஓட்டம் பிடித்தான்.

அந்த அதிர்ச்சியில், கலங்கியது கரு. ஒரே குழப்பம். குபுக்கென்று பிறந்தது ஒரு குழந்தை.

என்ன வியப்பு! விழுந்த குழந்தை, அன்னை அலறித் துடிக்க, எடுத்துச் செல்லும் வீணனை நோக்கி விழித்தது. அது, பிரம தேஜஸ் உடையவர் பிள்ளை; ஆதலின், பார்த்த பார்வையால், புலோமன் உடலம் பற்றிக் கொண்டது; அவன் படு சாம்பர் ஆயினன். புலோ மாதா விடுதலை யடைந்தாள். (அச் சிறுவன், எதிர்காலத்தில் **சியவனன்** என்ற பெயரில் சிறப்புற்றான்.)

நீராடித் திரும்பிய பிருகு, ஆஸ்ரமத்தை அடைந்தார். இன்பப் புலோமாதா, அங்கு இல்லை. வியந்தார். ஆஸ்ரமத்தை விட்டு வெளிவந்தார். வாழப் பிறந்த புலோ மாதா, அதே அமயம் வந்தாள்.

எங்கே சென்றிருந்தாய்? என்ருர். புலோமன் தூக்கிச் சென்ற கொடுமையை, புலோ மாதா சொல்லிப் புலம்பினள்.

காத்தது யார் என்ருர்க்கு, தங்கள் கான்முளை தான் என்று, விளைவுகளை ஒன்று விடாமல் எடுத்து உரைத்தாள்.

உண்மையை முனிவர் உணர்ந்து மகிழ்ந்தார். எனினும், வேள்வித் தீயை நோக்கி விழித்தார்.

ஏ அக்கினீ! உள்ளதை நீ அதமனிடம் உரைத்தது ஒரு தவறு, வீணனைத் தடுக்காமல் விட்டுவிட்டதும் பிழை. இதனல், எதையும் பட்சிக்கும் நிலை எய்துக நீ என்று, கடுமையான சாபம் கொடுத்தார்.

முனிவரே! ஒரு பாவமும் அறியேன். புலோமனிடம் பொய் சொல்ல வேண்டும் என்கிறீரா? சத்தியத்தைப் பேசியவனுக்குச் சாபம். நன்ருயுளது இந்த நாடகம்!

அன்னம், நேர்மையான நெய், பால், தயிர், நெய், சமித்து, ஓம ரசம் இவைகளை, என் மூலம் இமையவர் பெற்று இன்புறு கின்றனர்.

மதிமறை நாளில், மதி நிறை நாளில், தேவர்களும் பிதுர்க்களும் பேருன அன்னத்தை என் மூலம் பெறுகின்ருர். இத்தகைய என்னை, சர்வ பட்சகன் என்று சபித்தது சரியாகுமா? என்று, அலறியுரைத்தார் அக்கினி பகவான்.

கொடிய பொய்ம்மொழி சொல்லக் கூடாது. அருமை உயிர்க்கு அபாயம்; நாட்டின் பல் பொருள் நாசம்; கண்ணன நண்பனைக் காத்தல் முதலிய

காலங்களில், வாய் வந்த பொய், வாய்மையாக மதிக்கப்படும்.

அக்கிரமப் புலோமன் ஒரு அதமன். அவனைத் தொட, நான் இருக்கும் போது அஞ்சியவன். இல்லாத காலத்தில், எடுக்க வந்தான். ஆன இவ்வளவும் நீ அறிவை. கொடிய அவன் கேள்விக்குப் பதில் கொடுக்காமல், கனிவு நகை காட்டி, எப்படி யெப்படியோ நான் வரும்வரை கால தாமதம் செய்திருக்கலாம். ஏந்திழை அலற அவன் எடுத்துச் சென்ற போது, தாவிப் பாய்ந்து அவனைத் தடுத்திருக்கலாம். இரண்டும் செய்திலே. உன் தவறுகளை உணர்ந்தே சபித்தேன் என்று, உருத்துப் பிருகு உரைத்தார்.

அன்று முதல் அக்கினி, ஓமத்திற்கு உதவ இயலாமல் ஒளி குன்றினன். உம்பர் இதை உணர்ந்தனர். விரைந்தனர். வித்தகப் பிரம தேவரிடம் விண்ணப்பித்தனர்.

அக்கினி தேவரைப் பிரம தேவர் அழைத்தார். அக்கினீ ! கேள் ! பாபமும் சாபமும், பரமனை வழிபடில் பறந்தோடும். சிறப்பை யளிக்கும் சிவப்ர சாதம். **வாதபுரியில் சென்று வழிபடு ! உய்யும் வழி உளதாகும். போ ! இன்றே புறப்படு** என்று புகன்றார்.

அப்படியே சென்ற அக்கினி, சம்யாக வனத்தை அடைந்தார். புனித பொய்கைகளில், நியமம் செய்து நீராடினர். தென் கிழக்கில் ஒரு தீர்த்தம் கண்டார். பேறு தரும் அதற்கு, **அக்கினி தீர்த்தம்** என்று பெயரிட்டார். வாழ்வு தரும் வேத மூர்த்தியை, பல காலம் வழிபட்டார். உள்ளம் உகந்த உமாபதி,

கனல் கடவுள் எதிரில் காட்சியாயினர். அன்பால் அகம் உருகிய அக்கினி, ஆரணிநாதர் அடிமலர்களில் வீழ்ந்து வணங்கி, வேதனை தரும் தன் குறையை விண்ணப்பித்தார்.

அக்கினீ! தவமுனிவன் வாக்குத் தவறுது ; எனினும், எம்மை வழிபட்ட புண்ணியமும் வளர்ந்துளது. அதன் பயனுக, உன் மூர்த்தி பேதங்களில் உள்ள எந்தத் திருமேனிகளிலும், சாப தோஷம் சாராது.

உனது கிரண ஒளிகளிலும், சுபானத் தானத்தும், முதிரும் **காவ்யதா** என்ற உன் ஒரு மூர்த்தத்தும், என்றும் அச் சாபம் இருக்கும்.

பரிதிதன் ஒளி பட்ட பொருள்கள் எங்ஙனம் தூய்மை எய்துகின்றதோ, அதுபோல், எழும்பும் உன் ஜுவாலைகளில் தூய்மை இருப்பதாக!

உன் மூலம் அருமையாக வருகின்ற அவிர்ப் பாகங்களை, விமல யாமும் தேவரும் விரும்பி ஏற்பம். அறிந்து கொள் என்று ஆரண முதல்வர் அருளினர். அமைதியை யடைந்தார் அக்கினி பகவான்.

## 5. வாயு தேவர்

**வாயு தேவர்**, உயிர்கட்கு இன்பம் உதவுபவர். உயர்ந்த திக்குப் பாலகருள் ஒருவர். ஐம்பூதங்களுள் ஒரு ஆத்மா. விரிந்த அண்ட பிண்டங்களில் வியாபித்தவர். வரத சிவத்தை வழிபட, ஒரு நாள் அவர்க்கு, பெருகிய வேட்கை பிறந்தது. அயனை அணுகினர். அரிய ஒரு தலத்தை அறிவிக்கும்படி, விநயம் காட்டி வேண்டினர்.

வாயூ! உன் நண்பன் அக்னி, வேத புரியில் வழிபட்டான்; அதன் பயனாக, பிருகுவின் சாபத்தைப் பெயர்த்தான். திருமாலும் யானும், பேறுன அத்தலத்தில் சென்று பேறு பெற்றவர்கள். காரண முதல்வனை, அங்கு இருந்து கருதுவது நலம் என்று, கனிவாக உரைத்தார் கலைமகள் கணவர்.

உடனே புறப்பட்ட வாயுதேவர், வேதபுரத்திற்கு வந்தார். அதை ஒரு நகரமாக அமைத்தார். திருவாதவூர் என்று அதற்குத் திருநாமம் சூட்டினர். பெருமான் திருக்கோயிலைப் பெரிதாக்கினர். நித்திய நைமித்திகம் நடைபெற, அந்தண்மை யாளர்களை அமைத்தார். அன்பொடு பலகாலம் ஆராதித்தார்.

தழைத்த அவர் பணிகண்ட தற்பரர், ஆரணியுடன் தரிசனம் ஆயினர். கண் பெற்ற பயனென்ன, வாயுதேவர் எம்மானைக் கண்டார். விழுந்து வணங்கினர். எழுந்து தொழுதார்.

சிறியதிற் சிறிதாய், பெரியதிற் பெரிதான பெருமா! கங்காதரா! திரிபுர தகனா! என்று குதூகலித்துக் கூவினர். பராபரையை மெய் சிலிர்த்துப் பார்த்தார். குவித்த கைகளால் கும்பிட்டார்.

வேத நாயகீ! ஸ்ரீ சக்கரத்தில் இருப்பவளே! திரிகோண நடுவில் ஒளிரும் தேவ தேவீ! என்று, அன்புக் கண்ணீர் அருவியெனப் பெருக, வாழ்த்தி மகிழ்ந்து வணங்கினர்.

அஞ்சாதே வாயுதேவா என்று, புன்னகை பூத்தாள் புவனேஸ்வரி. என்ன வேண்டும் என்று, ஏக காலத்தில் இருவரும் வினவினர். உத்தம

குணமும், மாபெரும் வீரமும் அமைந்த மகப்பேறு அருளுக என்றார் வாயு தேவர்.

கலகல நகை செய்தார் கண்ணுதல் பெருமான். வாயு! கேள்! எண்ணத் தக்கதான வூர்தியில் ஏறிய இராவணன், செருக்கு மிகுந்தான். திக்கனைத்தும் சென்றான். அரிய கயிலையை அணுகிய ஊர்தி, அவன் தருக்கை யடக்கத் தடைப்பட்டு நின்றது.

செம்மல் மலைமேல் செல்வது சரியல. இறங்கி விடு; இன்றேல் திரும்பிச் செல்! என்றான், எம் அன்பன் நந்தி.

அற்பக் குரங்கே! நீ ஒதுங்கி நில் என்று உறுமினன் இராவணன்.

குரங்கென்று என்னைக் குறைவு படுத்தினை! இராவணா! அந்த இனத்தவரால் நாசமாகும் உன் வம்சம் என்று, அவன் நடுங்க உரைத்தார் நந்தி தேவர்.

அதன் மேலும், அசட்டுத் தைரியம் அதிகரித்தது. தடைப்படுத்திய இம்மலையை, தகர்த்து எறிவேன் என்று தாவினன். அசைத்துப் பெயர்க்க ஆரம்பித்ததும், எம் திருவடிக் கட்டை விரலால், அரிய அம்மலையைச் சிறிது அழுத்தினோம். எலும்பு நெரிந்தது. அண்டமெலாம் அதிர, வாய்விட்டு அழுதான். சாம கானம் பாடினான். இரக்கம் கொண்டோம். விடுதலை தந்தோம். திறுதிறுத்த கொட்டம் அடங்கித் திரும்பினன். இது ஒரு கால வரலாறு.

இப்பொழுது, இரக்கமற்ற அரக்க அறிவால், மூவுலகையும் படாதபாடு படுத்துகிறான். நேர்ம

பெருகிய நந்தி சாபம், நிறைவேறும் காலம் நெருங்கி வருகிறது.

மாபெரும் எம் அம்சமான ஒரு மைந்தன், உன் மூலம் அஞ்சநா தேவியிடம் உதிப்பான். பிறக்கும் அம் மைந்தன், பெரும் பிரசித்தியைப் பெறுவன் என்று அருளி, உருக்கரந்தார் உமைகாந்தர்.

## 6. மகப் பேறு

இமயச் சாரலில், **கேஸரி** என்ற வானரன் ஒருவன் இருந்தான். அவன் மகள் பெயர் **அஞ்சனு தேவி**. அவள் வாயுவின் மனைவி. சிறந்த சிவ பக்தை. வாயு தேவர் மூலம், சிவ தேஜஸ், கற்பிற் சிறந்த தையல் அஞ்சனையிடம் தங்கியது. கர்ப்ப காலத்தில் அக்காரிகை, கனம் தங்கிய மைந்தன் பிறப்பன் எனக் கனவு பல கண்டாள்.

கனவு நனவாகும் காலம் வந்தது. மார்கழி மாதம். கேட்டை நாள். புனித ஓரை. பொன்னிற மான ஒரு புதல்வன் பிறந்தான்.

சேய் பிறந்து சில நாள் ஆயின. ஒரு நாள், தொட்டிலில் இருந்த மைந்தன் மேல், பரவிய பரிதி கிரணம் பட்டது. உருத்ராம்சமான அம் மைந்தன், பரிதி மண்டலத்தைப் பழமென்று எண்ணிப் பாய்ந் தான். அந்நாள், பழைய ராகு பரிதியைப் பற்று கின்ற நாள். அந்த இராகு, உருத்து வரும் மகவின் உக்ரம் கண்டு ஒதுங்கினன்.

அமரர் தலைவன் இதனை அறிந்தான். சினம் கொண்டு எழுந்தான். அகிலம் அதிர நடந்தான்.

வச்சிரத்தை எடுத்தான். வானர மைந்தனின் மண்டை மேல் ஓங்கி அடித்தான்.

மதி கலங்கிய மைந்தன், உருண்டு உருண்டு, விண்ணளாவிய ஒரு மலைமேல் விழுந்தான். கன்னத்தில் பெரிய காயம்.

அதை வாயு தேவர் அறிந்தார். வாவி ஓடி வந்தார். என் குழந்தைக்கு இப்படியும் நேர்ந்ததோ என்று எடுத்தார். மேரு மலையை அடுத்தார். பொலிவு காட்டிய ஒரு குகையுள் புகுந்தார்.

காற்றின் உலவுதல் இன்றி, கலங்கியது உலகம். தனிப் பெரும் வேள்விகள் தடைப்பட்டன. மூச்சுவிட முடியவில்லை. தகவு தரும் வேத பாராயணங்கள் தடைப்பட்டன. முனிவர்கள் சித்தர்கள் கூடி, பிரம தேவரிடம் முறையிட்டனர். வாணி மணாளர், உடனே மேரு மலைக்கு வந்தார்.

உலக உயிர்களின் வாழ்க்கைக்கு, உத்தரவாதம் பெற்றவனே! அகில உலகும் உன் உதவியின்றி, அபயம் என்று அலறுவதைக் காண்! வெளியே வா! உதவி செய் என்று, விண்ணளாவக் குரல் கொடுத்து விண்ணப்பித்தார்.

இந்திரன் என் மகவை எப்படி அடித்தான் பாரும்! என்று, வாயுதேவர் வெளி வந்து கலைமகள் கணவரிடம் காட்டினர்.

வருந்தாதே வாயு! என்ற அவர், தன் தனிப் பெரும் கைகளால், மைந்தன் உடலைத் தடவினர். பிழைத்தது பிள்ளை. முன்னையினும் பொலிந்தது முகம். கண்ட வாயு தேவர் களித்தார்.

அதன் பின், உலகெங்கும் தன் சக்தியை உலவ விட்டார். மூச்சுவிட முடிந்தது. காற்றின் சுகத்தை அதன் பின் யாவரும் கண்டனர். உயிர்கள் அதனால் உய்ந்தன. அந்த மகிழ்ச்சியால், அமரர்கள் ஏக காலத்தில் எதிர் வந்தனர்.

எந்த ஆயுதத்தாலும், இனி இறவான் இவன் என்றான் இந்திரன்.

என் ஒளியில், நூற்றில் ஒரு பங்கை, உத்தம இச் சிறுவனுக்கு உதவுகின்றேன். பருவத்தில், வித்தையை இவனுக்குப் பயிற்றுவேன் என்றார் பரிதி தேவர்.

என் பாசத்தாலும் நீராலும், என்றும் இவனுக்கு இடையூறு இல்லை என்றார் வருணர்.

என் தண்டம், இவனை என்றும் ஒன்றும் செய்யாது என்று, உறுதியளித்தார் தென்திசை அதிபர்.

உருத்திரர்கள், பிற தேவர்கள், முனிவர்கள், சித்தர்கள் பலர் சேர்ந்து, என்றும் சிரஞ்ஜீவியாக இரு என்று, சிறக்க ஆசிகளைச் செய்தனர்.

கன்னத்தில் தழும்பு; அதனால் இவன் பெயர் அநுமான்; மாருதத்தின் மகன் ஆதலின் மாருதி; அஞ்சனா தேவி, அஞ்சனை மலையில் தவம் செய்து பெற்ற தநயன் ஆதலின், ஆஞ்சநேயன் என்று, பெயரிட்டு மகிழ்ந்தார் பிரம தேவர்.

பகைவர்கட்குப் பயங்கரன்; நல்லவர்களைக் காக்க வல்லவன்; உம்பர் செயல்கட்கு உதவுபவன். இவனை வெல்ல வல்லவர் இல்லை. எண்ணிய உருவை எடுப்பன். விரும்பிய இடத்தை விரைந்து

சேர்வன். எங்கும் இவன் வேகத்திற்குத் தடை இராது. சிவபூஜா துரந்தரனுச் சிறப்பான் என்று, விறுவிறு என்று பல வரங்களை உதவினர் பங்கஜர்.

அஞ்சனையும் வாயுவும், மைந்தன் பெற்ற பேறு கண்டு மகிழ்ந்தனர். இராமாயண காலத்தில் இந்த அனுமன் செய்த உதவிகட்கு எல்லையே இல்லை. அந்த வாத சேயான அனுமானை, எண்ணி சித்தி பல எய்துகின்றார் பலர்.

ஆரண நாயகர் பேரருளால், இப்படி அகில உலகமும் பாராட்டும் அருமை மகவு வாயு தேவர்க்கு வாய்த்தது.

## 7. கௌதமர்

சிறந்த கவுதமர், ஒரு சமயம் சிவக்ஷேத்ர யாத்திரையைச் செய்தார். தென் திசைக்கு வந்தார். நீடித்து மதுரையில் வழிபாட்டை நிகழ்த்தினர். புனித திருவாதவூரைச் சேவிக்கப் புறப்பட்டார். வரும் வழியில், எதிர் முகமாக ஓடி வந்தது ஒரு புலி. அதன் உள்ளங் காலில் ஒரு முள். ஒழுகுகிறது உதிரம். அதனுல், புழுவாய்த் துடித்தது அந்தப் புலி.

கலங்கும் அதன் நிலையைக் கவுதமர் கண்டார். இரக்கம் கொண்டார். வேதனை நீங்கி, புலி வீழ்ந்தது. அதன் உடலில் இருந்து எழுந்த ஒளி, கந்தர்வனுகி, விண்ணில் இருந்து இறங்கிய விமானத்தில் ஏறி, கவுதமரை நோக்கிக் குவித்த கைகளால் கும்பிட்டது.

வியந்தார் கௌதமர். யார் அப்பா நீ என்றார்.

ஸ்வாமி! நான் இந்திர சபையில் இருப்பவன். இசையில் தேர்ந்தேன். அதனுல் இறுமாந்து இருந்

தேன். ஒரு நாள், நான் இருந்த சபைக்கு நாரதர் வந்தார்.

அவர் பெருமை அறியேன். தாடி, மீசை, புலித் தோல், மரவுரியராய் இருந்த அவரை, என் பாவக் கண்களால் பார்த்தேன்.

புலி, புலி வருகிறது புலி என்று, அவரைப் பார்த்து ஏளனம் செய்தேன்.

முனிவர் முனிந்தார். உறுத்து நோக்கினர். புண்ணிய சபையில், இருக்க அருகதை இல்லாதவனே! புலி யென்று என்னை அவமதித்த நீ, புலியே யாகிப் பூவுலகில் இரு என்று, கொடுஞ் சாபம் கொடுத்தார்.

உள்ள பிழையை உணர்ந்தேன். அஞ்சினேன். அவர் திருவடிகளில் வீழ்ந்தேன். அழுது கதறினேன். புன்மையேன் என்னைப் பொறுத்தருள் புரியும் என்று புலம்பினேன்.

சித்திர சேன! நிலை பேருன பல தலங்கள், நிலவுலகில் இருக்கின்றன. இராமேச்சுரம், மதுரை, திருவாதவூர், தில்லை, திருவெண்காடு, திருவாலங்காடு, திருமறைக்காடு, திருவருணை, காஞ்சி, பழமலை, காளத்தி, காசி, கேதாரம், கோகரணம், கயிலாயம் முதலிய இன்னும் பல தலம் அங்கு எண்ணத் தக்கவை. நீ ஆரணபுரியை அடுத்த ஆரண்யத்தில் இரு. யாத்திரையாக வரும் கவுதமர், கருணை நிறைந்த கண்களால் உன்னைக் காண்பார். படபடத்துப் பாதிக்கும் உன் பாவம், பரிபூரணம் உணர்ந்த அவர் தம் விழிபட ஓடும். ஆம். அதுவரை

வினையை அனுபவி என்று உரைத்து, தேவ நாரதர் திருவுருக் கரந்தார்.

வீரன் விட்ட பாணம் போல், சாபம் என்மேல் விழுந்தது. பிறந்தேன். இன்பத்தை இழந்தேன். பாடு பல பட்டேன். இன்று இனிய தங்கள் கருணை நோக்கிற்கு இலக்கானேன். தீர்ந்தது சாபம். பழைய தேவன் ஆயினேன். வணக்கம் ஸ்வாமி! வருகிறேன் என்றான். விண்ணில் சென்றது விமானம்.

மகிழ்ந்த கவுதமர், அன்புப் பயிர் வளர்க்கும் ஆரண புரியை அடைந்தார். நிறை பெருகிய மனையாளுடன், பல தீர்த்தங்களில் நீராடினர். வேத நாயகி சமேத திருமறை நாதரை, வாதவூரில் வழிபட்டார். பலகாலம் தவம் செய்த அவர் திருமுன், பரமன் தரிசனம் ஆயினன். இன்பம் பெருகியிறைஞ்சினர் கவுதமர். வேண்டுவது யாது? வினவுதி யென்றனன் விமலன்.

பிரபோ! உணர்ந்தார்க்கும் மீட்டும் உணர்வரிய உமாபதீ! புனித மூர்த்தீ! உம்மைச் சேவிக்கும் பேறு பெற்றேன். இந்த ஒன்றே போதும். வேறு ஒன்றும் வேண்டா. ஏதாயினும் அருளத் திருவுளம் இருக்குமேல், இறைவியுடன் உன்னை இடையறாது உணர்ந்து, இன்புறும் உணர்வை அருளும் என்று மேலும் இறைஞ்சினர்.

அந்த வரத்தை அருளியது வரத சிவம். அதன் பின்னும், இத்தலத்தில் கவுதமர் பல நாள் இருந்தார். சிறந்த தவம் செய்தார். பேறு பல பெற்றார்.

## 8. அருந்தவக் கபிலர்

நலம் சிறந்தது, அயோத்திமா நகரம். அதை ஒரு காலத்தில், **சகர** சக்கரவர்த்தி ஆண்டார். பல காலமாகப் பரிமேத வேள்விகளை, வகையாக நடத்தி வந்தார். முயன்ற வேள்வி, தொண்ணூற்றொன்பது முடிந்தது. நூற்றிற்கு ஒன்று குறை. அதையும் நிறை வேற்ற நினைத்தார். பட்டம் நெற்றியில் கட்டி விட்ட பரி, நாடனைத்தும் விரைந்து நடந்தது. அளவிலாத படைகளுடன், அதன் பின் சென்றவன் **அம்சுமான்.**

நியதி வேள்வி நூறும் நிறைவேறினால், சிறந்த இந்திர பதவி சித்திக்கும்.

அமரர் கோன் அதை யறிந்தான். பயன் சிறந்த தன் பதவி பறி போவதா? முடியாது ; முடி யவே முடியாது ; என் பதவியை இழக்க மாட்டேன். நூறாவது வேள்வி நிறைவேறாதபடி, ஏதாயினும் சதி செய்ய வேண்டும் என்று எண்ணினான்.

சுழன்றது சூழ்ச்சிப் புயல். பரியை மறைந்து வந்து பற்றினான். பாதலம் சென்றான். கடும் தவம் செய்கிறார் அங்குக் கபிலர். வெடுவெடுத்துக் கொணர்ந்த பரியை, அவர் பின்புறத்தில் மேயவிட்டு மறைந்தான்.

எங்கே குதிரை ? அஞ்சிய அம்சுமான் எங்கும் தேடினன். சகரர் மக்கள், புகை புகா இடத்தினும் புகுந்து தேடினர். பாதலம் எய்தினர். கடும் தவத்தில் இருந்த கபிலரைக் கண்டனர்.

புனித அவர் பின் புறத்தில், புல் மேய்கிறது குதிரை. கண்டதும் கோபம் கொண்டனர். இதைக்

கீவுர்ந்து வந்தவர் இவர் என்று, தவருன எண்ணம் கொண்டனர். நிட்டையில் இருந்தாரை நிந்தித்தனர். கையைப் பற்றினர். இழுத்துப் பறித்தனர். கனிந்த தவம் கலேந்தது. கண் திறந்தார் முனிவர். அவர்களே உற்று நோக்கினர். சகர புத்திரர்கள், சாம்பராயினர். நல்தவ முனிவரை நைய வைத்த பாவத்தால், நடுக்குவிக்கும் நரக மெய்தினர். பல ஆண்டுகள், உருண்டு இடையே ஓடின.

இவர்கள் பரம்பரையில் பிறந்தான், உயர்ந்த குணமுள்ள ஒருவன். பல நலமுடைய அவன் பெயர் பகீரதன்.

வாழும் அவன் முன், ஒரு நாள் நாரதர் வந்தார். உன் முன்னேர் நரகில் மூழ்கியுளர் என்ருர்.

பகீரதன் நெஞ்சம் பகீரென்றது. ஸ்வாமி! என்ன செய்தால், அவர்கள் உய்தி யடைவர் என்று, விநயமொடு அவரிடம் வினவினன்.

வான் கங்கை, நிலம் நோக்கி வர வேண்டும். சகர புத்திரர் உடல் சாம்பரான நிலத்தில், படர்ந்து அந்நதி பாய்ந்து பரவுமேல், நரகத்தி லிருப்பவர் சுவர்க்கத் தெய்துவர்; வாழ வழி இது என்று, அவர் வழி யுரைத்துச் சென்ருர்.

அதன் பின் பகீரதன், அரசைத் துறந்தான். கங்கையை நோக்கிக் கடுந் தவம் செய்தான். கங்கா தேவி காட்சி யாயினள்.

பணிந்து விநயம் காட்டிய பகீரதனைப் பார்த்தாள். என்ன வேண்டும் என்ருள்.

தாயே! என் முன்னோர் இறந்த இடத்தில், உன் ஸ்பரிசத்தால், அவர்கட்கு உயர்கதிதா என்று வீழ்ந்து வணங்கி வேண்டினன்.

பகீரதா! தரணி என் வீழ்ச்சியைத் தாங்காது. தாங்கி விடும் ஆற்றலை யுடையவர் தாணு. அவரை வரவழை; அதன் பின் நான், வருகிறேன் என்று உரைத்து மறைந்தாள்.

பிறகு பரனை எண்ணித் தவம் செய்தான் பகீரதன். பல காலம் இடையில் பறந்தது. பிரசன்னர் ஆயினர் சிவபிரான். உள்ளத்தி லிருந்த செய்திகளை உரைத்தான். இணங்கினர் எம்பிரான்.

கங்கையை எண்ணினன். அவள் வேகம் காட்டி வந்தாள். வேகம் கெடுத்தாண்ட விமலர், மெல்ல நிலத்தில் கங்கையை விட்டார். நிலமெலாம் பரவி, சகரர்க்கு நற்கதி யளித்தாள் சானவி. இந்தப் பகீரதப் பிரயத்தனத்தை, இன்றும் எண்ணி உலகம் இன்புறுகின்றது.

தெரிந்து மிதித்தாலும், தெரியாது மிதித்தாலும் தீ சுடுவதை அறிவோம். நோக்கிய நோக்கால், பலர் இறந்த பாவம், கபிலர்க்கு வீர ஹத்தியாகி வேதனை தந்தது.

வருந்திய கபிலர், வைகுந்தம் எய்தினர். சாரங்க பாணியைச் சரணடைந்தனர். கலங்கி நின்று கண்ணீர் சிந்தினர். அச்சுதா! வீரஹத்தி தீராதா? எனக்கு விடுதலையே இல்லையா? என்று மேலும் மேலும் விம்மி யழுதார்.

கபிலா! நோதலை யகற்றும் திரு வாதவூர். புனித அத் திருப்பதிக்குப் போ! என் உருவான



ஸ்ரீ ஆரண வல்லியார் அருமைத் திருவுரு (பக்கம் 9)

பொய்கையில் முழுகி எழு! ஆரண வல்லியுடன் வேதபதியை வழிபடு! அங்கு, உன் பெயரால் ஒரு தீர்த்தம் உண்டாக்கு! அதில் நீராடி ஆராதித்தால், வீரஹத்தி தோஷம் விலகி விடும் என்றார்.

புனித கபிலர், உடனே புறப்பட்டார். ஆரணவூர் எல்லையை அணுகியதும், வீரஹத்தி அஞ்சி விலகியது. அதைக் கண்டு, கபிலர் உள்ளம் களித்தது. திருமால் அருளியபடி யெல்லாம் ஆராதித்தார். அப்பதியில், **கபில தீர்த்தம்** ஒன்றைக் கண்டார். நீராடினார். அனுஷ்டித்தார். வரத முதல்வனை வழிபட்டார். என்ன வேண்டும் என்று கேட்டு எதிர் நின்றான் எம்பிரான். கை குவித்தார் கபிலர்.

பிரபோ! இத்தலத்தில் வழிபடுவார்க்கு, தீராத பாவமெல்லாம் தீர அருள்; இதுவே என் வேண்டுகோள் என்று, விநயம் மிகுந்து விளம்பினர். அங்ஙனே ஆக என்று, ஆரண நாயகர் அருளினர்.

## 9. பயிரவர்

பாதம் முதல் கடிதடம் வரை, பங்கயர் உருவம்; கடிதடம் முதல் கண்டம் வரை, கமலக் கண்ணர் திருமேனி. கண்டம் முதல் சிரம் வரை, வாழும் உருத்திரர் வடிவம்; இப்படி, பயனுள மும்மூர்த்திகளின் சொரூபர் பைரவர்.

ஒருநாள் உமாபதியைச் சேவிக்க, வாய்மைப் பயிரவர் வந்தார். சுத்த ஊர்தியான சுவானத்தை, நிழல்பட வெளியில் நிறுத்தினார். புனித திருக்கோயிலுள் புகுந்தார். சிவபிரானைச் சேவித்தார். பிறகு வெளியில் வந்தார்.

எங்கே சுவானம்? தேடினூர். அலேந்து தேடியும் அகப்படவில்லே. திரும்பினூர். வாழ்விக்கும் சிவத்தை வணங்கினூர்.

மாதேவா! உரிய தங்கள் ஆணையின்படி, ஊர்தியில் ஏறினேன். உலகெங்கும் வலம் வந்தேன். தகுதியற்ற பாவிகளேத் தண்டித்தேன். இன்று சிறந்த உம்மைச் சேவித்தேன்.

திரும்பினேன். வாயிலில் இருந்த வாகனம், சென்ற இடம் தெரியவில்லேயே! தேடியலுத்தேன். மறைந்த காரணம் அறிந்திலன் என்று, படபடத்து உரைத்தார் பயிரவர்.

பயிரவா! சிறந்தவன் நீ யென்று செருக்கடைந்தனே! எனக்கு இணை யில்லே யென்று, இறுமாப்புக் கொண்டு இருக்கின்ருய். உன் கர்வம், மாபெரும் ஊர்தியை மறைத்தது.

உன் ஊர்தி, சுனகங்களுள் ஒன்றன்று. வேதமே அவ் ஊர்தி. அதை நீ அறிவாய். அகங்காரம் கொண்டார்க்கு, வேத ஜீவன் விளங்குவது இல்லே. அறிந்து கொள் என்று அறிவித்தார் அமலர்.

பயிரவர் மனம் பதைத்தது. தன் அவலம் எண்ணித் தளர்ந்தார்.

கருணுகரா! எம் போன்றவர் செய்யும் தவறுகள், என்றும் மன்னிக்க முடியாதவை.

சங்கரா! அதற்குச் சரியான தண்டனே தான் அளித்தீர்! போதும் இந்த அபராதம்; இனிப் பொறுக்கல் ஆற்றேன்; உன் சரணல்லால் சரணில்லே! அருள் கடல் நீ அருளாயேல், உய்யு

மாறும் உளதோ உமாபதே! என்று, தொழுது பல சொல்லித் துதித்தார்.

பயிரவா! மதுரைக்கு வடமேற்கில், நாம் விரும்பிய நல் தலம், வளஞ் சிறந்த திரு வாதவூர். அங்கு நீ எம்மை ஆராதித்தால், எண்ணியதைத் எளிதின் எய்துவை என்று அருளினர் மறை நாயகர். புனித பைரவர் உடனே புறப்பட்டார்.

வேத புரியில், தன் பெயரால் ஒரு தீர்த்தம் தாபித்தார். அதிலும், பிற தீர்த்தங்களிலும், நிம்மதி கொண்டு நீராடினர். நீறணிந்தார். சுத்தமணி அக்கு மாலை சூடினர். புனித ஆலயத்துள் புகுந்தார். அமல விமலனை ஆராதித்தார்.

அடியேன், பொல்லாத செருக்கடைந்து பட்ட துன்பம் போதும்! வேத ஊர்தியை இழந்த வேதனையைத் தீரும்! வேத நாதா! நாத போதா! என்று, அழுது தொழுது பயிரவர் அலறினர்.

உடனே மூல இலங்கத்தி லிருந்து, முதல்வர், வேத சுவானங்கள் நான்குடன் வெளிப்பட்டார்.

பயிரவா! பேறு தரும் இவைகளைப் பெற்றுக் கொள்! சிறந்த அமைதி கொண்டு செயல் செய்! நீ தந்த பயிரவ தீர்த்தத்தில் நீராடினோர், எல்லாச் சித்திகளையும் எய்துவர்! என்று அருளி, திருவுருக் கரந்தார் தேவ தேவர்.

பரமன் அருள் கண்டு மகிழ்ந்த பயிரவர், அருளார்ந்த அமலா! செருக்ககற்றி ஆளும் செம்மல் நீ என்பதை, உலகம் என் வரலாறு கொண்டு உணர்வதாக என்றுரைத்து, தூய மூன்று சுவானங்கள் தொடர்ந்து வர, ஊர்தியான சுனகத்தை ஊர்ந்து, அரிய தன் உலகத்தை அடைந்தார்.

## 10. தென் திசைத் தேவன்

ஆரணபுரியில் ஒரு அந்தணன் இருந்தான். அவன் சிவசர்மா எனும் பெயரினன். கலைகள் யாவும் கற்றவன். நிறைந்த அறிவு பெற்றவன். ஐயோ! அவன் அறிவு, பாழான நெறியிற் படர்ந்தது. அவனிடம், இடம்பமும் வஞ்சமும் இடம் பெற்றன.

ஒரு அமங்கலையிடம் உறவு கொண்டான். குடித்தான், வெறித்தான், கொடியன் ஆயினன். தாரமான மனையாள், தாய் வீட்டில் தஞ்சம் அடைந்தாள். இனிய அவள், அங்குக் கண்ணீர் சிந்தி யிருந்தாள்.

"காய்ச்ச பலாவின் கனியுண்ண மாட்டாமல்,
ஈச்சம் பழத்திற்கு ஏக்கற்ற வாறே"

என்று அறவோர் இகழும் அவலம் எய்திய சிவசர்மா, ஒரு நாள் இன்ப மனைவியை எண்ணினன். மதுபான போதையுடன், மாமன் இல்லத்திற்குத் தள்ளாடித் தடுமாறி வந்தான்.

உருண்டதோ? அவன் பாவம் உருத்ததோ எனும்படி, பாழும் பாம்பு ஒன்று, அங்கு அவனைப் பதம் பார்த்தது. மரண தேவதை வலித்தது.

தூய பழைய வாசனை தோன்றியது; **ஓம் சிவசிவ சிவசிவ** என்று உச்சரித்தபடியே, சிவசர்மாவின் உயிர், பாழும் உடலை விட்டுப் பறந்தது. சூக்கும பாசத்தால், சுவாசத்தைச் சுருக்கிட்டு இழுத்த இயம தூதர்கள், உயிரைப் பிடித்துக் கொண்டு ஓடினர்.

நில்லுங்கள்! என்று, பின்புறத்தில் இருந்து, நிலமதிர எழுந்தது ஒரு பேரொலி. திடுக்கிட்டுத்

திரும்பினர். என்ன வியப்பு! எங்கும் சிவகணம். கோப நகை, அவர்களிடம் கொப்பளிக்கின்றது.

சினந்து நின்ற சிவகணத்தவர், பயங்கர தூதரிடம் இருந்த உயிரைப் பறித்தனர்.

உதறல் எடுத்தது உடல்; தூதர்கள் அஞ்சினர். ஓடிப் போயினர். சிவசர்மாவின் உயிரை, சிவகணத் தவர் கௌரவித்தனர். தெய்வ விமானத்தில் ஏற்றினர். கயிலாயம் சென்றனர். நிமலன் திருமுன் நிறுத்தினர். சிவத்தைச் சேவித்த சிவ சர்மாவின் நுண்ணுடல் சிலிர்த்தது.

அன்பனே! வாதவூர் எனும் வேதபுரத்தில் வசித்தாய்! இறுதி நாளில், உணர்வுடன் என் நாமம் ஓதினை! உன் வினைகள் அதனுல் ஒடுங்கின. அரிய இந்த நுட்பத்தைப் பலர் அறியார். அறிவிக்கவே, உன் போன்ருர் வரலாறுகள் உருவாகின்றன. இனி நீ இங்கு இன்புற்று இரு என்று அருளினர் இறைவர்.

தூதர் மூலம், நடந்ததை உணர்ந்தார் தென் திசை அதிபர்; திருவாதவூர்ப் பெருமைதான், அவர் நினைவில் எழுந்து நிழலிட்டது. புறப்பட்டார். அத்தலத்தை அடுத்தார். நீராடினுர். நீறு தரித்தார். சிவனுர் திருவருளைச் சிந்தித்தார். இதயத்தில், பரமன் திருவடியைப் பந்தித்தார்.

கருணைக் கடலே! பிறையணி திருமுடிப் பெருமானே! அன்பர்க்கு எளியாய்! மதி விழியாய்! கனல் கண்ணு! தினகர நேத்திரத் திருவாளா! மின்வண்ணச் சடையாளா! ஈசா! மகேசா! அறிவில்லா என்னை ஆட்கொண்டு அருள் செய்!

அத்தா! ஆரண வல்லியை ஆள்வானே என்று ஏத்தித் தொழுது இறைஞ்சினர்.

மகா லிங்கத்தில் இருந்து, விமல இறைவர் வெளியானர்.

தர்மா! தர்ம சூட்சுமத்தைத் தெரிந்து கொள். தெரிந்தோ தெரியாமலோ வினை செய்தவர், எமக்கு விருப்பமான தலத்தில், இறுதி நாளில் எம்மை எண்ணினல், அவர்தம் பாவம் பலவும் அழல்படு பஞ்சாய் அழியுங்காண்!

சிவசர்மா செய்த தீவினைக்கு அளவில்லை. எனினும், உலகம் கைவிடும் இறுதி தினத்தில், எவரையும் மறந்தான். தன்னையும் துறந்தான். என்னை நினைந்தான். சிவசிவ என்ருன். அதனல் புனிதன் ஆயினன்! புரிந்து கொள் என்று புகன்று, கவின் மிக்க அருவுருவில் கலந்தார் இறைவர்.

மகிழ்ந்தது நடுவர் மனம். ஸ்ரீ ஆரண வல்லி சமேத ஆரண நாதரை, வாய்த்த அன்பொடு வழுத்தினர். அங்கிருந்து தன் பதியை அடைந்தார்.

"சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாயும்
சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவசிவ என்றிடச் சிவகதி தானே!"

என்று, அருள் மூலம் உணர்ந்த திரு மூலர், அதி ரகஸ்ய அனுபவமாகச் சொன்ன மூவாயிரம் மந்திரங் களுள், இது ஒன்று. மேலான இம்மந்திர உண்மையை, திருவாதவூர், மெய்யே மெய் என்று இன்றும் மெய்ப்பிக்கின்றது.

## 11. சனி பகவான்

மாண்டவ்யர் என்பவர் ஒரு மாதவர். இவர், காட்டில் ஒரு பர்ண சாலை கட்டினர். விபூதி உருத்திராக்க தாரணராய், கட்டிய இடத்தில் காலம் கழித்தார். சிறந்த தவத்தைப் பலகாலம் செய்தார். சனி பகவான், கோசார வசமாய், அவருடைய ஜன்ம ராசியில் சஞ்சரிக்க லாயினர்.

மகத நாட்டை ஆண்டவர் ஒரு மன்னர். அவருடைய மாபெரும் அரண்மனையில் இருந்த அணிகளை, கள்வர்கள் பலர் கவர்ந்து சென்றனர். கண் விழித்த அரண்மனைக் காவலாளிகள், கள்ளரைப் பிடிக்கக் கனவேகம் காட்டினர். மாபெரும் காட்டில், கள்ளர்கள் மறைந்தனர். பல பகுதிகளிலும் ஆராய்ந்து வந்த ஆள்கட்கு, பர்ணசாலை பார்வையில் பட்டது. விறுவிறுத்து அங்கு விரைந்தனர்.

கள்ளர்கள் ஓடிய கனவேகத்தில், காவலர் முத்திரை வைத்த கணையாழி, வேய்ந்த பர்ண சாலையோரத்தில் விழுந்து கிடந்தது. பார்த்ததும், காவலாளிகள் மனம் பதைத்தது. புனித பர்ண சாலையுள் புகுந்தனர். கடுந்தவ முனிவரைக் கண்டனர்.

முனிவர் வேலம் தாங்கி, மோசம் செய்வாருள் ஒருவன் இவன்; நாசகரமான இவனை, விடுவது கூடாது என்று விழித்து நோக்கினர்.

ஏடா! மற்ற நகைகள் எங்கே?

பதில் இல்லை.

இந்த ஏமாற்று வித்தை, எங்களிடம் வேண்டா. மரியாதையாகக் கேட்கிறோம்; கொடுத்து விடு என்று கோபித்தனர்.

எதற்கும் பதில் இல்லை. காரணம் என்ன காவலரைக் கண்டிலர்; உலகை மறந்தார்; உடம்பை மறந்தார்; பரத்தை நினைந்தார்; பரமனில் அவர் உணர்வு பதிந்திருந்தது.

அந்த உண்மையைக் காவலர் அறியாமல், அவரைப் பலபட அலக்கழித்தனர். இழுத்துச் சென்றனர். ஆலோசித்துப் பாராத அரசனும், முனிவரைக் கழுவில் ஏற்றக் கட்டளை யிட்டான்.

கழுவேற்றிய பிறகுதான், தியானம் கலைந்தது. வாதை வலுத்தது. சென்ம ராசியில் சனி; ஆம். அவன் வேலை இது என்று அறிந்தார். பொல்லாத வலி. முனிவர்க்குப் பொறுக்க முடியவில்லை.

சூர்ய புத்திரா! சனியே! முட்டாளே! முயன்று என்னைப் பாதித்த நீ, முடவனுக என்று கடும் சாபம் இட்டார். அவருடைய சாபம், அப்போதே பலித்தது.

கலங்கினர் அக் காக வாகனர். சிறந்த தந்தை யிடம் சென்ருர். மாபெரும் முடவனுன மகனை, பார்த்து மனம் பதைத்தார் பரிதி தேவர்.

மாண்டவ்யருடைய சாபம் இது என்று மதித்து, அவரிடம் இருவரும் அடைந்தனர். வேதனைச் செயல் பல இடையில் விளைந்தன. இறுதியில் அவரை, கழுமரத்தில் இருந்து இறக்கினர். வணங்கி ஆயிரம் சொல்லி வழுத்தினர். அதன் பின், இரக்கம் கொண்டது முனிவர் இதயம்.

சனியே! சிவத்தியான பரரை, தெரிந்தோ தெரியாமலோ எவர் பாதித்தாலும், அவர்கள் பாவத்திற்கு ஆளாகிப் பரதவிப்பர். அருள் நூற்கள்,

இவைகளை அறிவிக்கின்றன. ஓதியுணர்ந்தும் இதை மறந்தாய்; வீணாக என்னை வருந்தச் செய்தாய்; கொடிய சாபத்தை, அதனால் கொடுத்தேன். இப்போது என்மனம், உன் செய்தியில் இரங்குகிறது. அளித்தது அளித்ததுதான். அதை மாற்ற என்னால் ஆவது இல்லை.

வேதக் கருவுள் விளங்கும் விமலன், திருவாதவூரில் எழுந்தருளியிருக்கின்றான். அந்த அமலனை ஆராதித்தால், ஒழியாத என் சாபம் அங்கு ஒழியும் என்று, கண்மூடித் தவத்தில் கருத்தைப் பாய்ச்சினர் கடுந்துறவி.

சூரியனும் சனியும், அப்படியே ஆரண புரியை அடைந்தனர். தன் பெயரால் சனி பகவான், அங்கு ஒரு தீர்த்தத்தை அமைத்தார். ஆகம விதிப்படி, மூல முதல்வரை ஆராதித்தார். பலகாலம் வழிபட்ட பயனாக, விமல சிவம் இலிங்கத்திலிருந்து வெளிப்பட்டது.

தந்தையும் மைந்தரும், வேத நாதரை விழுந்து வணங்கினர். புனித மொழிகளால் போற்றினர்.

சனீஸ்வரா! அன்பர்களை இனியாவது அலட்டாதே! ஸ்ரீ வாதபுரத்தில் வழிபட்டவரை வருத்தாதே! நிமலன் பூசை செய்வாரை நெருக்காதே! விரத சீலர்கள், அவர்கட்கு உதவுவோர் முதலினோரிடத்தில், மோசமாக எந்த நாசமும் செய்யாதே!

வளரும் அன்பொடு எம்மை வழிபட்டாய்; அதன் பயனாக, நெளிந்து வரும் கால் நேராகும். எனினும், என் பக்தன் கொடுத்த சாபம், என்றும் நினைவில் எவர்க்கும் இருக்க, நொண்டி யெனும்

பொருள் தரும் **பங்கு** எனும் பெயர் மட்டும். என்றும் உனக்கு இருக்கும் என்று அருளினர் இறைவர். அதன்படி, கால் முடமாகாதது கண்டு, சனியும் சூரியனும், வாதவூர் இறைவனை வாழ்த்தினர்.

## 12. அரஜை

தர்ம தேவதை, கிருத யுகத்தில் நான்கு கால்களால் நடக்கும் என்பர். இட்சுவாகு மன்னர், அக்காலத்தில் இருந்தார். வாழ்ந்த அவர் வம்சத்தில், வைவஸ்சுதர் வந்தார். சால்புடைய அவர் மைந்தர் பெயர் சத்து. மங்களகேசி யென்பாளை, சத்து மணந்தார். இவர்கள் வாழ்க்கையில், பிள்ளைகள் பலர் பிறந்தனர். கடைசி புதல்வன் தண்டக்ன். பரம துட்டனுன அவன், விந்திய மலைக்கும் சைவல மலைக்கும் இடையில் ஆட்சி நடத்தினான். மதுமதிப் பட்டணம், அவன் தலைநகர்.

ஒருநாள் தண்டகன், வேட்டையாட விரைந்தான். ஒரு பெரிய காடு. அது, பிருகு முனிவர் தவம் செய்யும் பேறு பெற்றது.

அருந்தவப் பிருகு மகள் **அரஜா**. அன்று அவள், வேடிக்கையாகத் தோழியருடன் விளையாடி யிருந்தாள். அவ்வழியே வந்த தண்டகன், அவளைக் கண்டான். விலங்கு வேட்டையை விட்டான். மாது வேட்டையில் மனம் சென்றது. துணிகரமாகத் தோகையை அணுகினன்.

அதிரூப அணங்கே! நீ யார்? இவ்வனத்தில் தனித்திருப்பது ஏன் என்றான்.

எதிர் வந்த ஆடவனைக் கண்டு, நாணினள் ஏந்திழை. ஒருபுறமாக ஒதுங்கினள். சூழ்நிலை யறிந்து, மங்கையின் தோழியர் மன்னன் முன் வந்தனர்.

ஐயா! பிருகு முனிவர் தபோவனம் இது. அவர் மகள் இவள்; பெயர் அரஜை. மாதர் விளையாடும் இடத்தில், ஆடவர் வருவது அக்கிரமம்; அப்பால் போம் என்று அதட்டினர்.

வாயை மூடுங்கள்! உங்களைக் கேட்கவில்லை நான் என்று, அவர்களைப் பேய்போல அறைந்தான். விரட்டி ஓட்டினான். தையல் அரஜை ஓடாதபடி தடுத்தான்.

வனிதையே! வேள்விக் கனல் வளர்ப்பவர் உன் தந்தை; காமக் கனல் வளர்க்கும் காரிகை நீ. மையல் மிகுத்த என்னை மணந்துகொள்! என்று, கொஞ்சிக் கெஞ்சி, அணு அணுவாக அணுகினன்.

அரஜை அஞ்சினள். வியர்த்தது மேனி. ஒன்றும் தோன்றவில்லை. ஒருவாறு துணிந்தாள்.

ஐயா! வனத்தின் நடுவில் உள்ள ஆஸ்ரமத்தில், என் தந்தை இருக்கிறார். அவர் மூலம் என்னைப் பெறுவதுதான் அறம். அதற்கு முன், என்னிடம் பல படப் பேசுவது பாவம். வழிவிடும். போகிறேன் என்று புழுவாய்த் துடித்தாள் அந்தப் பூவை.

கலகல நகை செய்தான் காதகன். அரஜா! நீ சொன்னபடி செய்ய, கால தாமதம் ஆகும். பொறுக்க முடியாது என்று பொல்லாத பதகன், கட்டிப் பிடித்தான்; அவள் கற்பை யழித்தான். கரும்பின் சக்கையை வீசி எறிவார்போல், அவளை

விட்டு அகன்றுன். தன் பட்டணத்தை அடைந்தான்.

கண் கலங்கினள் காரிகை. இதயம் பற்றி எரிந்தது. உடல் தள்ளாடியது. உலகமே சுழன்றது. ஆ என்று கதறி யழுதாள்.

தாதியர் மூலம், முன்னமே செய்தியறிந்த பிருகு முனிவர், அவர்களுடன் ஓடி வந்தார்.

மகளைக் கண்டார். அம்மா! என்ன நடந்தது என்று அலறினர்.

பதிலுரைத்திலள் பாவை. அழுது கதறினள், உள்ளக் கண் கொண்டு, முனிவர் நடந்ததை உணர்ந் தார். கொதித்தது நெஞ்சு.

துராத்மா அவன். தன் குலத்தொடு தொலை வான். அக்கினி வெள்ளத்தில், அகப்பட்டுக் கொள் வான். இன்னும் ஏழு நாட்களில், இவனுடைய தேசம் நாசமாய்விடும். ஆட்சி வீழ்ச்சி யடையும். பொங்கிய அவன் கூட்டமும், அங்கிருக்கும் அனைத் தும் பொசுங்கும்; புழுதியாய்விடும்! என்று பெருஞ் சீற்றங் கொண்டு சிலிர்த்தார் பிருகு. அதன் பிறகு, தன் அருமை மகளை நோக்கினர்.

அரஜா! உன்மேல் ஒரு குற்றமும் இல்லை. எனி னும், நேர்ந்த களங்கம் நிவாரணம் ஆக வேண்டும்.

ஏதம் தவிர்க்கும் திரு வாதவூர். அங்குப் போ! அமலையை இறைவனை அன்புடன் ஆராதனை செய்! களங்கம் அகலும்; மாசிலா மணியாய் விளங்குவை! போ! இப்போதே புறப்படு என்றுர்.

அரஜா பக்தி சிரத்தையுடன், அத்தலத்தை அடைந்தாள். முதன்மையான எல்லாத் தீர்த்தங்

களிலும் முழுகினுள். பழுதகன்ற பாவையாகி எழுந்தாள். அன்பு பெருகியது. ஆரண வல்லி யையும் திருமறை நாதரையும் ஆராதித்தாள். பசி வந்த காலத்தில், கனிவகைகளைப் புசித்தாள். பல காலம் பரனை எண்ணி யிருந்தாள்.

தவமுனிவர் கவுதமர், ஒருநாள் அத் தையல் எதிர் வந்தார். வந்தாரை அரஜா வணங்கினள். சிறக்கப் பாதபூஜை செய்தாள்.

ஸ்வாமி! உயர்ந்த தர்ம சூட்சுமங்களை உப தேசியுங்கள்; என் பிறவி யீடேறும் என்ருள்.

அவள்பால், கருணை கொண்டார் கவுதமர். மனம் வாக்கு ஆக்கையால், வளர்க்க உள்ள அறங் களை, விரிவாக எடுத்து விளக்கினுர். மந்திர நுட் பங்களை, மனங் கொள்ளச் செய்தார். திருவாத வூரில் உள்ள தீர்த்தப் பெருமைகளை, அவைகளில் நீராடுவார் பெறும் அருமைகளை, அன்பொடு பலபட அறிவித்தார்.

அவைகளை அறிந்தாள். உணர்ந்து மனம் நெகிழ்ந்தாள். நியதியுள்ள அவைகளில், மாறி மாறி நீராடினுள். வரதமறை நாதரை, வணங்கிப் பலகாலம் வழிபட்டாள்.

ஒருநாள், பூமியில் விழுந்தது அவள் பூதவுடல். அவள் ஆன்மா, அமர உலகை அடைந்தது; அங்குள பயன்களை அனுபவித்தது. திருவாதவூரை, அங்கும் எண்ணி யிருந்தது.

## 13. நாத சர்மா

மதுரையம் பதியில், நாதசர்மா என்ற ஒரு வேதியர் இருந்தார். அவர், சிவபக்தியிற் சிறந்தார்; ஐயம் திரிபு அற, அருள் நூல்களை அளந்தார். உத்தம குணமே உருவான அவர், மங்கை அநவத்யா என்பாளை மணந்தார். இல்லற நல்லறம் இனிது நடந்தது.

ஸ்ரீ ராஜசேகர பாண்டியர், இவர் ஒழுக்கங்களை உணர்ந்தார்; இவரிடம் குலவிய நண்பு கொண்டார்.

சர்மா, ஸ்ரீ மீனாட்சி சுந்தரரை, அல்லும் பகலும் எண்ணினார். திரிகரணத் தூய்மையுடன், ஆகம விதிப்படி ஆராதித்தார்.

ஒரு சமயம் சிவ சர்மா, விமல தல யாத்திரையை விரும்பினர். புனித துணைவியுடன் புறப்பட்டார். வாழ்விக்கும் திருவாதவூர்க்கு, முதலில் வந்தார். திருமேனி சிலிர்த்தது. பொய்மையிலாத உள்ளம் புளகித்தது. வீடுபேறு பெற்றவர் போல் விம்மிதர் ஆயினர்.

வேத நாதரை, வேத நாயகியுடன் விதி முறைப்படி வழிபட்டார். ஆநந்தக் கண்ணீர் அருவியெனப் பெருக, பொங்கி அன்பு பொலிந்தது. அதே நிலையில் அமர்ந்து, சிவ மந்திர ஜெபம் செய்தார.

அநவத்யா! திருவாதவூரை யகன்று வேறு தலம் செல்ல மனம் இல்லை. என்னை யிங்கு ஈர்க்கின்றான் எம்பெருமான். வாயு தேவர் வழிபட்ட இப்பதி, திருவாதவூர் என்று, பெரிதும் சொல்லப்

பெறுகிறது. அந்த வாயுவின் அம்சமே நான்; ஊன்றி என் உள்ளம் இப்படி உணர்கிறது.

முன்னைய பிறவியில் நீ, பிருகு முனிவரின் திருமகள். அன்று நீ அரஜை என்னும் பெயரினள். இப் பிறப்பில் என்னை மணந்தாய். நாம் இருவரும், முன்னைப் பிறவியில், இங்கு, முதல்வனை, தேவி யுடன் அன்பு கொண்டு ஆராதித்தவர்கள். நினை வூட்டுகின்றான் இப்படி நின்மலன்.

நாம் இங்கிருந்து வழிபடுவதுதான், ஈசன் சம்மதம் என்று உணர்கிறேன் என்று, ஒருநாள் உள்ளம் ஒருமை எய்தி உரைத்தார்.

அதன் பின் இருவரும், அப் பதியிலேயே தங்கினர். ஆண்டவனைப் பலகாலம் ஆராதித்தனர்.

அன்பு கனிந்த அவ்விருவர்க்கும், தற்பரியுடன் பரமன் ஒருநாள் தரிசனம் அளித்தான்.

உங்கள் முன்னைய பிறவியை, உளத்தில் இருந்து உணர்த்தினம். சிவதர்ம பாஸ்கரர் எனும் பேறுன மக்கள் நால்வர், உங்களிடம் பிறப்பர். அருமை உங்கள் வம்சம், சகல சம்பத்துடன் அபிவிருத்தி யடையும். எப் பேறும் இம்மையில் எய்துவிர். இறுதியில் சிவபதம் அடைவீர் என் றுரைத்து, திருவுருக் கரந்தார் தெய்வப் பெருமான்.

இறைவன் அருளிய வண்ணம், பிள்ளைகள் நால்வர் பிறந்தனர். திருவாதவூர் வேத நாதரது பேறுதரும் பிரஸாதத்தைப் பெற்றனர். இறையருள் நிழலில் இன்பம் கொண்டனர்.

## 14. புருஷா மிருகம்

சந்திர வம்சத்தில் வந்த பாண்டுவின் மக்கள் பாண்டவர்கள். இவர்கள் காலம் துவாபர யுகம். இந்திரப் பிரஸ்தம், இவர்தம் தலை நகரம்.

மும்மை உலகிலும் சுதந்தரராக உலவி வரும் நாரதர், ஒரு நாள் அவர்கள் முன் வந்தார். பாத பூசை செய்து, அவரைப் பலபடப் பாராட்டினர் பாண்டவர்.

தர்மபுத்திரா! நிலவுலகில் இராஜ சூய வேள்வியை நிறைவேற்றினவர், இந்திர உலகில், சுவேத சத்ர மரியாதை பெறுவர். உங்கள் தந்தை பாண்டு, உம்பர் உலகில், இனிய அம் மரியாதையை இழந்திருக்கின்றார் என்றார்.

பாண்டவர்கள் மனம் பதைத்தது. ஸ்வாமி! என்ன செய்தால், அந்தச் சிறப்பை அவர் அடைய முடியும்; அறிவியும் என்று விநயம் கொண்டு வேண்டினர்.

தர்மா! நலம் மிக்க அவ் வேள்வியை நீ நடத்து. வேள்வியின் பயனை, தந்தைக்கு நீங்கள் தாரை வார்த்தால், அவர் அப் பெருமையை அடையலாம் என்று அறிவித்தார்.

தெளிவு பெற்றது மனம். ஐவரும் திட்டம் இட்டனர். வேள்வி செய்ய, ஏரானமான செல்வம் இருக்க வேண்டும். அது கருதி, திசை யனைத்தும் சென்றனர். வெறித்து எதிர்த்தாரை வென்றனர். பெரும் பொருள் திரட்டினர்.



சிவகாமியாருடன் மூலவரான ஸ்ரீ நடராஜர் (பக்கம் 14)

வடதிசை சென்ற வீமன், களத்தில் கலந் தாரைச் சாய்த்தான். குபேரனையும் வென்றான். பெரும் பொருள் கிடைத்தது. இனி, வேள்வியில் விரைந்து பணி செய்ய வீரர் பலர் வேண்டும். என்ன செய்வது என்று எண்ணித் திரும்பிய வீமன் எதிரில், குபேரனது பூங்காவனம் புலனாயது. அது தானா? புருஷ ரூபமும் விலங்கு உருவமும் கொண்ட புருஷா மிருகமும், இனிது அங்கு இருந்தது.

நினைவு நிறைவேறியது என்று நினைத்தான். அஞ்சியபடி அதனை அணுகினன். வாய்குளிர, மனம் குளிர அதை வாழ்த்தினன்.

வணக்கம். இராஜ சூய வேள்வி இனிது நிறை வேற, எங்கள் இந்திரப் பிரஸ்தத்திற்குத் தாங்கள் எழுந்தருள வேண்டும் என்று வேண்டினன்.

வருகிறேன்; எனக்கு முன் நீ வழி காட்டிப் போக வேண்டும். என் வேகத்திற்கு நீ இடையூறாக இருப்பது கூடாது. என் பிடிக்கு அகப்படாமல் முன்னேறு. இன்றேல், கொன்று விடுவேன். காரணம் தெரியுமா? என் நோக்கிலும் வாக்கிலும் இதயத்தும் சிவம் இருக்கும். என்ன இவன்? வழிகாட்டுவான் பின் வாங்கி வருகிறானே என்ற சிந்தனை, என் சிவத் தியானத்தைச் சிதைத்து விடும். எச்சரிக்கிறேன் என்றது புருஷா மிருகம்.

வீமன் வியந்தான். அதற்கு உடன்பட்டான். எடுப்பான புருஷா மிருகம், குபேர உலகில் இருக் கிறது; கட்புலனால் அதைக் காண முடியாது. காண நேர்ந்தவன் புனித புண்ணியன். அதை அழைத்து வந்தால், நேர்மை வேள்வி நிறைவுபெறும்.

அது வர இணங்குமேல், வீமா! இதைச் செய் என்று, கண்ணன் குறிப்பான உளவு கூறியுளன்.

வீமன் அந்தத் தைரியத்தால், விரைந்து கால் கடுக்க ஓடினன். எத்துணையோ தூரம் விரைந்த வனை, எட்டிப் பிடிக்கலாம்படி அது கிட்டியது.

ஒரு கல்லை எடுத்தான். மந்திரம் சொல்லிப் பின்னேக்கி எறிந்தான். அது விழுந்த இடத்தில், ஒரு சிவாலயமும் தீர்த்தமும் விளங்கியது.

இப் புதுமையைக் கண்ட புருஷா மிருகம், நிமல தீர்த்தத்தில் நீராடியது. அனுட்டித்தது; கரை யேறியது. மலர்பறித்தது; கடவுள் பெருமானை ஆராதித்தது.

ஓடிக் கொண்டே யிருக்கிறுன் வீமன். விமல வழிபாடு முடிந்ததும், அது வீமனைத் தொடர்ந்தது.

அவனை ஒரு நொடியில் அணுகியது. கண்ட வீமன், வேறு ஒரு கல்லை யெறிந்தான். வீழ்ந்த இடம் ஒரு சிவாலயமாக விளங்கியது. பழைய படியே வழிபாடு. இப்படியே ஒவ்வொரு கல்லை யெறிந்து விட்டு ஓடுகிறுன். பூசையை முடித்து விட்டு அதுவும் புறப்படுகிறது.

அப்படிச் செய்து செய்து, அவனிடம் இருந்த தெய்வ மந்திரக் கல்லும் தீர்ந்தது. இந்திரப் பிரஸ்த எல்லையில் கால் வைத்தான், அந்தக் காற்றின் மைந்தன். ஒரு கால் அங்கு எனினும், ஒரு கால் என் எல்லையில் என்று, அக் காலை எட்டிப் பிடித்தது புருஷா மிருகம். என் நியாயமே நியாயம் என் கிறுன் வீமன். என்னிடத்தும் நியாயமுளது என் கிறது அது.

விவரம் உணர்ந்தார் தருமர். அங்கு விரைந் தார். விவாதத்தை அறிந்தார்.

தரும நந்தனு! நான் செய்வது அநியாயமா? நீயே சொல் என்றது புருஷா மிருகம்.

இந்திரப் பிரஸ்தத்தில் வைத்த கால் வீமனுக்கு உரியது. உடன்படிக்கைப் பேச்சுப்படி, அந்தக் கால் உமக்கே உரியது என்ருர் அந்தத் தரும மூர்த்தி.

புருஷா மிருக இதயம் புளகித்தது. தருமா! பேர்க்குப் பொருந்திய பெருமான் நீ! வாழ்க உன் வாழ்நாள். வளர்க உனது ஆட்சி. அரிய உனது தருமத்திற்கு அஞ்சுகிறேன். எந்தக் காலையும் வீமன் தரவேண்டா. வரத சிவத்தை இடையிடை வழிபட, அவன் வழி செய்தான். சோதனை செயவே வாதம் செய்தேன் என்று, புன் முறுவல் செய்தது புருஷா மிருகம்.

அதனுடன், அங்குவந்த கண்ண பிரானையும் கண்டது. வாழ்த்தி அவரை வணங்கியது.

புருஷா மிருகமே! பாண்டவர் நடத்தும் இராஜ சூயம் இனிது நிறைவேற, உன்னுல் ஆன உதவி களைச் செய்; இனிது அதுவரை இங்கேயே யிரு! மறவாதே என்ருர் மாதவர்.

ஆரம்பித்த வேள்வி நிறைவு பெறும்வரை, அந்தப் புருஷா மிருக உதவிக்கு அளவே இல்லை. தர்ம நந்தனர், சம்ராட் என்ற பட்டம் பெற்ருர்.

அதன் பின், புருஷா மிருகத்தை, திருவாத வூரில் தாபிக்கத் திருமால் எண்ணினர். வைசம்

பாயனர், தௌமியர், உரோம சன்மர், பிருகுச்சர், கௌண்டின்யரிடம், என்ன உங்கள் அபிப்பிராயம் என்றார். அவர்கள், கண்ணா! உமது கருத்தேதான் உயர்ந்தது என்றனர்.

பரந்தாமன், புருஷா மிருகத்துடன் புறப்பட்டார். திருவாதவூரை அடைந்தார். அமரர் பெருமானை ஆராதித்தார்.

வேத நாதா! வீமன் இதை நிலவுலகிற் கொண்டு வந்தான். இன்பம் தரும் சிவ ஸ்தலத்தில்தான் இது இருக்கும். தான் வேறிடத்தில் தங்காது. இந்தத் தலம், எல்லா வகையாலும் ஏற்றமானது. இது இங்கு இருக்க அருள் என்று, விநயம் காட்டிக் கண்ணபிரான் வேண்டினர். எம்பெருமான் அவர் எதிர் நின்றார்.

அச்சுதா! கற்ப காலம் வரை, அருவ நிலையில் இருந்து, இத்தலத்தில் இது சிறக்கக் காவல் செய்வதாக என்று அருளினர். அதனுடன் அதை அருளொடு நோக்கினர்.

புருஷா மிருகமே! எமக்கும் திருமாலுக்கும், உன் மேல் அன்பு என்றும் உண்டு என்று உவந்து உரைத்தார். அதன் பின் மூல இலிங்கத்தில் புகுந்தார் முதல்வர்.

அன்று முதல் புருஷா மிருகம், ஆலயத்தின் வடபுறத்து ஏரிக் கரையிலும், மாபெரும் கோயில் மதிலிலும், இருந்து விளங்கி இன்புறுகின்றது.

அதன் பார்வையில் அகப்பட்டார்க்கு, நாற் புறமும் பெருகிய பாவங்கள் நாசம் அடையும். இயம பயம் இல்லை என்பது இங்குள ஐதிகம்.

## 15. இராஜ சேகர பாண்டியர்

மதுரை சுந்தரர், கால் மாறியாடக் காரணரான இராஜ சேகர பாண்டியர் முன், ஒரு நாள் சதாநந்த முனிவர் வந்தார். அவரைப் பணிந்து எழுந்த பாண்டியர், அவர்க்கு ஆன உபசாரங்கள் அத்தனையும் செய்தார்.

ஸ்வாமி! மதுரை போல், அரிய தலம் ஒன்றை அடியேற்கு அறிவிக்கவேண்டும் என்று வேண்டினர்.

மன்னு! இம்மை மறுமை வீடு என்னும் மும்மையும் தருவது வாதவூர். பரந்தாமன் முதல் பலர் வழிபட்ட அப்பதி, இன்று கிலமாகி இருக்கிறது. சிறந்த அதை ஜீரணோத்தாரணம் செய்! சிவபிரான் அருள் சித்திக்கும். மறவாதே என்றுர் மாதவர்.

பாண்டியர் அப்போதே புறப்பட்டார். மந்திரிகள் முதலிேனுருடன், வாதவூர் இறைவரை வழிபட்டார்.

பிராகாரங்கள், மண்டபங்கள், கோபுரம் முதலியன சிறக்கத் திருப்பணிகள் செய்தார். ஆகமங்களை உணர்ந்த அந்தணர்களை, இனிது வழிபாடு செய்ய ஏற்படுத்தினுர். அவர் அன்பிற்கு உகந்த அம்மான், தரணிபர்க்கு ஒரு நாள் தரிசனம் ஆயினன்.

கருணை மூர்த்தியைக் கண் களிப்பக் கண்ட காவலர், என் பிறவி கடைத்தேறியது. எம்பெருமா! ககனர் காண இயலாத உம்மைக் கண்டேன் என்று, கண் மழை சிந்திக் களித்தார்.

அத்தா! இங்கு வந்து வழிபடுவோர், அறிந்தோ அறியாமலோ செய்யும் மாபெரும் பாவங்களை மன்னித்தருள்! அவர்கள் எண் வகைச் சித்திகளை எய்த அருள் என்று இறைஞ்சினர். அங்ஙனே ஆக என்று அமலர் அருளினர்.

பாண்டியர் ஜீரணோத்தாரணம் செய்த நாள் முதல், திருவாதவூர், பாண்டியர் புரம் எனும் பெயரும் பெற்றது. பண் சுமந்த பாடல் பரிசளிப்பான் கருணையால், இராஜ சேகரர்க்குப் பெருமித செல்வம் பெருகியது. குலோத்துங்கன் என்ற பிள்ளை யொன்றும் பிறந்தது. இறுதியில் அரசர், சிவ சாயுஜ்யம் எய்தினர்.

## 16. மகாசேன பாண்டியர்

உக்ர சேன பாண்டியர் மைந்தர், மகா சேனர். வாழ வந்த அவர் மனைவி பெயர் வஸுமதி. இருவர்க்கும் புத்திரப் பேறு இல்லை. வருந்தியது மனம்.

ஒரு நாள் மன்னர், அருந்தவ முனிவர்கள் இருக்கும் ஆஸ்ரமத்தை அடைந்தார். குறையை முறையிட்டார். அஞ்சாதே என்றார் அகத்தியர்.

மகா சேனா! சிவ பூஜை செய்! புத்திரப் பேறு சித்திக்கும். திரு ஆல வாயிலிலும், திருவாதவூரிலும் இருக்கும் மூர்த்திகள் சுயம்பு மூர்த்திகள். திருவாத வூர்க்குச் சென்று, வாழ்விக்கும் பரனை வழிபடு. எண்ணியது நிறைவேறும் என்றார்.

மன்னர், தேவியுடன் திருவாதவூர்க்கு நடந்து சென்றார். வேதியர்கள் வாழ்த்தினர். அந்நிலையில் தீர்த்தங்களில் நீராடினர். அரிய திரு நீறும் கண்டி

கையும் அணிந்தார். சிவ மந்திரங்களை உச்சரித்துக் கொண்டே சிவாலயத்துள் நுழைந்தார்.

சிவ வேதியர்களைக் கொண்டு, சிறக்க வழி பாடு செய்வித்தார். திருமறை நாதரை வாழ்த்தி வணங்கினர்.

பாண்டியா! உன் வழிபாடு கண்டு மகிழ்ந்தோம். இங்கு நீ எமக்குச் சூட்டிய கொன்றை மாலை, ஆல வாய் மூலத்தானத்திலும் அமைந்திருக்கக் காண்பை!

இந்த இரு இலிங்கங்களிலும், யாம் இருக்கின் றோம். சொருப நிலையில், விமலமாகி எங்கும் விளங்குவம்.

உனக்கு மகப்பேறு உண்டாகும். எதிர் காலத் தில், அவன் சிவபக்த மன்னனாய்ச் சிறந்திருப்பன் என்று, அமலர் அசரீரியாக அருளினர்.

பாண்டியர் மகிழ்ந்தார். பல தானம் செய்தார். மதுரையை அடைந்தார். சுந்தரேசரைத் தொழுதார். வாதவூரில் வேத நாதர்க்குச் சூட்டிய மாலை, சுந்தரர் மேல் இருந்ததை அறிந்தார். இதயம் மகிழ்ந்து இறைஞ்சினர்.

காலத்தில் வசுமதி கருவுற்றாள். அழகும் அறி வும் நிறைந்த உத்தம மைந்தன் ஒருவனை யீன்றாள். அம் மைந்தர், சத்ருஞ்சய பாண்டியர் என்று. பேருன சிறப்புப் பெயர் பெற்றார்.

திருவாதவூர் ஸ்ரீ ஆரண வல்லி சமேத ஸ்ரீ வேத நாயகரை ஆராதித்து, சகல செல்வ யோக மிக்க பெருவாழ்வை, இப்படியே பெற்று மகிழ்ந்தவர் பலர்.

இனி, திருவாதவூர் அடிகள் வரலாற்றில், சிறிது சிந்தையைச் செலுத்துவம்.

# திருவாதவூரர்

## தோற்றம்

அமுதினும் உயர்ந்த அருந்தமிழ் நாட்டிற் பழைமையின் உயர்ந்தது பாண்டிநன்னாடு. உலகெலாம் தந்த மலைமகளாரும், மறைகளும் காணாக் கறைமிடற் றிறையும், குன்றம் எறிந்த வென்றி வேல் பரனும் இருந்து அரசியற்றிய அதன் தலைநகர் மதுரை.

மதுரைக்குக் கிழக்கே பத்து மைல் தூரத்தில்' வைகை நதியின் வடகரையில் இருக்கிறது திருவாதவூர்.

அப்பதி வாழ் அந்தணர் குலத்தில், உதயம் செய்தார் ஒரு அருள் செல்வர்.*

---

* நேபாளத்துக்கு அண்மையில் உளது அமாத்ய தேசம்; அப்பதியில் இருந்த அந்தணர் அமாத்யர்;

விஜய நகரத்து அண்மையில் உளது அமாத்யம். அங்கிருந்து நான்கு குடும்பங்கள், துங்கபத்திரா நதிக் கரையில் குடியேறின. மாத்தியர், மாமாத்யர் என்ற மொழிகள், அம்மண்டல நடுவில் குலவி யிருந்தவர்களைக் குறிக்கும்.

தெலுங்கு நாட்டில் வைதீகி, நியோகி எனும் இருவகை வகுப்பினர் இருக்கின்றனர். நியோகி என்பது, மன்னரிடம் உத்யோகம் கொண்டவர் எனும் பொருளது. அந்தணருள் அவர்கள், சிறிது தாழ்ந்தவர்; அவர்கட்கு அமாத்யர், மந்திரி எனும் உயர்ந்த பட்டம் உண்டு.

# இளமை

ஊர் திருவாதவூர்; பேர் திருவாதவூரர். எதிர் காலத்தில் அருள் ஞான அமுதை அனுபவிக்க உள்ள இவர், இவ்வுலகில் கரும்பின் சாறும், முக்கனி ரசமும், பாலும் தேனும் கலந்து பருகினர். இன்பும் துன்பும் காணுதார். இயமன் கணக்கில் சேராதார். தவமணம், திருநீற்றின் தன்மணம், தவருத சிவமணம் தழைக்க உதவும் தனிப்பெருங் கல்வி முதலியன, அவரில் தனிமணம் கமழ்ந்து தழைத்தது.

எந்நூலும் ஓர்ந்த அவர் மார்பில், முந்நூலும் இருந்தது. ஓதியதை உணர்ந்தார். சீலத்தால் சிறந்தார். உள் ஒழுக்கத்தில் உயர்ந்தார்.

---

அப்படியெல்லாம் இல்லை. இவர் ஆராத்தியர். அது கூடச் சரியல்ல; அவர் ஆதி சைவர்; வேளாப் பார்ப்பார்.

இவர் சம்புபாத ஆஸ்ருதர் தநயர்.

அது தவறு. இவர் சுந்தர நாதர், சிவஞானவதி எனும் தம்பதிகள் தந்த தநயர்.

கயிலையி லிருந்த கணநாதர்; கயிலைச் சித்தர்; நந்தீசர்; மலையாளவாசி என்றெல்லாம், வாதவூரடிகளின் முன்னைய பிறவி, பின் வந்த குலம், தாய் தந்தையர் செய்திகள் முதலியவற்றில் முரணிக் குழப்பம் செய்து, ஒன்று விட்டு ஒன்று பற்றி நாடு ஊசலாடுகின்றது.

இக் குழப்பம் கண்டு தாமும் குழம்பாமல், இக் குழப்பம் வாதவூர் அடிகளின் தொன்மையை அறிவிக்கிறது என்று, அமைதி காண்பது அறிஞர் நிலை.

திருவாதவூரில் எழுந்தருளிய வேத நாதரை, அல்லும் பகலும் ஆராதித்தார். அதன் மூலம், சிந்தையில் நிறைந்தது சிவபக்தி.

கலைநிறை மதிபோல், **பதினாறு வயதில்**, பரவி இவர் புகழ் எங்கும் படர்ந்தது. இங்ஙனம் எல்லாம், இவர் இளமை நலத்தை உவந்து நூல்கள் உரைக்கின்றன.

## பதவி நிலை

அந்நாள் பாண்டியர் அரிமர்த்தனர். இவர் செய்தி, அவர் செவிக்கு எட்டியது. 'அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும்' அல்லவா.

அவரை ஒருநாள் மன்னர் அழைத்தார். அளவளாவினார். மதிநலம் கண்டார். மந்திரியாக்கினார். பதவி யேற்றபின் வாதவூரர், காவலர்க்கு வழிகாட்டும் கண்ணானார். கலந்து வாழுமாறு குடிகளைக் காத்தார். தரணிபர்தம் புறப்பகைகளைத் தணித்தார். உள்நாட்டுக் கலகம் ஒருநாளும் இல்லை. ஒருவரோடு ஒருவர் குடிகள் உறவு பூண்டனர்; உவந்து வாழ்ந்தனர். வாதவூரர் காட்டிய வழியில், இப்படிப் பயன் பல அடைந்தது பாண்டி நாடு.

அவர்தம் முதிர்ந்த அறிவு கண்ட அரசர், அவரை முதல் அமைச்சராக்கினர். **தென்னவன் பிரமராயன்** என்ற பட்டம் சூட்டினர். பலர் அறியப் பாராட்டினர்.

நிலையாக மதிக்குடை நிழற்ற, உரிய சிவிகையூர்ந்து, வீசுவார் கவரி வீச, ஏற்றம் பெற்ற யானை

மேல் ஏறிச்செல்லும் அளவிற்கு, உவந்து அரசர் அவரை உயர்த்தினர்.

படைத் தலைவர் புடை சூழ, விண் மீன் நடுவில் வெண்மதிபோல, வித்தகராகி வாதவூரர் அந்நாளில் விளங்கி யிருந்தார். உயரும் அவர் வளர்ச்சி கண்டு, உயர்ந்தோர் உவந்தனர். வாழ்த்து எங்கும் வளர்ந்தது. என்றும் செருக்கு இருந்தது இல்லை. அதனால், வர வர அவர் சிறப்பு வளர்ந்தது.

## சிந்தனை

வாதவூரர், அமைச்சியல் முடிந்து ஓய்வு கொண்ட போதெல்லாம், ஊன்றி உலகை உணரலாயினர்.

பசும் கொடி, பச்சைச் செடி, பசுமை மரம் முதலியன, பயன் தந்தது ஒரு காலம்; பட்டுப் போவது ஒரு காலம்.

மண்ணில் இருந்தது புழு. தன்னிலை யறியாமல், அது தருக்கி யிருந்தது. ஒரு நாள் சிறுகாற்றடித்தது. மோதும் அதைத் தாங்க முடியாமல், புரண்டு உருண்டது புழு. ஓடிவந்தான் ஒருவன். தெரியாதே மிதித்தான். அது இறந்து ஒழிந்தது.

படமெடுத்து ஆடியது பாம்பு. பார்த்தது கீரி. பாய்ந்து அதனைப் பற்றியது. இரண்டும் புரண்டன. பதைத்துத் துடித்து இறந்தது பாம்பு.

ஒரு மனையில் பிறந்தது ஒரு மகவு. குடும்பம் அந்நாளைக் கொண்டாடியது. மழலை காட்டி

யாவரையும் மயக்கிய மகவு, பிறந்த சில மாதத்தில் இறந்தது. கொண்டாடினர் அன்று; குமுறினர் இன்று.

மணந்த தம்பதிகள், சில நாள் களித்து இன்பம் கண்டனர். இறுமாந்திருந்தனர். ஒருநாள், ஒருவரை விட்டு ஒருவர் இறந்தார். இறந்தவரைப் பார்த்து, இருந்தவர் கதறினர்.

பட்ட காலிலே படுகிறது; கெட்ட குடியே கெடுகிறது.

ஒரு காலத்தில் மினுக்கிய மேனி, மற்று ஒரு காலத்தில், வெறுக்கும் நிலையில் எலும்பும் தோலுமாகி இளைத்தது.

வறுமையில் ஆழ்ந்தார். செல்வத்தின் உயர்ந்தார். மாறி அமைந்தார். நோயில் நொடிந்தார். பூகோளத்தில், எங்கும் என்றும் இந்தப் புழுக்கம். சீ! என்ன உலகம் இது? அட பாவமே!

## இயற்கையின் அறிவிப்பு

உதயம் செய்கிறது மதி. வளர்கிறது. நிறைகிறது. தேய்கிறது. மறைந்தே போகிறது ஒரு நாள் அந்த மதி. மாதந்தோறும் இந்தக் கூத்து. முப்பது நாளில் முடியும் நாடகம்.

காலையில் உதிக்கிறான் கதிரவன். கடுமை வளர்ச்சியைக் காட்டுகிறான். உச்சிக்கு வருகிறான். உக்கிர குமாரன் ஆகிறான். சாயும் காலம் சார்கிறது. அந்தி நேரம் என்றனர். மேலைக் கடலில் வீழ்ந்து, மறைந்தே போகிறான் ஆதித்தன். நாழிகை

முப்பதில், இப்படி முடிகிறது நாடகம். இதைக் கண்டு, நிலதலம் ஏமாந்து நிற்கிறது.

எங்கும் ஒரே இருள். ஆரவார உலகம், சிறிது சிறிதாக அடங்குகிறது. நள்ளிரவு. ஒரே நிசப்தம். மறுபடியும் வந்தேன் என்று வைகறை வருகிறது. கோழி கூவுகிறது. சிறிது நேரம் ஆனதும், முன் போல் பரிதியின் உதய படலம். பழையபடியே சராசர ஆரவாரச் சந்தை. அறுபது நாழிகையில், இப்படி ஒட்டமும் ஒடுக்கமும் உண்டாக்கி, நிலையா மையை இயற்கை நினைவூட்டுகின்றது. நினைவு இது எவர்க்கும் நெஞ்சில் இருந்தால், எவ்வளவு நன்ரு யிருக்கும். அதன்பின் அக்ரமம் அழியும்; கிரமம் வாழும்; அதர்மம் ஒழியும்; தர்மம் உயரும். ஏன் இதை எவரும் எண்ணுவது இல்லை? ஒவ்வொரு நேரத்தும், வாதவூரடிகள், இங்ஙனம் எண்ணி மனம் கண்ணினர்.

"தீத்திற வினையினாலே சிறைப்படும் உயிரை யெல்லாம்
பார்த்தனர்; உலக வாழ்வில் பயனிலை யென்று தேர்ந்து"

ஆம். ஆம். இப்போது தெரிகிறது. அழுக்கு மனத் தால், இறப்பும் பிறப்பும் எய்துகிறது. வாழ்க்கையில் ஆகாமியம் வளர்கிறது. வினையே ஆன்மாவின் விலங்கு. பந்தப்பட்ட உயிர், அதன் பயனாக, அள விலாத் துன்பங்களை அனுபவிக்கின்றது.

உலக வாழ்வில் ஒரு பயனும் இல்லை. இது, கண் கண்ட அனுபவம். அறிவு நூற்களும் இதைத் தான் அறிவிக்கின்றன. நீள இவைகளை நினைத்தார். விரக்தியே பெருகி விளைந்தது.

"கூத்தினர் தன்மை வேறு; கோலம் வேறு ஆகுமாபோல்,
நீத்தனர் மனத்தில்; முன்போல் நிகழ்த்தினர் வழுதி நீதி"

பொய்யே பேசிப் பொழுது போக்குவான் ஒருவன்; அவன், தன் நிலைக்கு மாறான அரிச்சந்திர வேடம் தாங்கினான். மேடை யேறினான்; மெய்யே பேசினான்.

கற்பு இலக்கணம் காணா ஒருத்தி, நல் சாவித்ரி வேடத்தில் நடித்தாள். கோலம் வேறு; இயல்பான கொள்கை வேறு.

கொள்கைக்குப் பொருந்தாத கோலம்; கோலத்திற்கு ஒத்த கூத்து.

தண்ணீரில் மலர்கிறது தாமரை. பார்ப்பார் பார்வைக்குச் சம்பந்தம்; உண்மையில், இரண்டிற்கும் ஒட்டு பற்று ஒன்றும் இல்லை.

அதுபோல், உலக வாழ்க்கையைப் புறத்தே தழுவினர்; அகத்தே துறந்தவர் ஆயினர். உத்யோக தர்மம் மட்டும் ஒழுங்காக நிகழ்கிறது.

## ஆகமத்தின் அறிவிப்பு

மாய்மாலம் செய்கின்ற மலங்களும், எழுவகைப் பிறவிதோறும் பேதப்படும் உடம்பும் உயிரும் ஒடுங்கும் விதமும், பந்தமும் வீடும் பாலித்து, பேரருளால் விமலன் நடத்தும் விதங்களையும், அருமையாக ஆகமங்கள் அறிவிக்கின்றன. இவைகளை இடையிடை எண்ணினார்; அதன் பயனாக, இம்மை ஆசை இகந்தது; மறுமை வேட்கை மிதந்தது; மனம் தூய்மை அடைந்தது.

உயிர் வேறு, இறை வேறு. சத்தினிபாத உத்தம உயிர்க்கு, பரமனிடம் விளைகிறது பக்தி. பக்தி செய்தால் முத்தி. இது பேத நிலை பேசும் அருமை ஆகமங்களின் அறிவிப்பு.

இறை, உயிர் என இரண்டு பொருள் இல்லை.

சிவோஹம். சிவோஹம். சிவோஹம். இந்த அபேதம், வேதத்தில் உள்ள விளக்கம்.

முதல்வன் நூல்கள் இரண்டும், இப்படி முரணுகின்றனவே! வித்தக இவ்விரு கருத்தையும் விளக்கி, உய்திக்கு வழி செய்யும் ஒருவரே குரு.

எங்கே இருக்கிறார்? என்று கிடைப்பார் அவர்? ஏக்கம் வலுத்தது. தூக்கம் தொலைந்தது. கற்ற கல்வி இங்குக் கை கொடுக்கவில்லை. தாகவிடாயைக் கடல் நீர் தணிக்குமா?

" சாத்திரத்தை ஓதினர்க்குச், சற்குருவின் தன்வசன
மாத்திரத்தே வாய்க்கும் நலம் வந்துறுமோ"

என்று பாடுகிறது திருக்களிற்றுப்படியார்.

மணந்தவனிடம் காட்டும் மங்கை அன்பை, மற்றவர் அறிய முடியாது. அதுபோல், உமாபதியிடம் உள்ளன்பு; வேந்தரிடம் உத்யோகம்; இது இன்றைய வாதவூரர் இருப்பு.

## காவலர் கட்டளை

சாமரை வீசினர் தையலர். அந்தணர் முனிவரர் அணுகினர். பலர் பரவரும் புகழ் பாடினர். இந் நிலையில், அழகிய மணிமுடி அரசர், எடுப்பான அரியணையில் இருந்தார்.

அச் சமயம், குதிரைப் படைக் காவலர் குறுகினர். வணக்கம் செய்தனர். வாய் பொத்தி நின்றனர்.

மன்னர் பெருமா! கிழக்குக் கடற்கரையில், அளவிலாத குதிரைகள், விலைக்கு வந்திருக்கின்றன என்று, விநயம் காட்டி உரைத்தனர்.

கேட்ட மன்னர் மனம் கிளர்ச்சி யடைந்தது. உடலும் உயிரும் போல் இருந்த தலைமை யமைச்சரை நோக்கினர்.

பொறுக்கான குதிரைகளைப் பொறுக்கி வாங்க, தாங்களே போய் வருவது நல்லது; என்ன சொல்கிறீர்கள்? என்ருர்.

அப்படியே செய்வம் என்ற அமைச்சரை, அரண்மனைக்குள் அரசர் அழைத்துச் சென்ருர். கருவூலத்தில் இருந்து, நாற்பத்தொன்பது கோடி பொன்னை எடுத்தார்; அவரிடத்தில் கொடுத்தார்.*

---

* வானவர் கயிலைக்கு வருவர். வரத சிவத்தை வணங்குவர். மலையில் படும் அவர் மகுடம். அதனுல், பொன்பொடிகள் சிந்தும். மறுநாள் வைகறையில், சரியைப் பணியர் அலகிடுவர். பொன் பொடிகளைச் சேர்ப்பர். குப்பை போல எடுப்பர். கோயில் வாயிலில் கொட்டுவர்.

ஒருநாள் வைகறையில், வழிபட தூர்வாசர் வந்தார். சிவவழிபாடு செய்தார். மீண்டபோது, கனகக் குப்பைகளைக் கொட்டுவதைக் கண்டார். தாமும் ஒரு பணி செய்ய நினைத்தார். ஒரு குப்பைத் தொகுதியில், யோக தண்டத்தை ஊன்றினுர். தவசக்தியால் அது, யோக



ஸ்ரீ சுப்ரமண்யர் அற்புதத் திருவுரு (பக்கம் 14)

புனித நேரத்தில் வாதவூரர் புறப்பட்டார். திருக்கோயிலுள் புகுந்தார். வாழ்விக்கும் அங்கயற் கண்ணியை, சுந்தரேசருடன் வணங்கினார். அங்கிருந்து வெளிப்பட்டார். சிவிகையில் ஏறினர். பரிசனர் தொடர்ந்தனர். காதம் பல கடந்தனர். சென்ற வழி மாறியது. தெய்வ வழியே தோன்றியது.

---

தண்டத்தில் ஒன்றியது. புறப்பட்டார். பொழுது விடிந்தது. பகலாயிற்று. மாலை வந்தது. இருள் கவிந்தது. ககன வழி வந்த அவர் கண்கள், மதுரைப் பதியைக் கண்டன. நிலத்தில் இறங்கினர். கோபுர வாயிலில், ஒட்டியிருந்த பொன் பொடியைக் கொட்டினர்.

. அதன்பின், புனித ஆலயத்துள் புகுந்தார். ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசரை வணங்கினர். அங்கிருந்து மீண்டார். சிறக்கத் தம் போக்கில் சென்றார்.

அந்நாளில், பாண்டிநாடு ஆண்ட பார்த்திபர், வழிபாடு கருதி வைகறையில் வந்தார். வாயிலில் இருந்த கனகப் பொடியைக் கண்டார். விம்மிதம் கொண்டார்.

"கொண்டு போ! கருவூலத்தில் வை! காலம் வரும்; பயன்படும்" என்று, அந்தரத்தில் பிறந்தது அசரீரி. வியந்த வேந்தர், அப்படியே கொண்டுபோய் வைத்தார். வழிவழி வந்த மன்னர் கண்கட்கு, அப்பொன் அகப்படவில்லை. அரிமர்த்தனர் கண்கள் அறிந்தன. அப்பொன்னைத் தான் அமைச்சரிடம் ஆர்வமொடு கொடுத்தார் அரசர். அவ்வரலாற்றை, "ஈனமில் நெறி வந்தபொன், ஏழெழு கோடி வழங்கினன்" என்று, கனிவொடு பாடினர் கடவுள்மா முனிவர்.

## ஏறு துறை

வீணான பிறவிக் கடலில் வீழ்ந்தவர்க்கு, சிவ நாமத் தெப்பமே சிறந்த துணை. நேரும் அதனில் தாவலாம். திருவருள் துறையில் ஏறலாம். இப்படிப் பேறுதரும் துறை பெருந் துறை.

திருப்பெருந் துறையில், பெயர்க்குத் தக்கபடி, நிழல் தரும் தருக்கள் நிறைந்திருக்கின்றன. மலர்கள் எங்கும் மணம் கமழ்கின்றன. மயில்கள் ஆடுகின்றன. வண்டுகள் பாடுகின்றன. குயில்கள் இனிது கூவுகின்றன. மான் கன்றுகள் துள்ளு கின்றன. கண்ட கண்கள் களித்தன. பெருந் துறையுள் புகுந்தார். இதயம் பெருமிதம் எய்தியது.

## தெய்வ அழைப்பு

ஹரஹர! ஹரஹர எனும் இனிய ஒலி, காற்றில் அலைபோல் கலந்து வந்தது. செவிக்கு இன்பம் செய்தது.

என்ன நிகழ்கிறது? எங்கிருந்து வருகிறது இவ் ஒலி? இதை எழுப்பியவர் எவர்? போ! பார்த்து வா என்று, ஒரு ஏவலனை அடிகள் ஏவினர். சென்றவன் விரைந்து திரும்பினன்.

அமைச்சர் பெருமா! ஒரு மேடை கண்டேன். நடுவில் ஒரு மரம். வீறு தோன்ற, நிழலில் ஒருவர் வீற்றிருக்கின்றார். அவரைச் சுற்றி ஆயிரவர். அவர் என்னமோ சொல்கிறார். கேட்கும் இவர்கள் இப்படிக் கிளர்ச்சி செய்கிறார்கள் என்றான்.

அதைக் கேட்டதும் வாதவூரர், சிவிகை விட்டுக் குதித்தார். ஓட்டம் பெருநடையாக ஓடினார். உரிய இடத்தை அடைந்தார். இன்ப அமைதி அங்கு இருந்தது.

## புனித மொழி

அமல ஆகமங்களை ஆய்வார். அளவு காண்பார். அயர்வு அடைவார். தொன்மை அடியார் இவர்கள், தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதின்மர். நலம் மிக்க இவர்கள் நடுவில், எம்பெருமான் குருமூர்த்தியாகி இருக்கின்றான். கண்ட மனம் களித்தது. கதித்த இதயம் குதித்தது. பெருகியது பேரன்பு.

அவரை அணுகினார். மனத்தால் வணங்கினார். வணங்காதவர் போல் வந்தார். நெகிழ்ந்து நெருங்கினார்.

திருமுடியில், திருச்செவியில், திருமார்பில், கண்டத்தில், கண்ணுதலின் அக்கமணி கண்டார். திருநீறு சண்ணித்த திருமேனி கண்டார். பொன்மயமாய் உருவம் பொலிவதனைக் கண்டார். குருந்தடியில் இருந்த குருவின் திருமேனி, இன்ப அன்பால், தன்னை யீர்ப்பது போல இருந்தது.

ஸ்வாமி! ஏதோ ஒரு புத்தகம் திருக்கரத்தில் இருக்கிறதே! என்ன புத்தகம் அது? என்றார்.

இது, சிவ ஞான போதம் என்று வாய் மலர்ந்தார் குருமூர்த்தி.

ஒரு நூலிற்குப் பெயர் சிவம்; ஞானம்; போதம். இப்படி மூன்று பெயர் இருக்க வேண்டுமா? அம்

மூன்றன் பொருள் யாது? அறிவித்தால், உம் மலரடிகளில் அடைக்கலம் ஆகிறேன்.

சிறந்த மெய்ப்பொருள் சிவம்; அதை யறிவது ஞானம்; தெரிந்த அதைத் தெளிந்து நிற்றல் போதம்.

உத்தம குருவின் உரை, சுருக்கமாக உயர்ந்த உரை. அம்பலத்தில் ஆடுவார், எனையாள இன்பத் திருமேனி கொண்டார். இங்ஙனம் எண்ணுகிறது. புண்ணியம் நண்ணிய அவர் புனித மனம்.

## வேண்டுதல் வேண்டாமை

"மின்னினும் நிலைமை யில்லா விழுப்பொருள்
யாவும் வேண்டேன்:
உன்னடி யடைந்து நாயேன், உறுபவம்
ஒழித்தல் வேண்டும்;
என்னை இங்கு அடிமை கொள்வாய்!
எம் உயிர்க்கு இறைவா!"

எவையும் நிலையிலாதன. எனினும் மினுக்குவ. உணர்ந்தும் அதனில் உறவு.

உலகமே துன்ப உருவம். ஒட்டி இனி இதனில் உறவு கொள்ளேன். இது நிச்சயம். எனினும், நாயைக் குளிப்பாட்டி நடுவீட்டில் வைத்தாலும், அது வால் கிளப்பிச் செல்லும்; வழியல்லா வழி சென்று தாழும். அதுபோல் கற்றதும் கேட்டதும், கண்டதும் விண்டதும் கடைப்பட்டுப் போக, மீட்டும் மீட்டும், சிந்தை நாற்றச் சேற்றையே நாடும்.

புனித உம் திருவடிகளே எனக்குப் புகலிடம். வழுக்கும் பவமழிய அதுவே வழி. ஆன்ம நாயகா! அடியேனை இன்று முதல் அடிமை கொள்ளும் என்று, கண்ணீர் பெருக்கிக் கதறினர்.

## உபதேசம்

அங்கு இருந்த அடியார்களுள் ஒருவர், ஆர்வல் காட்டி எழுந்தார்,

ஸ்வாமி! இவர் முத்தி விருப்பர். அதி தீவிர பக்குவி. இவரது பொல்லாத வினைகளைப் போக்கி யருளும். ஆண்டு அருள் புரியும் என்று, தொழுத கை தலைமேல் ஏற்றித் துதித்தார்.

நாளும் கோளும் பார்ப்பது நல்லது; எனினும், நைந்தவர்க்கு உதவ நாள் பார்க்க வேண்டா. ஆதலின், இன்றே இவர்க்கு அருள வேண்டும் என்று எண்ணியது! திருவுள்ளம்.

வாதவூரா! வருந்த வேண்டா. உன்னை ஆட் கொள்ளவே இங்கு வந்தோம் என்று, அருள் நோக்கம் பாலித்தார் அமலர்.

நள்ளிரவு. அகில உலகமும், அமைதித் துயிலில் ஆழ்ந்திருக்கின்றது.

குருநாதர், வாதவூர் அடிகளை, அடிமுதல் முடி வரை நோக்கி யருளினர். ஐந்தெழுத்தின் அருள் நிலைகளை அறிவுறுத்தினர். சென்னிமேல் திருவடி களைச் சேர்த்தார். பாச நீக்கமும் சிவப் பேறும் பாலித்தார். அவ்வளவுதான்.

அதன் பின், அடிகள் தம் வசம் இழந்தார்; பரவசம் அடைந்தார். பேரா இன்பப் பெருவெளியில் உண்டான ஆரா இன்ப வாரிதியில் ஆழ்ந்தார்.

" ஐயனே ! எனை ஆண்டருள் புரியும்
ஆதியே ! உமையணி மழு இருக்கும்
கையனே ! கொடும் காலனை முனியும் காலனே !
இரு கண்ணினுள் மணியே !
செய்யனே அடி போற்றி ! என் பெரிய
செல்வமே அடி போற்றி ! பொய்யினர்தம்
பொய்யனே அடிபோற்றி ! எவ்வுயிர்க்கும்
போதமே அடிபோற்றி என்(று) அழுதார்."

அவ்வளவில், அவரிடம் இருந்த மாயை இருள் அகன்றது. இதயத்தில், பெருகிய ஞான தீபம் பிரகாசித்தது. கீழ்க் கடலில் பரிதியும் உதயம் செய்தான்.

## அனுபவ ஞானம்

உலகநிலை, கடவுள் நிலை, உயிர் நிலைகளையும், வேத ஆகமங்களில் இலை மறை காய்போல், நுனித்து உணர உள்ள நுட்பங்களையும், விரிவாக விமலர் விளக்கி யருளினர்.

வேத அபேதம், ஆகம பேதம் ஆகியவை வெறும் சொல் போர்; அனுபவத்தில் அறியவுள செய்திகளை, சொல்லால் முழக்கிலோ சுகமில்லை; சும்மா இரு ! விரிவாக எதுவும் விளங்கும் என்று, குறிப்புப் பல அருளினர் குருநாதர்.

சிவனார் அருளியவைகளைச் சிரவணித்தார். விமலர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினர். தேனும்

பாலும் கருப்பஞ்சாறும், அமுதமுமாய்த் தித்தித்தது குருமொழி. அது, ஊனும் உளமும் உருக்கியது. உள்ளொளி எழுந்தது. பேரின்ப ஆறு பெருகியது. கனிந்த அது புறத்தில் கசிவது போல, அழியாத ஞான வாணி, தானே வந்து அன்பர் நாவில் தங்கினள். சிவனது அநாதி முறைமையான தொன்மையை,

"நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்னெஞ்சின் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க"

எனும் சிவபுராணத்தைச் சிறக்கப் பாடினர்,

அதன் பின் பொங்கி யெழுந்த சிவப் புகழை,

"தில்லை மூதூர் ஆடிய திருவடி"

எனும் கீர்த்தித் திரு அகவலில் கிளத்தினர்.

அண்டமாகியும், அதனுள் அனைத்துமாகியும் இருக்கும் அற்புதத்தை,

"அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்"

என, திருவண்டப் பகுதியில் திறம்பட அருளினர்.

உமாபதியே உலக காரணன் என்று உணர்ந்து,

"நான்முகன் முதலா வானவர் தொழுதெழ"

எனப் போற்றித் திருவகவலைப் போற்றினர்.

## தீட்சா நாமம்

மாணிக்கமாகிய சொற்களை வரிசைப் படுத்தி, அன்பு நாணிலுல் கோத்த அருமை மாலையை அமுது சூட்டிய அடிகளை, குதூகலித்து நோக்கினர் குருநாதர்.

அன்பனே! இன்று முதல், மாணிக்க வாசகன் என்று, அன்போடு உலகம் உன்னை அழைப்பதாக என்றருளினர்.

பாட்டிற்கு இன்புறும் பரமன் திருப்பாதங்களில் கண்ணீர் ஆட்டினர்; சொல்மாலை சூட்டினர். உயிர்ப் போத உணவை ஊட்டினர். பரஞானக் கனலை மூட்டினர். இங்ஙனம் செய்யும் சிவபூசனையில், அடிகள் சிறந்திருந்தனர்.

ஆசையால் வரும் பிறவி வாசனை அகன்றது. அங்கிருந்த அடியவர்கள் ஓதும் ஆகமப் பொருளை யும், உபநிடத உயர் பொருளையும் அனுபவித்துக் கொண்டு, ஆநந்தமாக இருந்தார்.

பயனுள பதிகங்கள் பல பாடினர். சிரித்த முகம். இன்பக் கண்ணருவி. மணிமாலை. திரு வாசகத் தெய்வ மொழி. சாந்த மேனி. புளகித நிலை. இது, இன்றைய மாணிக்க வாசகர் திரு வுருவம்.

## சர்வசங்க பரித்யாகம்

பரி வாங்கக் கொணர்ந்த பொருள்களை, உடலை, உயிரை, அடிகள் உரிய பரனிடமே ஒப்படைத்தார். தம் பொருள், பிறர் பொருள் என்னும் வேற்றுமை நினைவு விளையவே இல்லை. தன்னிடம் இருந்தவை, தற்பரன் உடைமை. உணர்ந்தது இங்ஙனம் உள்ளம், மேம்படு பாண்டியர், இதனால் மேல் நிலை எய்துவர் என்ற நினைவு கூட இல்லை. சித்தம் சிவமயமாக இருந்தது. சிவ ஒளி, சிறக்க உணர்த்திய வழியே செயல் செய்தார்.

## அவர் நிலை

பதி அருள் பாலித்த பரம குருவை, பார்த்த கண் வாங்காது பார்ப்பார். ஆனந்தக் கண்ணீர் பெருக அழுவார். கரம் கூப்பித் தொழுவார். வீழ்ந்து வணங்குவார். அன்பு கொண்டு எழுவார். புறங் காட்டாமல் போவார். மீண்டும் திருமுன் வருவார். இரவு பகல் அறியார். சிவஞானமே பொருளாக் கொண்டார். பித்தர் பாலர் பேயர்போல இருந்தார்.

இன்ன நிலையின ராகலின், இது நம் பொருள்; இது பிறர் பொருள் என்னும் நினைவு இருக்க இயலுமா? அதனுல்தான், பரிவாங்கக் கொணர்ந்த பொருளையும், அமல குருவிடமே அர்ப்பணித்தார். சித்தம் சிவமானுர் செயல் இது.

"சித்தம் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும் அத்தன்"

அருளிய நெறியில், கொடுத்த பணம் கொண்டு ஒரு கோயில் கட்டினுர். குளம் வெட்டினுர். திருப் பெருந் துறையை, ஒரு திருநக ராக்கினுர். இப்படிப் பயனுள திருப்பணிகள் பலவும் செய்தார்.

## நிருபர் நிருபம்

குதிரை வாங்கிவர உடன் வந்தவர், அடிகளின் நிலையை உணர்ந்தனர். வந்த செயலை அடியொடு மறந்தனரே என்று வருந்தினர். அணுகவும் அஞ்சினர். துணிந்து நெருங்கினர். இன்னும் குதிரைகள் வாங்கவில்லை; புறப்பட்டுப் போவம்.

"ஐய! நீர் வருதல் வேண்டும்"

என்று விநயம் காட்டி விளித்தனர்.

குதிரைகளா? என்ன சொல்கிறீர்கள்? யார் நீங்கள்? பொல்லாத மாயையின் பொய் புகல வேண்டா. முன்னிற்க வேண்டா! போய் விடுங்கள்! என்று பொரிந்தார்; உடனே அடிகள் உள் முகமானார்.

படைவீரர்கள், செய்வது அறியாது திகைத்தனர். நிலைமையை நினைத்தனர். நெஞ்சம் நைந்தனர்.

உலக நினைவை ஒருவினர்; உரைத்ததையும் மறுத்தார். எதற்கும் மன்னரிடம் உரைப்பது நலம் என்று எண்ணினர். விரைந்தனர். மதுரையை அடைந்தனர். அரசரை அணுகினர். வணக்கம் செய்தனர்.

மன்னர் பெரும! தலைமை யமைச்சர், அறிஞர் ஒருவரால் ஆட்கொள்ளப் பட்டார். கொண்டு போன பொருள் கொண்டு கோயிலைக் கட்டினர். குளம் வெட்டினர். திருநகர் சமைத்தார். கோவணமும் நீறுமான கோலமே கொண்டார். இப்போது திருப்பெருந் துறையில் இருக்கின்றார். எவ்வளவோ எடுத்து உரைத்தோம்; செவி சாய்த்திலர். சீறுகின்றார். செய்வது அறிந்திலம். திரும்பி வந்தோம் என்று உரைத்து இறைஞ்சினர்.

கேட்டார் வேந்தர். வியர்த்தது மேனி. கொதித்தது நெஞ்சம். கண்கள் சிவந்தன. அரசர்கட்கு இத்தகைய அமைச்சர்கள் இருந்தால், குறை ஒன்றும் இல்லை யென்று கோப நகை செய்தார்.

ஏவலர் மூலம், அரசர் ஆத்திரத்துடன் ஒரு நிருபம் அனுப்பினர். அவர்கள் திருப்பெருந்துறையை அடைந்தனர். மாணிக்க வாசகரிடம், காவலர் ஓலையைக் காட்டினர்.

சிவமுகமன்றிப் பிறமுகம் காண மனமிலாத வாதவூர் மாதவர், வந்தவருள் ஒருவனைப் பார்த்தார். வந்த திருமுகத்தை நீயே வாசி என்றார்.

"தென்னவன் எழுதும் ஓலை;
தென்னவன் பிரமராயன்
என்னும் நல் அமைச்சர் காண்க;
எல்லையில் தனம்கொண்டு ஏகி,
கொன்னுறு பரிகொளாமல்,
கோவணம் கொண்டீர்; ஈது
மன்னவர் கருமம் செய்வார்
வண்மை யென்று உவகை யுற்றேம்"

"வையக மன்னராகி வாழ்வதின்,
மனைகள் தோறும்
எய்திய உதரத் தீயால்
இரப்பது பெருமை யென்றும்;
மெய்தகத் தம்மை யாண்ட
வேந்தரைப் பிழைத்து, வேறு
செய்வது பலிக்கு மென்றும்
தேர்ந்த நூல் துணிவு கண்டேம்"

"மன்னரை யடைந்து வாழ்தல்,
வஞ்ச நஞ்சு உமிழும் நாகம்
தன்னுடன் மருவி வாழும்
தன்மை யென்று உணர்திராயின்,
துன்னும் இவ்வோலை காணும்
பொழுது, நம் தூதரோடும்
இன்னகர் வருக! (இங்ஙனம்)
மாறன் எழுத்து"

என்று வாசித்து முடித்தான்.

என்ன அதிசயம்! ஆண்டவனுக்கு நான் அடிமை! அரசனுக்கு நான் அடிமை யென்பதை யல்லவா இத் திருமுகம் அறிவிக்கிறது? நான் பிழை செய்தேனும்! உடனே வரவேண்டுமாம்!

அடியேன் அமலனிடம் உளன்; எமன் விடுத்த ஓலைகொண்டு, தூதர் எம்மை அணுக அஞ்சுவர். அடியவர் எவர்க்கும் அஞ்சார். தேர் வேந்தர்க்கு இது தெரியவில்லையே என்று வருந்தி எழுந்தார். விமலரிடம் இச் செய்தியை விண்ணப்பித்தார்.

## தெய்வ வாக்கு

மாணிக்க வாசகா! வருந்தாதே! தூதரொடு போ! விலை மதிக்க முடியாத இந்த மாணிக்கத்தை, கோபதியிடம் முதலில் கொடு. ஆவணி மூலத்தன்று, குதிரைகள் சில மதுரைக்குக் குதித்து வரும்; பாய்ந்து வரும் பரிகள் பல. அவைகட்குச் சாலைகளை அமைக்க என்று அறிவித்து வை! பழைய கோலத்தில் புறப்படு என்று, அருளொடு அறிவித்தான் அமலன்.

## அமைதி நிலை

அடிகள் உடனே அமைச்சர் கோலம் தாங்கினர். தூய இறைவனைத் தொழுதார். புறப்பட்டார். மதுரைக்கு வந்தார். அரசரை அணுகினர். கையுறையாக, கொணர்ந்த மாணிக்கத்தைக் கொடுத்தார்.

அரசே! வளம் மிக்க பரிகள், ஆவணி மூலத்தன்று வரும். அதை அறிந்தேன். நல்லதென்று புறப்பட்டேன். இடை வழியில் இருந்த திருப்

பெருந் துறையில் தங்கினேன். கெடு மதியாளர், இங்குக் குழப்பம் செய்தனர். அதைத் திருமுகத்தால் அறிந்தேன். உடனே புறப்பட்டு வந்தேன் என்றார்.

அதைக் கேட்டபின், ஓலை எழுதியது பிழை யென்று வேந்தர் உணர்ந்தார்.

அவசரப் பட்டு விட்டேன்; இனி இதை மறந்து விடுவம் என்ற அரசர், பழைய நட்பை அடிகளிடம் பாராட்டினர். விடை பெற்ற அடிகள், தம் திரு மாளிகையை அடைந்தார்.

## கலக கோரம்

குதிரை வரக் குறித்த இரண்டு நாட்கு முன், அமைச்சருள் ஒருவன் அரசரை அணுகினன்.

அரசே! நின் பொங்கு சினத்திற்கு அஞ்சி, தலைமை யமைச்சர் புகன்றதெல்லாம் பொய். சிறந்த பொருளின் அருமையை யறியாமல், பெருந்துறை யில் அதைச் செலவிட்டதே மெய் என்று, அந்தரங் கத்தில் வந்து அறிவித்தான்.

ஐயம் பிறந்தது. அரிய தூதுவர்களை, அரசர் பெருந் துறைக்கு அனுப்பி வைத்தார். சென்றவர் திரும்பினர். மன்னர் திலகமே! அங்கும் அறிந் தோம். அடுத்த பகுதிகளிலும் ஆய்ந்தோம். ஒரு பரியும் கண்டிலம் என்று உரைத்தனர்.

## அரச தண்டம்

வேந்தர் வெகுண்டார். நாற்பத்தொன்பது கோடிப் பொன்னையும், வாதவூரரை வருத்தி வாங்கு மின் என்று தண்டலாளரை ஏவினர்.

சென்ற அவர்கள், அடிகளிடம் செய்தி உரைத்தனர். பதில் ஒன்றும் சொல்லாமல், வாளா இருந்தனர் திருவாதவூரர்.

பெருஞ் சினம் மிகுந்தது. பிடித்துச் சென்றனர். சிறையில் அடைத்தனர். அச் சமயம், மேலைக் கடலுள் கதிரவன் வீழ்ந்தான். கங்குல் எங்கும் கவ்வியது.

வைகறை நேரம் வந்தது. கோயில் சங்குகள் முழங்கின. பொழுது விடிந்தது.

காவலர் கதவைத் திறந்தனர். அடிகளை இழுத்துச் சென்றனர். வேதனை மிகும்படி வெயிலில் நிறுத்தினர். கொளுத்துகிறது கொடிய வெயில். அவர் குலவு பாதங்கள் கொதித்தன.

"பாரொடு விண்ணாய்ப் பரந்தஎம் பரனே !
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்;
சீரொடு பொலிவாய்; சிவபுரத் தரசே !
திருப்பெருந் துறையுறை சிவனே !
யாரொடு நோகேன்; யார்க்கெடுத் துரைப்பேன்
ஆண்ட நீ அருளிலை யாகில்,
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய் !
வருக என்று அருள்புரி யாயே !"

என்று வாழாப் பத்தும், அருட்பத்தும், அடைக்கலப் பத்தும், குழைத்த பத்தும் கூறிக் குமுறினர்.

முறையீடு கேட்ட முதல்வர் திருவுளம், பெரிதும் இரக்கம் கொண்டது.

## நரிபரி நாடகம்

நரிகள் பலவற்றை, நம்பன் பரிகள் ஆக்கினன். பக்தி மிக்க கணத்தவர்களை, பாகர்கள் ஆக்கினன். தான் வணிக வேடம் தாங்கினன். வேதப் பரிமேல் ஏறினன். திருப் பெருந் துறையில் இருந்து, குதிரைகள் புறப்பட்டன. திரு வாதவூர் வழியாக வந்தன.

பயப்படாதே! வருகிறேன் என்று, மணலில் நின்று வருந்தும் வாதவூரடிகட்கு, அப்பதியில் பாதச் சிலம்பொலி காட்டினன் பரமன். திமித நடையிடு பரிகளை, அத் தேவதேவன், சிறக்க மதுரையில் செலுத்தி வந்தனன்.

கண்டவர் ஓடினர். அதைக் காவலர்க்கு அறிவித்தனர்.

மகிழ்ந்த மன்னர், தன் அவசரத்தை நினைந்து அயர்ந்தார்.

அடிகளைச் சிறை நீக்கி அழைத்து வரச் செய்தார்.

சிறந்த குதிரைகள் உலவும் இடம், செண்டு வெளி எனும் பெயர் பெறும். அங்கு ஒரு முத்துப் பந்தர் அமைந்தது. படைகள் புடைவர, பார்த்திபர் வந்தார். அங்கிருந்த ஆசனத்தில் அமர்ந்தார். அண்மையில், இன்பம் கொண்டு வாதவூரரும் இருந்தார்.

பரிகளால், பாரனைத்தும் புழுதி பரந்தது. உயர்ந்த எக்காளம் முதலியன ஒலித்தன. இங்ஙனம்

ஆவணி மூலத்தன்று, மதுரையில் குதிரைகள் வந்து நிறைந்தன.

பெருக்கமான பரிகளின் தலைவராய் வந்த பெருமான், அரைக் கச்சையில் வாள்; பல நிற மணியணி மார்பு; பகட்டான பட்டுச் சட்டை; திருமுடியில் தோயாத சாயத் தொப்பி; கையில் செண்டு; குதூகலம் தரும் இக் கோலத்துடன், பலம் மிக்க வெண்மைப் பரியேறி, திருவடி மணி, கச்சை மணி, பரிகளின் இருபுறம் ஊசலாட, கட்டித் தொங்கவிட்ட பிற மணிகள் எல்லாம் கலகலப்ப, சென்னிமேல் பிடித்த செம்மைக் குடையுடன், செம்மாந்து வந்தார். அவர் கோலமே ஒரு அதிசயமாக இருந்தது

திருவாதவூரடிகள், திருவருளை வியந்தார். அவரை நோக்கிய அரசர், பரிகளின் வகைகளை, அவைகளின் ஆற்றலை, செலுத்தும் செய்திகளை, உரைக்கும்படி கேளும் என்று உரைத்தார்.


எப்படிச் சொல்வது என்று எண்ணிய அடிகள், விதியின்றி, அதை இதயத்தால் விண்ணப்பித்தார்.

பரிமேல் இருந்தபடி, கலகல நகை செய்தார் பரமர்.

மன்னு! கேள் என்று, கொண்டுவந்த குதிரைகளின் இலக்கணங்களைக் கூறினர். செலுத்திக் காட்டுகின்றேன் ஒன்றை; நீ காண் என்று, சிறக்க தான் ஏறியிருந்த பரியைச் செலுத்தினர்.

“உன்னும் மன வேகமென ஓடும் உயர்பாய்மா,
நல் நடம் இடும்படி நடாத்தி எதிர் வந்தார்.”

மகிழ்ந்த மன்னர், ஒரு பொன்னுடையை, பரி கொணர்ந்த தலைவர்க்குப் பரிசாக நீட்டினர். எல்லாம்



ஸ்ரீ மாணிக்க வாசகர் தனிக்கோயில் (பக்கம் 19)

தான் வைத்து வாங்க வல்ல தலைவர், அதைச் சவுக்கின் நுனியால் வாங்கினர்.

இது மரியாதைத் தாழ்வு என்று, பெருஞ் சீற்றம் மன்னரிடம் பிறந்தது.

அப்படி வாங்குவது, அவர் நாட்டு வழக்கம் என்று, சமயம் பார்த்து மாணிக்க வாசகர், சமாதானம் செய்தார்.

அரசர் ஆணையின்படி, அஸ்வ சாஸ்திரிகள் வந்தனர். பல குதிரைகளை, தாம் படித்த இலக்கணம் கொண்டு பார்த்தனர். இவ்வுலகில் இத்தகைய பரிகள், அகப்பட்டமையே அருமை அருமை என்று அறிவித்தனர்.

கொடுத்த பணத்தினும், எண்மடங்கு அதிக மான குதிரைகள் என்று, மன்னர் குதூகலித்தார்.

“காயும்வேல் மன்னா! ஓரிக் கடும்பரி,
அமயம் வந்தால்
ஞாயிலும் தாண்டிச் செல்லும்; நாட்டமும்
நுழையாச் சால
வாயிலும் நுழையும்; கண்ட இடமெலாம்
வழியாச் செல்லும்;
தீயவெம் பசிவந் துற்றால், தின்னாத
எனினும் தின்னும்”

[ஓரி - நரியாகிய எனவும், ஓர் இக் கடும் பரி எனவும் பிரித்துப் பொருளறிக. பரி - குதிரை. ஞாயில் - மதில். சால வாயில் - ஜன்னல் வழி; சாக்கடை வழியுமாம். தின்னாத - தின்னத் தகாத பிணம்.]

இரு பொருள்பட இப்படி உரைத்தார் பாகராய் வந்த பரமர்.

குறை ஒன்றும் இனி கூறுவது கூடாது. பெற்றுக் கொள் என்று, குதிரைகளைக் கயிறு மாறிக் கொடுத்தார். செல்வார் போல் போக்குக் காட்டினர். காண நின்ற அவர் திருவுருவம் கரந்தது.

சேவகர்கள், குதிரைகளைச் சேர்க்கும் இடத்தில் சேர்த்தனர்.

மாணிக்க வாசகரைப் பாராட்டி, பல மரியாதைகளைச் செய்தார் மன்னர். அடிகள், தம் திரு மாளிகையை அடைந்தார். உறவினர், நண்பர்கள். உடன் பயின்ற கலைஞர்கள், ஒருவர்பின் ஒருவராக வந்தனர். பரிகளைக் கொணர்ந்த திறத்தைப் பாராட்டினர். அரிய உபசாரம் பல செய்து, அடிகள் அவரை அனுப்பினர்.

எம்பெருமான் முறையீட்டை ஏற்ருன். கொண்டு போன பொருள்களை,அன்பர்க்கும் தன் கோயிலுக்குமாக் கொண்டான். எம்மைப் பணியும் கொண்டான். தடுமாற்றம் தந்த துன்பத்தைத் தவிர்த்தான். பார்த்திபர்க்கு உரிய பரிகளை உதவினுன். எனக்கு இனி ஒரு குறையும் இல்லை என்று, மன்றுள் ஆடிய சேவடிகளை, மனனம் செய்து அடிகள் மகிழ்ந்தார்.

## பரி நரிக் கூத்து

மேலைக் கடலில் சூரியன் மறைந்தான். வானில் மதியோன் வந்தான். உலகம் அமைதி காட்டி உறங்குகிறது.

நரிகளைப் பரிகளாக்கிய நம்பன், அவைகட்கு, இயல்பான நினைவையும் உருவையும் அருளினன்.

காட்டில் இருந்தோம்! கவலையே யில்லை! என்ன அதிசயம்? நம் முதுகில் மனிதர்கள் ஏறினர்! சவுக்கால் அடித்தனர்! கட்டி வைத்தனர்! கொள்ளும் புல்லும் கொடுத்தனர்! பரதந்திரரான நமக்கு, இப் பொழுதேனும், வாழ்விக்கும் சுதந்தர புத்தி வந்ததே! காவலர் கண்டால் சாடுவர்! ஓடிப்போவதே உத்தமம் என்று அவைகள் உணர்ந்தன. பகலெலாம் பரி; இரவிலே நரி. திருவருட் கூத்தில் இதுவும் ஒன்று.

பழைய குதிரைகள் மேல், நரிகள் பாய்ந்தன. காலைக் கடித்தன. கதற வைத்தன. எங்குமுள்ள மாளிகைகள் மேல் ஏறின. அரச வீதியை அடைந்தன. கடை வீதிகளில் நடமாடின. எங்கும் கூக்குரல் எழுப்பின.

படபடத்து எதிர்த்தனர் படை வீரர்கள். எதிர்த் தாரை, அரியேறு போல எதிர்த்தன. அதிர்குரல் எழுப்பி ஆரவாரித்தன.

தூக்கம் தொலைந்தது. விழுந்தடித்து ஊர் மக்கள் எழுந்தனர். ஓட்டுவார். அஞ்சி ஓடி ஒளிப்பார். ஒளிக்கும் இடம் தேடுவார். கதவடைத்துத் தம்மைக் காப்பார். ஆண்கள் அலமந்தனர். கை பிசைந்து பெண்கள் கதறினர். வீட்டில் குழந்தைகள் வீரிட்டன.

தவறு இது, நம் தவக் குறைவோ? மன்னர் செங்கோல் மாறியதோ? யார் செய்த பாவமோ இது என்று, குடிகள் படபடத்துக் குமுறினர்.

செய்தி, மன்னர் செவிக்கு எட்டியது. குடிகளின் பயங்கரக் குரலும், குள்ள நரிகளின் கூச்சலும், பரவி மன்னர் செவிகளில் பாய்ந்தன. விறுவிறுப்பு விளைந்தது. பெருகிய வெகுளி பிறந்தது. அதே சமயத்தில், ஆலவாய் அமலர் திருவுளப்படி, ஊர் விட்டு நரிகள் ஓடின.

## கடுந் தண்டம்

கடுகடுத்தார் காவலர். அடிகளை அழைத்து வர ஆள் விட்டார். கீழ்க்கடலில் பரிதியும் உதயம் செய்தான்.

குதிரைக் காவலர் வந்தனர். வேந்தரை வணங்கினர். பெருமா! காற்றினும் கடியன; கண்ணிற்கு இனியன, நேற்று வந்த பரிகள்; அவைகள், இரவில் நரிகளாயின. கூற்றெனும்படி குதித்தன. பரிகள் பலவற்றைக் கொன்றன. ஊரெல்லாம் குழுமின. ஓடிப் போயின என்று, அடங்கி ஒடுங்கி அறிவித்தனர்.

கண் சிவந்தார் காவலர். அண்மையில் இருந்த அமைச்சர்கள் அஞ்சினர். அதே சமயம், ஏவலர் அழைப்ப, பூசும் நீறுபோல் உள்ளம் புனிதரான அடிகள், மன்னர் முன் வந்தார். இரவெலாம் சிவானந்தத்தில் இருந்த அடிகள், நரிகள் நாடகம் அறிந்திலர். ஆதலின், நகைமுகமாகி இருந்தார்.

வந்தவரைப் பார்க்கவே மனமில்லாத மன்னர், திருமுகத்தை வேறுபுறம் திருப்பினர். அண்மையில் இருந்த அமைச்சர்களை நோக்கினர்.

கொண்டு போன பொருள்களை இரவலர்க்குக் கொடுத்து, நரிகளைப் பரிகளாக்கிய நாடகத்தைக் கண்டீரா? என்று அதிர உரைத்தார் அரசர்.

அதன்பின் காவலாளிகளை நோக்கினர். கொண்ட பொருள்களைத் திருப்பிக் கொடுக்கும் வரை, வீணர் இவர்க்கு விலங்கிடுங்கள்! நெடு நேரம் வெயிலில் நிறுத்துங்கள்! வருத்திப் பொருளை வாங்குங்கள் என்று, வெடுவெடுத்து ஆணையிட்டார் வேந்தர்.

காவலாளிகள் கடுகடுத்தனர். எம்பெரும் அடிகளை இழுத்துச் சென்றனர். நெடிது சுடுகிற மணலில் நிறுத்தினர். துடிப்படையும்படித் துன்புறுத்தினர். அந்த உபாதை பொறுக்கலாற்றாத அடிகள்,

"நாதவோ! நாத முடிவிறந்த நாடகம் செய்
பாதவோ! பாதகனும் என்னைப் பணிகொண்ட
வேதவோ! வேத முடிவின் விளைந்த தனிப்
போதவோ! போத நெறி கடந்த பூரணவோ"

"உரியேன் அல்லன் உனக்கடிமை;
உன்னைப் பிரிந்திங் கொருபொழுதும்
தரியேன் நாயேன்; இன்னதென் றறியேன்;
சங்கரா! கருணையினால்,
பெரியோன் ஒருவன் கண்டுகொள் என்றுன்
பெய்கழல் அடி காட்டிப்,
பிரியேன் என்றென்று அருளிய அருளும்
பொய்யோ எங்கள் பெருமானே!"

என்ற எண்ணப் பதிகத்தால் ஏத்தினர். அடிகள் திருவுளம் கலங்கக் கண்ட புனிதர் திருவுளம் பொறுத்திலர்.

## வெள்ளமான ஆடல்

கண்ணுதல் பரமன் கருணை மலர்ந்தது. அது, வைகை வெள்ளமாகி வளர்ந்தது. இரு கரையும் பெருக்கெடுத்தது. வரம்பு கடந்து, பொங்கி மதுரையில் புகுந்தது. கண்ட குடிகள் கலங்கினர்.

இரவில் நரிகள் நாடகம். பகலில் வெள்ள விளைவு. அரசர் அஞ்சினர். அமைச்சர்களை நோக்கினர். செங்கோல் நியதி சிதைந்ததோ? அதன் விளைவோ இது என்று, அயர்ந்து கூறினர்.

வாதவூர் அடிகளை, வருத்திய குறையோ என்னவோ? உணர்ந்த சிலர் இங்ஙனம் உரைத்தனர். ஆம். அப்படித்தான் இருக்கும் என்றார் அரசர்.

அப்போதே வாதவூரடிகளை அழைப்பித்தார். வந்தவரை வருக என்று வணங்கினார்.

ஐயரே! தாங்கள், பெரும்பொருள் கொண்டு செய்த பேரறத்தின் பயன், சிவபுண்ணிய மாகிச் சிறந்தது. உணராமல் தங்களை ஒறுத்தேன். என்னை மன்னியும்! ஆர்த்து வரும் வெள்ளம் ஊரை அழிக்காதபடி, நீரே அடக்கி அருளும் என்று, வேண்டி இறைஞ்சினர் வேந்தர்.

பரிமேல் நேற்று வந்த பரமனை, அடிகள் இன்று இதயங் கொண்டு இறைஞ்சினர்.

பவமே அழிக்கும் சிவமே! சீற்றம் தணிக! முதன்மை சாந்த மூர்த்தீ! என்று, இரு கரம் குவித்து ஏத்தினர். அவ்வளவில், ஆர்த்த வெள்ளத்தின் வேகம் அடங்கியது.

அடிகள் உடனே வைகைக் கரையை யடைந்தார். அமைச்சர்கள் பலர், அவரை நோக்கினர்.

ஸ்வாமி ! இனி என்ன செய்யலாம் என்றனர்.

உயர்ந்த கரைகள், இருபுறமும் உடைந்திருக்கின்றன. ஊரவர் கூடி உயர்த்தச் செய்க என்று, உயர் தரும வாதவூரர் உரைத்தார்.

நகர் எங்கும் பறை ஒலித்தது. மண் வெட்டியும் கூடையுமாக, குடிகள், வையையை நோக்கி ஓடினர். அடைக்க வேண்டிய பகுதிகளை, அதிகாரிகள். ஒவ்வொருவர்க்கும் அளந்து கொடுத்தனர். விறுவிறுத்து வேலை நிகழ்கிறது. ஒவ்வொருவராலும் கரை உயர்கிறது,

## செம்மனச் செல்வி

மதுரையில் ஒரு ஏழை மகள். வணிக வயோதிகை, பிட்டு விற்றுப் பிழைப்பு. கரை யடைப்பதில், அவளுக்கும் ஒரு பங்கு. அது சரி, அடைக்க ஆள் இல்லையே. எங்கும் தேடினுள்; ஏமாந்து நின்றுள்.

அங்கயற் கண்ணி மணுளரை, ஆலயத்தில் தொழுதாள். நிறையுடையான் திருமுன், தன் குறை உரைக்க லாயினள்.

'' தாயுமிலை தந்தையிலை தமருமிலை; தமியேனைப்
பேயுடன் நின்றுலும் பிரித்தறிய ஒண்ணுது;
தீய(து) எனது இலம்பாடு ; சிந்தையில்வெங் துயர்தீர
நீயருளா தொழியின், உயிர் நீப்பேன்; மற்(று) என்
[செய்கேன் ?''

என்று அலறிக்குமுறி அழுதாள். விமலர் கோயிலில் இருந்து வெளி வந்தாள்.

"கூலி ஆள் வருவது உண்டோ ஓ ஓ ஓ"
என்று கூவினள்.

"கூலி கொடுத்து என் வேலை கொள்வார் உண்டோ"
என்று, எதிர் குரல் ஒன்று வீதியில் எழுந்தது.

கந்தை உடை. தோள் மேல் மண் வெட்டி தொங்குகிறது. தலைமேல் மண் கூடை. பெரும் பசியுடையான் என்பதை, அவன் ஒட்டிய வயிறும் முகமும் உணர்த்துகின்றது.

கண்ட வந்தி களித்தாள். அகதியான அவட்கு ஆளாகி, உதவ வந்தவர் சுந்தரர்; அதை அவளால் அறிய இயலுமா?

அப்பா! என் கரை யடைக்கும் ஆளாய் வருவாயா?

அம்மா! உயர்ந்த அது தானே என் உத்யோகம். முதலில் கூலி. பிறகு வேலை. இது என் வழக்கம்.

உண்ணும்படிப் பிட்டை உதவுவேன். இல்லையானல், பிட்டை விற்று, கூலியை மாலையில் கொடுக்கிறேன்; எது உனக்குச் சம்மதம்?

அம்மா! கடும்பசி காதடைக்கின்றது. இப்பொழுது உதிர்ந்த பிட்டை உதவு; அருமையாக உன் பகுதியை அடைத்து விடுகிறேன் என்ருன், அன்பர் பிறவிக் கரையை அடைப்பவன்.

பிட்டை மூடிய வெறுந் துணியை விலக்கினள். உதிர்ந்திருந்த பிட்டை எடுத்தாள். கொடுக்கும் போது சொல்லும் வழக்கப்படி, ஆலவாய் அப்பா! என்று சொல்லிக் கொடுத்தாள்.

வாய்த்த பிட்டை மேல் துணியில் வாங்கியவர், ஆலவாய் அப்பனுக்கே ஆக இது! என்று சொல்லி, பிட்டை வாயில் இட்டார். இதுவும் மீனாட்சி சுந்தரர்க்கே என்று, மேலும் ஒருபிடி அருந்தினார்.

பேஷ் பேஷ்! மிகவும் சுவையா யிருக்கிறதே! என்று, அருமைத் திருமுடியைப் பலதரம் அசைத்தார்.

அடங்காத பசி அடங்கியது அம்மா! கொஞ்சம் இன்னம் கொடு என்று, கொஞ்சிக் கெஞ்சிக் கூத்தாடினார்.

அப்படியே கொடுத்ததைத் தன் துணியில் கொண்டார். செம்மனச் செல்வியுடன், சிறந்த வைகைக்குச் சென்றார்.

பெயர் எழுதுவார், அங்குப் பேர் கேட்டனர். எத்தனை கேட்டும், வந்தி ஆள் என்றே ஏட்டில் வரைவித்தார்.

## கரை யடைக்கும் கருணை

வந்தியின் பகுதியை, காட்டுவார் காட்டக் கரை யடைக்கத் தொடங்கினார். சிறிது நேரம் செயல் செய்வார். இளைத்தவர் போல இருப்பார். முடிச்சை அவிழ்ப்பார். பிட்டை எடுப்பார். வாயில் இடுவார். சிறிது சிறிதாகச் சுவைப்பார். கூடையைத் தலை மேல் வைத்துக் கூத்தாடுவார்.

இந்த ஆட்டம் கண்ட செம்மனச் செல்வி, கரை யடைபட வில்லையே; காவலர் வருத்துவரே என்ற கவலை யடைந்தாள்.

வருந்தாதே தாயே! அரை நொடியில் கரையை அடைத்து விடுவேன். நீ வீட்டிற்குப் போ என்றார், வேலையாளாய் வந்த விமலர். செம்மனச் செல்வி, அப்படியே சென்றாள்.

அதன் பின், மணல் பாங்கில் ஒரு கொன்றை மரம். அதன் நிழலில், கயற்கண்ணி துணைவர், கூடையைத் தலையணையாக் கொண்டார். வேலை செய்து இளைத்தவர் போல், பரிவு காட்டிப் படுத்தார்.

அதே சமயம் அரசர், அமைச்சர்களுடன், பரவி வளர்ந்த கரைகளைப் பார்வையிட வந்தார். கரைகள் அடைபட்ட இடங்களைக் கண்டார். அடைபடாத கரை ஒன்று. அடுத்திருந்த கரைகளை அரிப்பதையும் அறிந்தார்.

பார்த்த மனம் பதைத்தது. எவர் பங்கு இது என்று, வேந்தர் எதிர் நின்றாரை வினவினார்.

## சாமான்ய அறிவுரை

பிரபோ! வந்தி ஆள் என்று ஒருவன் வந்தான். மண்ணை வெட்டுவான். கூடையில் இடுவான். வாளா இருப்பான். எடுத்து ஏந்துவான். குறித்த இடம் தவறிக் கொட்டுவான். இது என்ன திசை மயக்கம் என்பான். தலை சொரிவான். நெடுமரம் போல் நிற்பான். ஓடுவான். ஒரு கை மண்ணை எடுப்பான். கரையில் அதைப் போடுவான். பாடுவான். பாடிக் கூத்து ஆடுவான். போ எனில் வருவான். வா எனில் போவான். பிட்டைத் தின்பான். சுவைக்

கிறதே என்று கை கொட்டுவான். குமரன் போல் குதிப்பான். வாட்ட சாட்டம் ஆனவன். சொன் னாலும் கேளான். துரைபோல் அதோ தூங்குகிறான் பாரும்! என்று கூறினர் ஏவலர்.

அவனை இங்கே அழைத்து வாருங்கள் என்றார் அரசர்.

சென்றவர் எழுப்பினர். எழுந்தான். மறுபடியும் தூக்கம் வருகிறது என்று விழுந்தான். அதட்டி எழுப்பி அலட்டினர், அரசர் ஆட்கள்.

விதிர்ப்பான் போல் விழித்தான். வலிந்தீர்த்த ஏவலர், நிருபர் எதிரில் கொணர்ந்து நிறுத்தினர்.

## வியாபக விளக்கம்

இவ்வளவும் கண்டிருந்தார் காவலர். ஆத்திரம் அதிகரித்தது. பிரம்பை எடுத்தார். ஓங்கி அடித் தார்.

அகில உலகமும், ஐயோ என்று அலறியது. என்ன அதிசயம்! அந்த அடி, பாண்டியர் முதுகில் பட்டது. அரசியர், அமைச்சர், ஆண்கள், பெண்கள், சேய்கள், கருவில் இருந்த கான்முளைகள், அயன், அரி, அறவோர், பரிதி, மதி, இந்திரன், ஐம்பூதம், கடல், மரம், மலை முதலிய எவர் மேலும், எதன் மேலும், பளார்! பளார்! என்று அதிர விழுந்தது அவ் ஒரு அடி.

கூடையில் இருந்த சிறிதளவு மண்ணைக் கரை யில் கொட்டி, மறைந்தருளினர் கூலியாளாய் வந் தவர். மற்றவர் கரைகளை விட, உயர்ந்து எழுந்தது

வந்தி கரை. முதன்மை யன்புடைய வந்தி, அதே நேரத்தில் முத்தி பெற்ருள்.

## கலகலத்த கதறல்

அமலன் செய்த ஆடல் இது என்பதை, அகில உலகமும் அறிந்தது. அடியவர்க்கு எளி வந்த அமலனை, அடித்தேனே என்று புழுவாய்த் துடித்தார் பூபதி.

" அடையாளம் பட ஒருவன்
அடித்த கொடும் சிலைத் தழும்பும்,
தொடையாக ஒரு தொண்டன்
தொடுத்தெறிந்த கல்லும் போல்,
கடையானேன் வெகுண்டடித்த
கைப்பிரம்பும், உலகமெல்லாம்
உடையானே ! பொறுத்ததோ ?
உன் அருமைத் திருமேனி" !

" கடியேறு மலர்மகன் மால் முதலாய கடவுளரும்
படியேழும் அளவிறந்த பல்லுயிரும் நீயேயோ?
முடியேற மண்சுமந்தாய்; முதுகுதனில் அடிபட்டது
அடியேனும் பட்டேன்; நின் திருமேனி யானேனோ ?

" பாதி உமை உருவான பரமேட்டீ ! எனக்கிம்மை
ஊதியமும் பரகதியும் உறுதியென விளைவிக்கும்
நீதியினால், மந்திரியாய், நின்னருளால் அவதரித்த
வேதியரை அறியாது, வெறுத்து நான் ஒறுத்தேனே"

என்று பொல பொல கண்ணீர் சிந்திப் புலம்பினர் அரசர்.

வித்தகர் வாதவூரர் முதுகிலும் அடி விழுந்தது. என்ன இது என்று ஏங்கினர். அடித்தவர் யார்?

நாற்புறமும் நோக்கினர். கண்கட்கு எவரும் காணப் பட வில்லை.

ஓடிவந்தனர் சிலர். அடிகளிடம் விவரம் உரைத் தனர். அது கேட்ட அடிகள் இதயம் அதிர்ந்தது. விறுவிறுத்தார். மண் சுமந்த இடத்திற்கு விரைந் தார். அந்த இடமெல்லாம் புரண்டு, அழுதார் தொழுதார் அலமந்தார்.

*"நீறுபடும் பொன்மேனி நின்மலனே! நெடுங்கங்கை*
*ஆறுபடும் சடைமுடியாய்! அடியவர்கட்கு எளியானே!*
*மாறுபடும் புரம்எரித்தாய்! மாறுபடும் போ(து,)உடலில்*
*கூறுபடும் சிவஞானக் கொம்பினுளம் குழையாதோ?"*

*"கொங்கையால், மணிமிடற்றால்,*
*குறியிடும் அவ் வீறுடைய*
*மங்கையாள், பெருமானை*
*மண்சுமக்க நினைத்தாளோ?*
*கங்கையாள், அலைக்கரத்தால்*
*கரைத்திலளோ? புள்ளுருவாம்*
*பங்கயா சனன்அறியாப்*
*பணிமுடியென்(று) அறியாளோ?"*

*"பிரமனுடன் திருமாலும், பிறப்பகலப் பலகாலும்*
*பரிவினுடன் தருமலரோ? பத்தரிடும் பச்சிலையோ?*
*புரிதருசெஞ் சடையோ? புதுமதியோ? ஆயிரவாய்*
*வரியரவின் பலபடமோ? மண் சுமந்த சும்மாடு"?*

*"பொன்னுலகத் துள்ளோரும்,*
*புரந்தரனும், திருமாலும்,*
*மன்னு மறைக்(கு) உரியோனும்,*
*வழியடிமைத் தொழில் செய்ய;*

அன்னை தனக்(கு) ஆளாகி,
அணிவையை அடைத்து, அடியுண்டு
என்னையருட் பணிகொள்ள,
இசைந்தனையோ இறையோனே?"

என்று கனிந்த மனத்துடன் மாணிக்க வாசகர் கதறலாயினர்.

## விடுதலை

வெள்ளம் விரைவில் வடிந்தது. ஓடி வந்த பாண்டியர், தள்ளாடித் தளர்ந்தார். வாதவூரடிகளை வணங்கினர்.

ஸ்வாமி! பாவியேன், குரூரமான கொடுமைகள் எத்தனையோ செய்தேன்! தீரா என் பிறவி தீர, திருமேனி காட்டினர் தேவ தேவர். மாபெரும் பரியேறி வந்த மாயத்தால், அண்டர் தொழும் பெருமானுக்கு அழுக்காடை அளித்தேன்.

பிறவிக் கரையேற்றும் பெருமான், வையைக் கரை யடைக்க வந்தான். பேதையேன் அந்த அருமையை அறியாமல், பிரம்பாலே அடித்தேன். அருளாளன் கருணைக்கு ஆளான தங்களை, பல வகையில் நோகச் செய்தேன் என்று, நொடித்து வருந்தி நுடங்கினர் மன்னர். அரசர் அழுத கண் மழை, அவர் ஆகத்தையே நனைத்தது.

அடியேன் தங்கள் ஆள். பாண்டி நாட்டிற்கு இனி நீரே பார்த்திபர். ஆளவேண்டும் தாங்கள் என்று, அழுது தொழுதார் அரசர் பிரான்.

மன்னர் பெருமா! பின் திகழ் சடையோன் வாழும் பெருந்துறை நகரில் செல்ல, இன்று என்னை

விடுத்தால், அதுவே எனக்கு அமைதி தரும்; அமலன் உமக்கும் அருள் பாலிப்பன் என்றார் அடிகள்.

சீர்கெட்ட உலகில் சிந்தை செல்லாது சிவன் அடியார்க்கு என்று, அறிந்த அரசர் அமைதி யடைந்தார்.

தங்கள் திருவுளப்படியே ஆக! என்று, அடிகளை வணங்கி விடைதந்து அனுப்பினர்.

விட்டதே போதும் என்று அடிகள் விரைந்தார். அமைச்சர் வேடத்தைத் துறந்தார். தவக்கோலம் தாங்கினர். ஆலவாய் இறைவனுடைய புனிதத் திருக்கோயிலிற் புகுந்தார். அழுது தொழுது ஆநந்தித்தார். அங்கிருந்து விடை பெற்ருர். திருப் பெருந்துறைக்குச் சென்ருர்.

## கருமமே கட்டளைக்கல்

திருப்பெருந்துறையில் நிமல குரவனை நினைந் தார். பயனுள திருச்சதகம் பாடினுர். அவ்வளவில், தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது அடியார்க்கும் அடிகட்கும், காட்சி தந்தார் கருணகரர்.

இதோ எதிரில் இருக்கும் பொய்கையில், ஒரு நாள் தழல் எழும். புனிதர்களான நீங்கள், ஒவ்வொருவராக அதில் புக வேண்டும். அதன் வழி நம்மை அடைவீர்களாக!

மணிவாசகா! நீ மட்டும், இன்னம் பல தலங்களைத் தரிசித்து இரு! உள்ளம் அள்ளும் திருவாசகமே ஓதியிரு! இறுதியில், வாழ்விக்கும் தில்லைக்கு வா! என்று, பேருன கட்டளை பிறந்தது. பின், ஞானவானில் நம்பர் கலந்தார்.

இப்படியும் ஒரு நியதியோ என்று, எவரும் வியந்தனர். பலநாள், பரமனை எண்ணியும் ஏத்தியும் இருந்தனர்.

பொய்கையில் பொலிவு மிக்க தழல், ஒரு நாள் பொங்கி எழுந்தது. அதனில் ஒவ்வொருவராய்க் கலந்து இன்பம் கண்டனர். கட்டளைக்கு உட்பட்ட அடிகள் மட்டும் கலந்திலர். எனினும்,

"வேண்டும்நின் அடியார் மெய்யன்பு எனக்கும்
அருள்செய் சிவனே! அலந்தேன் அந்தோ?
முறையோ முறையோ இறையோனே!"

என்று அழுது கதறினர்; வேறு என் செய்வார்!

குருந்த மரத்தின் அடியில், அன்று இருந்த நிமலன் திருவடிகளையே நினைந்தார். திருவாசகம் பல திருவாய் மலர்ந்தார்.

அப்போது பாடிய அதிசயப் பத்து, தன்னை அடியரில் கூட்டிய அதிசயம் உரைத்தது.

ஆசைப்பத்து, அடியவர் பிரிந்த பின் உருகி உரைத்தது.

செத்திலாப் பத்தும், புணர்ச்சிப் பத்தும், பெருமானைப் பெறும் விருப்பம் கொண்டு பேசியது.

திருவார்த்தை, ஐயன் பரியேறி வந்த அருளை எண்ணி அருளியது. இங்ஙனம் அறிஞர் உலகம் அறிவிக்கின்றது.

அதன் பின் அடிகள், திருவுத்தர கோச மங்கையை அடைந்தார். விமலனைச் சேவிக்கும்

விருப்பத்தால், நீத்தல் விண்ணப்பம், திருப் பொன்னூசல், அன்னைப் பத்து, திருத் தசாங்கம் முதலியன அருளினர்.

திருப் புலம்பலில் உள்ள முதல் பாசுரத்தில், திருவாரூரை நினைத்தார்.

திருவிடை மருதூரில், திரு ஏசறவு பாடினர். திருவாவடு துறையை அடைந்தார். அங்கு, மாசிலா மணி யீசரை மனமுருகிப் பாடினுர். அங்குப் பெரு மான் திருமுன், சூக்கும ஐந்தெழுத்தின் உயர்ந்த நுட்பம் ஓர்ந்தார்.

சீகாழி, திருமுதுகுன்றம், திருவெண்ணெய் நல்லூர் முதலிய பயனுள திருப் பதிகளில், அவர் பாடிய திருவாசகம் பல.

திருவருணையில் திருவெம்பாவை, திருவம் மானை திருவாய் மலர்ந்தருளினுர்.

காஞ்சியில், திருவுந்தியார் அருளப் பெற்றது. திருக்கழுக் குன்றத்தில், தம் குருவின் திருமேனி கண்டார். 'பிட்டு நேர் பட' எனும் பயனுள ஒரு திருப்பதிகம் பாடினுர்.

அங்கிருந்து தில்லையை அணுகினுர். கூத்தப் பெருமானைத் திருவம்பலத்தில் கும்பிட்டார். கண்ட பத்து முதலிய பல பதிகம் அங்குப் பாடினர்.

அதன் பின், தில்லையின் எல்லையில் இருந்த நிழல்தரும் சோலை ஒன்றில், இருந்து தவம் செய்தார்.

## ஈழத்தின் காழ்ப்பு

சிவனடி மறவாச் சிந்தையர் ஒருவர். வாழும் அவர், ஈழ நாட்டு வளங் காணச் சென்றார். தங்கும் இடம் எல்லாம், திருச்சிற்றம்பலம் துணை என்றார். அங்கிருந்த புத்த குருவின் செவிவரை, இச் செய்தி எட்டியது. அவர் அது குறித்து, அந் நாட்டு அரச ருடன் அளவளாவினார். அந்த அடியவரை அரசர், தன் சபைக்கு அழைத்தார்.

அங்குச் சென்ற அடியவர், அங்கும் திருச்சிற்றம் பலம் என்றார்.

ஏன் அப்படிச் சொல்கிறீர்? அதனால் என்ன பயன்? என்று, குறுகுறுத்து வினவினர் புத்த குரு.

" முப்பத்து முக்கோடி மூவைந் தெழுத்தும்
செப்பேட்டில் அடைத்தது சிவசிதம்பரம் "

புத்த குருவே! வான் அணுக்கள், மீன் அணுக் கள், ஊன் அணுக்கள், உயிர் அணுக்கள் எல்லாம், நான் என்னும் தத்துவத்தில் நடம் இடுகின்றன. அதன் பின்புறத்தில், தான் என்பது ஒரு தத்துவம். நலம் சிறந்த அத் தத்துவமே நடராஜா. அதன் அருட் கூத்தே ஐந்தொழில்.

" பொருவிடை ஒன்றுடைப்
புண்ணிய மூர்த்தி; புலியதளன்;
உருவுடை அம்மலை மங்கை
மணாளன்; உலகிற் கெல்லாம்

திருவுடை அந்தணர் வாழ்கின்ற
தில்லைச்சிற் றம்பலவன்
திருவடியைக் கண்ட கண் கொண்டு,
மற்றினிக் காண்ப தென்னே !"

திருச்சிற்றம்பலம் என்று ஒரு தரம் உரைத்தால், அது இருபத்தோராயிரத்து அறுநூறு தடவை, உயர்ந்த ஐந்தெழுத்தை உரைத்ததற்கு ஒப்பு. தெரிகிறதா என்றார், தெளிந்த அந்த அடியார்.

## புத்த விவாதம்

அரச அவையில் இருந்த புத்த ஆசாரியன் எழுந்தான்.

புத்தனினும் தெய்வம் பிறிதில்லை. தில்லைக்குச் செல்வேன். அங்கு அதை நிலை நாட்டுவேன் ! பொன்னம்பலத்தை எங்கள் புத்தர் பள்ளி ஆக்குவேன் என்று, பொங்கி யுரைத்துப் புறப்பட்டான்.

முடிவை யறிவோம் என்று, புத்த மன்னரும் எண்ணினர். தன் ஊமை மகளைச் சிவிகையில் ஏற்றினர். பரிவாரம் தொடர, தானும் பயணமாயினர். அக்கரையில் மரக்கலம் ஏறினர். இக்கரையில் இறங்கினர்.

புலியரசர்க்கு முன் புறப்பட்ட புத்த குரு, தில்லையை எய்தினர். ஆலயத்துள் நுழைந்தார். அரிய ஒரு மண்டபத்து அமர்ந்தார்.

கோயிலாளர், நீ இங்கு இருப்பது கூடாது என்றனர்.

சோழ அரசர் முன், புத்த சமயமே சமயம்; பொய் வந்துழலும் சமயநெறி புகுத வேண்டாம் என்று, சிறக்க நிலைநாட்டிச் செல்வேன்; அது வரை இந்த இடத்தை விட்டு எழுந்திருக்க மாட்டேன் என, வீறு கூறினர் புத்த குரு.

ஊராரிடம், இதை நிர்வாகிகள் உரைத்தனர். பொது மக்கள் கூடினர். புத்த குருவிடம் போந்தனர்.

இது என்ன மூடத்தனம்; எழுந்து போம் என்றனர்.

எம் கடவுள் மெய்க் கடவுள் என்பன்; மறுப்பார் மறுக்கலாம் என்று சாகஸம் செய்தார் அச் சாக்கியர்.

ஆன்றோர் பலர் ஆலோசித்தனர். பழி வருமே என்று பயந்தனர். அறிஞர்களில் சிறந்தாரை அழைப்போம். வாதம் நிகழட்டும். கடைசியில் முடிவு காண்பம் என்று கருதினர்.

அறிஞர் பலர் வந்தனர். வாதம் வளர்ந்தது. தர்க்கப் போரில், அறிஞர்கள் தளர்ந்தனர். சோர்வு பெருகியது; சுழித்தது மனம். பக்தர்கள் திகைத்தனர்.

அம்பல வாணு! இதுவோ உனது இன்னருள்? என்று தீட்சிதர்கள் தேம்பினர்.

மாலை வந்தது. கதிரவன் மறைந்தான். வானத்தில் மதியோன், பயனுன தட்ப ஒளியைப் பரப்பினன்.

தீட்சிதர்கள் கனவில் திருக்கூத்தர் நின்றார். குனித்த புருவமும், கொவ்வைச் செவ்வாயும், குமிண் சிரிப்பும், கண்ட அந்தணர் கை குவித்தனர்.

ஊர் எல்லையில், எம் அன்பன் மாணிக்கவாசகன் இருக்கின்றான். அவன்பால் சென்று, நாம் அறிவித்ததாக அறிவித்தால், வாதத்திற்கு வருவன் என்றான் எம்பிரான்.

விழித்தனர். வியந்தனர். ஒன்று கூடினர். கலந்து பேசினர். குறித்த இடத்தை யடைந்தனர். நிட்டை நீங்கி, அடிகள் இருந்த நேரம் அது.

வாதவூர் அடிகளை, தில்லை யந்தணர் வணங்கினர். முன்னவன் கட்டளையை முன்னம் உரைத்தனர்.

அந்தக்கரணத்தில் தமக்கும் ஒரு அறிவிப்பு. உணர்ந்த அடிகள் எழுந்தார். புனிதர் கோயிலுள் புகுந்தார். அரிய மண்டபத்தை அணுகினார்.

சோழ மன்னர், நடுநிலையாளர், புத்த மன்னர், ஊர் மக்கள் முதலினோர் ஒன்று கூடினர்.

புத்த ஆகமத்தை, சாக்கியர் பொரிந்து தள்ளினார். சிவாகமத்தை அடிகள் சிறக்க உரைத்தார்.

எம்மதங்களையும் நாங்கள், ஏணிப் படி நிலையில் ஏற்பம். எம்மதமும் எங்கட்குச் சம்மதம்; இது மாணிக்க வாசகர் மணிமொழி.

சளைத்திலர் சாக்கியர். புனித அடிகள் எடுத்துக் காட்டிய புராண நுட்பம், புத்தர் தலைவர்க்குப் புரிய வில்லை. தூய சுருதி வாதத்தில் தோல்வியுற்றார். அதன்பின் யுக்தி வாதில் இறங்கினார். அவ் வாதம், கோர தாண்டவம் செய்து கொக்கரித்தது.

நீற்றை நிந்தித்தார். குலவும் உருத்திர அக்கத்தை, கொட்டை என்று இகழ்ந்தார். சிவநிந்தை பல செய்தார்.

சுருதிக்கும் அனுபவத்திற்கும் முரணுகி, வெறும் யுத்தி வாதத்தால் நிந்தை பல செய்யும் சாக்கியர் நிலை சகிக்க முடியவில்லை.

கலைமகளே! நான்முகர் நாவில் நடமிடுவாளே! முக்கணுர் அருள் இல்லை யென்றிடும் மூகர் நாவை அகன்றிடு! நக்கனுர் திரு ஆணை! என்று, நங்கள் அடிகள் அருளினர்.

அவ்வளவுதான். கலைவாணி அஞ்சினள். அவர்கள் நாவில் இருந்து அகன்றனள். யுக்தியால் புனைந்துரை புகன்ற புத்த குருவும், உடனிருந்த மாணவரும், அப்போதே ஊமைகள் ஆயினர்.

காவலர் புத்த மன்னர், இது கண்டார். சிறந்த அவர் மெய் சிலிர்த்தது. நா தழுதழுத்தது. வாழ்விக்கும் அடிகளை வணங்கினுர்.

ஸ்வாமி! பேசவல்லவர் ஊமைகள் ஆயினர். பிறப்பு ஊமையான என் மகளை, திருவருள் வலியால் பேச வையும் என்று பெரிதும் வேண்டினுர்.

அவளை இங்கு அழை என்றபடி, இடை நுடங்க வந்தாளை அடிகள் இனிது நோக்கினர்.

புத்த மன்னர் புதல்வீ! இவர்கள் விடுத்த வினுக்கட்கு, விடைகளை நீயே விளம்பு என்ருர்.

அவ்வளவில், அவள் ஊமைத் தன்மை அகன்றது. அடிகள் எழுப்பிய கேள்விகள் இருபதிற்கும், அவள் அற்புதமாக விடையையளித்தாள்.

வினவும் விடையுமான அவைகளை, அடிகள். திருச்சாழல் பதிகத்தில், ஓதுவார் உள்ளம் பாகாய் உருகுமாறு பாடினர்.

ஈழ மன்னரும் மகளும், அடிகளிடம் நீறு பெற்றனர். அருமைச் சிவனடியவர் ஆயினர்.

வெற்றி யிழந்த புத்தர்களும், அடிகளை வீழ்ந்து வணங்கினர். மாபெரும் தயை யுடைய மணி வாசகனர், அன்பொடு திருநீறு அனைவர்க்கும் அளித்தார். விநயமொடு வாங்கினர். அணிந்தனர். மீட்டும் வணங்கினர். அடிகள் அருள் நோக்கால், அவர்களும் பேசும் வாய் திறந்து பேசினர்.

வீணனது என்று, தாம் மேற்கொண்ட புத்த மதத்தை விட்டனர். உயர்ந்த சைவர்களாகி உய்ந் தனர்.

அதன் பின் அடிகளை, உள் நகரில் இருக்குமாறு ஊர்மக்கள் வேண்டினர்.

எவரும் இருக்கும் இடம், தவத்திற்கு இடையூறு; தனித்த இடத்திலேயே தங்குவேன் என்று, புனித அடிகள் புறப்பட்டார். தில்லை எல்லையில் இருந்த சோலையிலேயே தங்கினர்.

திருப்படையாட்சி, திருப்படையெழுச்சி முதலிய பதிகங்களை, மகிழ்ந்து திருவாய் மலர்ந்தார்.

## கூத்தர் கூத்து

பூத்தது. காய்த்தது. தளதளத்துக் கனி வகைகள் தொங்கும் இயற்கை நிழல் சோலை அது. நிர்மலமான அப்பொழிலில், அடிகள் நித்தியத் தியானத்தில் நிலைத்திருக்கிறர்.

செந்தண்மை பூண்ட அந்தணர் ஒருவர், வாழும் அவரிடத்தில் வந்தார். என்ன அதிசயம்! அவர் வந்ததும், கருணையரான அடிகள் நிஷ்டை கலைந்தது.

ஸ்ரீ மாணிக்க வாசகரே! யாம் பாண்டி நாட்டினேம். கனிந்த உள்ளம் கொண்ட உம்மைக் காண வந்தேம்.

அப்படியா! என்ன வேண்டும்?

தாங்கள் பாடிய திருவாசகங்களை எல்லாம், ஏட்டில் எழுத வேட்கை பிறந்தது. தடை சொல்லாமல், தயவு செய்து அருள வேண்டும்!

பரமன் பிரபாவ வாசகத்தை, மற்றுமொரு தரம் பாடச் சொல்கிறீர். அவ்வளவுதானே! விரைந்து எழுத வல்லீரோ?

ஓ! பாடும்: ஏடும் எழுத்தாணியும் கொண்டு வந்திருக்கிறேன். வியாசர் பாடிய பாரதத்தை, தொடர்ந்து எழுதிஞராம் விநாயகர். அவர் போல் நீர்பாடிய திருவாசகத்தை, எழுத எம்மாலும் ஆகும்.

அப்படியா! சரி, பாடுகிறேன். எழுதும் என்று, அடிகள் பாட லாயினர்.

## திருவாசகம்

(திருப் பெருந்துறையில் அருளிய)

### 1. சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின்(று) அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க

* * * * * *

பல்லோரும் ஏத்தப் பணிந்து.

(தில்லையில் அருளியவை)

## 2. கீர்த்தித் திருவகவல்

தில்லை மூதூர் ஆடிய திருவடி
பல்லுயி ரெல்லாம் பயின்றன ளாகி
* * * * * *
பொலிதரு புலியூர்ப் புக்கினி தருளினன்
ஒலிதரு கயிலை உயர்கிழ வோனே.

## 3. திருவண்டப் பகுதி

அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
இன்னுழை கதிரின் துன்னணுப் புரையச்
சிறிய ஆகப் பெரியோன் தெரியின்
* * * * * *
புவனியிற் சேவடி தீண்டினன் காண்க
சிவனென யானுந் தேறினன் காண்க
அவனெனை யாட்கொண் டருளினன் காண்க
குவளைக் கண்ணி கூறன் காண்க.
* * * * * *
பிரமன்மா லறியாப் பெற்றி யோனே.

## 4. போற்றித் திருவகவல்

நான்முகன் முதலா வானவர் தொழுதெழ
ஈரடி யாலே மூவுல களந்து
நாற்றிசை முனிவரும் ஐம்புலன் மலரப்
போற்றிசெய் கதிர்முடித் திருநெடு மாலன்(று)
அடிமுடி யறியும் ஆதர வதனிற்
கடுமுரண் ஏனம் ஆகி முன்கலந்(து)
ஏழ்தலம் உருவ இடந்து பின்னெய்த்(து)
ஊழி முதல்வ சயசய என்று

வழுத்தியுங் காணு மலரடி யிணைகள்

* * * * * *

போற்றி போற்றி சயசய போற்றி.

(திருப்பெருந் துறையில் அருளிய)

## 5. திருச்சதகம்

மெய்தா னரும்பி விதிர்விதிர்த்(து)
உன்விரையார் கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி
சயசய போற்றி யென்னும்
கைதான் நெகிழ விடேன் உடையாய்
என்னைக் கண்டு கொள்ளே.

(திரு உத்தரகோச மங்கையில் அருளிய)

## 6. நீத்தல் விண்ணப்பம்

கடையவ னேனைக் கருணையி
னல்கலந் தாண்டுகொண்ட
விடையவ னே! விட் டிடுதிகண்
டாய்! விறல் வேங்கையின் தோல்
உடையவ னே! மன்னும் உத்தர
கோசமங் கைக்கரசே!
சடையவ னே! தளர்ந் தேன்எம்பிரான்
என்னைத் தாங்கிக் கொள்ளே.

(திருவண்ணாமலையில் அருளியவை)

## 7. திருவெம்பாவை

போற்றி யருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி யருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றி யெல்லா வுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி யெல்லா வுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி யெல்லா உயிர்க்கும் ஈறும் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்ய ஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீர் ஆடேலோர் எம்பாவாய்.

## 8. திருவம்மானை

விண்ணாளுந் தேவர்க்கும் மேலாய வேதியனை
மண்ணாளும் மன்னவர்க்கும் மாண்பாகி நின்றானைத்
தண்ணார் தமிழளிக்குந் தண்பாண்டி நாட்டானைப்
பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையிற்
கண்ணார் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணா மலையானைப் பாடுதுங்காண் அம்மானாய்

(தில்லையில் அருளியவை)

## 9. திருப்பொற் சுண்ணம்

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் தன்னை
ஐயனை ஐயர்பி ரானைநம்மை
யகப்படுத் தாட்கொண் டருமை காட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொடித் தோள்
பையர வல்குல் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே.

## 10. திருக்கோத்தும்பி

கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்னொப்பில் என்னையும்ஆட் கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாஎன்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் நீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ.

## 11. திருத்தெள்ளேணம்

அவமாய தேவர் அவகதியில் அழுந்தாமே
பவமாயங் காத்தென்னை ஆண்டுகொண்ட பரஞ்சோதி
நவமாய செஞ்சுடர் நல்குதலும் நாம்ஒழிந்து
சிவமான வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ.

## 12. திருச்சாழல்

தென்பால் உகந்தாடுந் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பால் உகந்தான் பெரும்பித்தன் காணேடீ
பெண்பால் உகந்திலனேற் பேதாய் இருநிலத்தோர்
விண்பால் யோகெய்தி வீடுவர்காண் சாழலோ.

## 13. திருப்பூவல்லி

வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய் வாழ்த்தவைத்(து)
இணங்கத்தன் சீரடியார் கூட்டமும்வைத் தெம்பெருமான்
அணங்கொ டணிதில்லை அம்பலத்தே ஆடுகின்ற
குணங்கூரப் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ.

## 14. திருவுந்தியார்

பாலக னார்க்கன்று பாற்கடல் ஈந்திட்ட
கோலச் சடையற்கே உந்திபற
குமரன்றன் தாதைக்கே யுந்திபற.

## 15. திருத்தோணோக்கம்

கற்போலும் நெஞ்சங் கசிந்துருகக் கருணையினால்
நிற்பானைப் போலஎன் நெஞ்சினுள்ளே புகுந்தருளி
நற்பாற் படுத்தென்னை நாடறியத் தான்இங்கன்
சொற்பால தானவா தோணோக்கம் ஆடாமோ.

(திரு உத்தரகோச மங்கையில் அருளியது)

## 16. திருப்பொன்னூசல்

மாதாடு பாகத்தன் உத்தர கோசமங்கைத்
தாதாடு கொன்றைச் சடையான் அடியாருள்
கோதாட்டி நாயேனை ஆட்கொண்டென் தொல்பிறவித்
தீதோடா வண்ணந் திகழப் பிறப்பறுப்பான்
காதாடு குண்டலங்கள் பாடிக் கசிந்தன்பால்
போதாடு பூண்முலையீர் பொன்னூசல் ஆடாமோ.

(தில்லையில் அருளியவை)

## 17. அன்னைப் பத்து

வேத மொழியர்வெண் நீற்றர்செம் மேனியர்
நாதப் பறையினர் அன்னே யென்னும்
நாதப் பறையினர் நான்முகன் மாலுக்கும்
நாதரிந் நாதனார் அன்னே யென்னும்.

## 18. குயிற் பத்து

கீதம் இனிய குயிலே கேட்டியேல் எங்கள் பெருமான்
பாதம் இரண்டும் வினவில் பாதாளம் ஏழினுக் கப்பால்
சோதி மணிமுடி சொல்லிற் சொல்லிறந்து நின்ற தொன்மை
ஆதி குணம் ஒன்றும் இல்லான் அந்தமி லான்வரக் கூவாய்.

## 19. திருத்தசாங்கம்

சோலைப் பசுங்கிளியே தூநீர்ப் பெருந்துறைக்கோன்
கோலம் பொலியுங் கொடிகூறாய்—சாலவும்
ஏதிலார் துண்ணென்ன மேல்விளங்கி ஏர்காட்டும்
கோதிலா ஏறாங் கொடி

(திருப்பெருந்துறையில் அருளிய)

## 20. திருப்பள்ளி யெழுச்சி

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே.

(தில்லையில் அருளியவை)

## 21. கோயில் மூத்த திருப்பதிகம்

உடையாள் உன்றன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்ப தானால் அடியேனுன்
அடியார் நடுவுள் இருக்கும்
அருளைப் புரியாய் பொன்னம் பலத்தெம்
முடியா முதலே என்கருத்து
முடியும் வண்ணம் முன்னின்றே.

## 22. கோயில் திருப்பதிகம்

இன்றெனக் கருளி யிருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலாற் பிறிதுமற் றின்மை

சென்றுசென் றணுவாய்த்தேய்ந்துதேய்ந் தொன்றாந்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றுநீ யல்லை யன்றியொன் றில்லை
யாருன்னை அறியகிற் பாரே.

(திருப்பெருந்துறையில் அருளியவை)

## 23. செத்திலாப் பத்து

புலைய னேனையும் பொருளென நினைந்துன்
அருள் புரிந்தனை புரிதலுங் களித்துத்
தலையி னால்நடந் தேன்விடைப் பாகா
சங்கரா எண்ணில் வானவர்க் கெல்லாம்
நிலைய னேஅலை நீர்விட முண்ட
நித்த னேஅடை யார்புரம் எரித்த
சிலைய னேயெனைச் செத்திடப் பணியாய்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே.

## 24, அடைக்கலப் பத்து

வெறுப்பன வேசெய்யும் என்
சிறுமையைநின் பெருமையினால்
பொறுப்பவ னே! அராப் பூண்பவ
னே! பொங்கு கங்கைசடைச்
செறுப்பவ னே! நின் திருவரு
ளால்என் பிறவியை வேர்
அறுப்பவ னே! யுடை யாய்! அடி
யேன்உன் அடைக்கலமே

## 25. ஆசைப் பத்து

கையால் தொழுதுன் கழற்சே வடிகள்
கழுமத் தழுவிக் கொண்(டு)
எய்யா தென்றன் தலைமேல் வைத்தெம்
பெருமான் பெருமானென்(று)

னையா என்றன் வாயால் அரற்றி
அழல்சேர் மெழுகொப்ப
ஐயாற் றரசே ஆசைப் பட்டேன்
கண்டாய் அம்மானே.

## 26. அதிசயப் பத்து

எண்ணி லேன்திரு நாமஅஞ் செழுத்தும்என்
ஏழைமை யதனாலே
நண்ணி லேன்கலை ஞானிகள் தம்மொடு
நல்வினை நயவாதே
மண்ணி லேபிறந் திறந்துமண் ணாவதற்(கு)
ஒருப்படு கின்றேனை
அண்ணல் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய
அதிசயங் கண்டாமே.

## 27. புணர்ச்சிப் பத்து

நெக்கு நெக்குள் உருகி உருகி
நின்றும் இருந்துங் கிடந்தும் எழுந்தும்
நக்கும் அழுதுந் தொழுதும் வாழ்த்தி
நானா விதத்தாற் கூத்தும் நவிற்றிச்
செக்கர் போலுந் திருமேனி
திகழ நோக்கிச் சிலிர்சிலிர்த்துப்
புக்குநிற்ப தென்றுகொல் லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

## 28. வாழாப் பத்து

பாரொடு விண்ணாய்ப் பரந்தஎம் பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே

யாரொடு நோகேன் ஆர்க்கெடுத்(து) உரைக்கேன்
ஆண்டநீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே.

## 29. அருட் பத்து

சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள்வெண் ணீற்றாய்
பங்கயத் தயனுமா லறியா
நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்
நிறைமலர்க் குருந்தமே வியசீர்
ஆதியே யடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே.

(திருக்கழுக்குன்றத்தில் அருளிய)

## 30. திருக்கழுக்குன்றப் பதிகம்

பிட்டு நேர்பட மண்சு மந்த
பெருந்துறைப் பெரும் பித்தனே,
சட்டநேர்பட வந்திலாத
சழக்கனேனுனைச் சார்ந்திலேன்,
சிட்டனேசிவ லோகனே
சிறு நாயினுங்கடை யாயவெங்,
கட்ட னேனையும் ஆட்கொள் வான்வந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே

(தில்லையில் அருளிய)

## 31. கண்டபத்து

சாதிகுலம் பிறப்பென்னுஞ்
சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை
அல்லலறுத் தாட்கொண்டு

பேதைகுணம் பிறருருவம்
யான்எனதென் னுரைமாய்த்துக்
கோதிலமு தானானைக்
குலாவுதில்லை கண்டேனே.

(திருப்பெருந்துறையில் அருளியவை)

## 32. பிரார்த்தனைப் பத்து

கூடிக் கூடி உன்னடியார்
குனிப்பார் சிரிப்பார் களிப்பாரா
வாடி வாடி வழியற்றேன்
வற்றல் மரம்போல் நிற்பேனோ
ஊடி ஊடி உடையாயொடு
கலந்துள் ளுருகிப் பெருகிநெக்
காடி யாடி ஆனந்தம்
அதுவே யாக அருள் கலந்தே.

## 33. குழைத்த பத்து

வேண்டத் தக்க தறிவோய்நீ
வேண்ட முழுதுந் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற் கரியோய்நீ
வேண்டி யென்னைப் பணி கொண்டாய்
வேண்டி நீயா தருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டினல்லால்.
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே.

ஷை

அன்றே யென்றன் ஆவியும்
உடலும் உடைமை யெல்லாமும்

குன்றே யனையாய் என்னையாட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூ றெனக் குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே.

## 34. உயிருண்ணிப் பத்து

வேண்டேன்புகழ் வேண்டேன் செல்வம்
வேண்டேன் மண்ணும் விண்ணும்
வேண்டேன் பிறப் பிறப்புச் சிவம்
வேண்டார்தமை நாளும்
தீண்டேன் சென்று சேர்ந்தேன் மன்னு
திருப்பெருந்துறை யிறைதாள்
பூண்டேன் புறம் போகேனினிப்
புறம் போகல் ஒட்டேனே.

*(தில்லையில் அருளிய)*

## 35. அச்சப் பத்து

புற்றில்வாள் அரவும் அஞ்சேன்
பொய்யர்தம் மெய்யும் அஞ்சேன்
கற்றைவார் சடையெம் அண்ணல்
கண்ணுதல் பாதம் நண்ணி
மற்றும்ஓர் தெய்வந் தன்னை
உண்டென நினைந்தெம் பெம்மாற்
கற்றிலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே.

(திருப்பெருந்துறையில் அருளிய)

## 36. திருப்பாண்டிப் பதிகம்

நீரின்ப வெள்ளத்துள் நீந்திக்
குளிக்கின்ற நெஞ்சங் கொண்டீர்
பாரின்ப வெள்ளங் கொளப்பரி
மேற்கொண்ட பாண்டியனார்
ஓரின்ப வெள்ளத் துருக்கொண்டு
தொண்டரை உள்ளங் கொண்டார்
பேரின்ப வெள்ளத்துள் பெய்கழ
லேசென்று பேணுமினே.

(திருத்தோணிபுரத்தில் அருளிய)

## 37. பிடித்த பத்து

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்தஆ ரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

(திருப்பெருந்துறையில் அருளிய)

## 38. திருவேசறவு

நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாயின் னமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே.

(திருவாரூரில் அருளிய)

## 39. திருப் புலம்பல்

உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்
வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனியமையும்
குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தாஉன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே.

(தில்லையில் அருளிய)

## 40. குலாப்பத்து

கொம்மை வரிமுலைக் கொம்பனையாள் கூறனுக்குச்
செம்மை மனத்தால் திருப்பணிகள் செய்வேனுக்(கு)
இம்மை தரும்பயன் இத்தனையும் ஈங்கொழிக்கும்
அம்மை குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே

(திருப்பெருந்துறையில் அருளியவை)

## 41. அற்புதப் பத்து

நடித்து மண்ணிடைப் பொய்யினைப் பலசெய்து
நானென தெனும்மாயக்
கடித்த வாயிலே நின்றுமுன் வினைமிகக்
கழறியே திரிவேனைப்
பிடித்து முன்னின்றப் பெருமறை தேடிய
அரும்பொருள் அடியேனை
அடித்த டித்துஅக் காரமுன் தீற்றிய
அற்புதம் அறியேனே.

## 42. சென்னிப் பத்து

பிறவி யென்னுமிக் கடலை நீந்தத்தன்
பேரருள் தந்தருளினன்
அறவை யென்றடி யார்கள் தங்கள்
அருள்கு ழாம்புக விட்டுநல்

உறவு செய்தெனை உய்யக் கொண்ட
பிரான்தன் உண்மைப் பெருக்கமாம்
திறமை காட்டிய சேவடிக்கண்நம்
சென்னி மன்னித் திகழுமே.

## 43. திருவார்த்தை

தூவெள்ளை நீறணி யெம் பெருமான்
சோதி மகேந்திர நாதன் வந்து
தேவர் தொழும்பதம் வைத்த ஈசன்
தென்னன் பெருந்துறை ஆளிஅன்று
காதல் பெருகக் கருணை காட்டித்
தன்கழல் காட்டிக் கசிந்துருகக்
கேதங் கெடுத்தென்னை ஆண்டருளும்
கிடப்பறி வார் எம் பிரான் ஆவாரே.

(தில்லையில் அருளியவை)

## 44. எண்ணப் பதிகம்

உரியேன் அல்லேன் உனக்கடிமை
உன்னைப் பிரிந்திங் கொருபொழுதும்
தரியேன் நாயேன் இன்னதென்
றறியேன் சங்கரா கருணையினால்
பெரியோன் ஒருவன் கண்டுகொள் என்றுன்
பெய்கழல் அடிகாட்டிப்
பிரியேன் என்றென் றருளிய அருளும்
பொய்யோ எங்கள் பெருமானே.

## 45. யாத்திரைப் பத்து.

தாமே தமக்குச் சுற்றமும்
தாமே தமக்கு விதிவகையும்
யாமார் எமதார் பாசமார்
என்ன மாயம் இவைபோகக்

கோமான் பண்டைத் தொண்டரொடும்
அவன்றன் குறிப்பே குறிக்கொண்டு
போமா றமைமின் பொய்நீக்கிப்
புயங்கன் ஆள்வான் பொன்னடிக்கே.

## 46. திருப் படையெழுச்சி

ஞானவாள் ஏந்தும்ஐயர் நாதப் பறையறைமின்
மானமா ஏறும்ஐயர் மதிவெண் குடைகவிமின்
ஆனநீற் றுக்கவசம் அடையப் புகுமின்கள்
வானவூர் கொள்வோம் நாம் மாயப்படை வாராமே.

(திருப்பெருந்துறையில் அருளியவை)

## 47. திருவெண்பா

இன்பம் பெருக்கி இருளகற்றி எஞ்ஞான்றும்
துன்பந் தொடர்வறுத்துச் சோதியாய்—அன்பமைத்துச்
சீரார் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே
ஊராகக் கொண்டான் உவந்து.

## 48. பண்டாய நான்மறை

பேசும் பொருளுக் கிலக்கிதமாம் பேச்சிறந்த
மாசில் மணியின் மணிவார்த்தை—பேசிப்
பெருந்துறையே என்று பிறப்பறுத்தேன் நல்ல
மருந்தினடி என்மனத்தே வைத்து.

(தில்லையில் அருளியவை)

## 49. திருப் படையாட்சி

கண்கள் இரண்டும் அவன்கழல் கண்டு
களிப்பன ஆகாதே
காரிகை யார்கள்தம் வாழ்விலென் வாழ்வு
கடைப்படும் ஆகாதே

மண்களில் வந்து பிறந்திடு மாறு
மறந்திடும் ஆகாதே
மாலறி யாமலர்ப் பாதம் இரண்டும்
வணங்குதும் ஆகாதே.

பண்களி கூர்தரு பாடலொ டாடல்
பயின்றிடு மாகாதே
பாண்டிநன் னாடுடை யான்படை யாட்சிகள்
பாடுது மாகாதே
விண்களி கூர்வதோர் வேதகம் வந்து
வெளிப்படு மாகாதே
மீன்வலை வீசிய கானவன் வந்து
வெளிப்படு மாயிடிலே.

## 50. ஆனந்த மாலை

தாயாய் முலையைத் தருவானே
தாரா தொழிந்தாற் சவலையாய்
நாயேன் கழிந்து போவேனோ
நம்பி யினித்தான் நல்குதியே
தாயே யென்றுன் தாளடைந்தேன்
தயாநீ என்பால் இல்லையே
நாயேன் அடிமை உடனாக
ஆண்டாய் நான்தான் வேண்டாவோ.

## 51. அச்சோப் பதிகம்

முத்திநெறி அறியாத
மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி யறிவித்துப்
பழவினைகள் பாறும் வண்ணம்
சித்தமலம் அறுவித்துச்
சிவமாக்கி எனையாண்ட
அத்தனெனக் கருளியவா(று)
ஆர்பெறுவார் அச்சோவே.

திருச்சிற்றம்பலம்.

இப்படி முறையே பாடினர், அரும் பெரும் தவக் கோலத்து அடிகள்.*

## திருக்கோவையார்

மிக நன்றுயுளது. ஸ்ரீ மாணிக்க வாசகரே! பாவை பாடிய திருவாயால், திருச்சிற்றம்பலர் மேல் ஒரு கோவை பாடும் என வேண்டினர், இதுவரை எழுதிய அந்தணர்.

உவந்த அடிகள், அப்படியே என்று, பயனுள ஒரு இராஜ கோவை பாடினர். அதையும் எழுதி யானதும், எழுதிய கனிந்த திருவுருவம் கரந்தது.

---

*உயர்ந்தோர் வரிசையுள் ஒருவர் ஆயினுர். பாரவர் போல் எதையும் பாராதார். பரமே நோக்கிய பரிவினர் ஆன அடிகள் வரலாறு, ஞான வாழ்க்கைக்கு ஒரு இலக் கியம். திருவாசகமும் திருக்கோவையாரும் திருவருட் புதையல்; இவை எட்டாந் திருமுறை எனப்பெறும். சிவஞான போத எட்டாஞ் சூத்திரத்துடன், அடிகள் வாழ்க்கை ஒட்டி யிருப்பதை, உணர்வார் உளத்தில் உவகை சுரக்கும்.

திருவாசகம், தோத்திர உருவமான ஞான சாத்திரம். வாழ்விக்கும் இந்த வாசகந்தான் வாசகம்; சிறந்த அதன் பொருளா யுளது சிவம். அறிவால் சிவமே ஆன அவர் வாக்கு, அகர முதலென உரைசெய் ஐம்பத்தொரு அக்கரம் போல், ஐம்பத்தொரு தலைப்பில் அமைந்திருக்கின்றது.

எந்தக் காலத்தில், எந்தத் தலைப்பில், எந்த இடத்தில் பாடினுர் என்பதை, புராணம் இனிது புகல்கிறது. அதற்கு மாறுக, இன்றைய திருவாசகப் பதிப்புகளின் நிலை இருக்கின்றன. இப்பதிப்புகளில் உள்ளபடியே திரு வாசகம் இங்குத் தொகுக்கப் பெற்றது.

அடிகள் திடுக்கிட்டார். எழுந்தார். ஓடி எங்கும் தேடினுர். அம்பலவர் ஆடல் இது என்று அறிந்தார். கண்மழை சிந்தினுர். மேலான இன்ப வெள்ளத்தில் மிதந்தார்.

## அருள் அறிவிப்பு

திருவாதவூரர் திருவாய் மலர்ந்தருள, அழகிய திருச்சிற்றம்பலர் திருக்கையெழுத்து என்றுஇருந்த ஒரு ஏடு, இனிய திருவாயில் படியில் இருந்தது.

கண்ட தீட்சிதர்கள் களித்தனர். வியந்து எடுத்தனர். அர்ச்சித்தனர். ஊன்றி எவரும் ஓதினர். வித்தக அதன் பொருள் விளங்கவில்லை. பொருள் விளங்க என்ன செய்வது என்று எண்ணினர் விரைந்தனர். இறைவர் திருவருளை அடிகளிடம் வந்து இயம்பினர். இதன் பொருளை இனிதுரையும் என்று, விநயம் காட்டி விண்ணப்பித்தனர்.

## அத்துவித இன்பம்

அடிகள், திருவருள் குறிப்பை அறிந்தார். அம்பலவர் திருமுன், கனிவார்ந்த பொருளைக் காட்டுகிறேன். வாருங்கள் என்று, அவர்களை அழைத்து வந்தார். பலரும் அவர் பின் வந்தனர்.

அன்று ஆனி மாமகம். அம்பலத்தை அணுகியதும், அதோ பாருங்கள் என்று சிற்சபேசரைச் சுட்டினர். இத் திருக் கோவையார்க்கு, இவரொடு கலக்கும் இதுதான் பொருள் என்று அருளியபடியே, திருமன்றில் இனிது விரைந்து ஏகினுர்.

ஒரே வெளி ஒளி வெள்ளம், பொங்கி யெழுந்து பொலிந்தது.

புனித அதனுள் புகுந்தார். இரண்டறக் கலந்தார். இன்ப மயமானுர். ஓம் ஓம் என மணிகள் ஒலித்தன.

கண்ட யாவரும் கசிந்தனர், நெக்கு நெக்குருகினர். தம் வசம் கெட்டனர். பரவசப்பட்டனர். வானில் மந்திர ஒலிகள் வளர்ந்தன. சிவகணங்கள் கூடினர். சிவாநந்தம் கொண்டனர்.

## நிறைவுரை

திருவாதவூரில் திருவவதரித்தார். பதினுறு வயதிற்கு மேல் அருந்தமிழ்ப் பாண்டி நாட்டில் அமைச்சராகி யிருந்தார். சில ஆண்டிற்குப் பிறகு, திருப்பெருந்துறைக் குருமூர்த்தியிடம், பெறற்கு உரிய தூல ஐந்தெழுத்தைப் பெற்ருர்.

திருவாவடு துறையுள், சூக்கும ஐந்தெழுத்தில் தோய்ந்தார். திருவுத்தர கோசமங்கையில் காரண ஐந்தெழுத்தில் கனிந்தார். சிறக்கத் தல யாத்திரை செய்தார். தில்லையில், முத்தி பஞ்சாட்சரத்தில் மூழ்கிஞர்.

அட்ட மூர்த்தியை, எட்டாம் திருமுறையான திருவாசகத்தினும், திருக்கோவையாரினும் எண்ண வைத்தார். முப்பத்திரண்டாம் வயதில், அம்பலவர் அடி நிழலில் இன்பம் கண்ட திரு வாதவூர் அடிகள் வரலாறு, பேறளித்து நிறைவு பெறுகிறது.

தான் தலைவி; சிவனுர் தலைவர் எனலை அவர் திருவாசகம் தெரிவிக்கின்றது.

தான் தலைவன்; சிவம் தலைவி எனலை, திருக்கோவையார் பெரிதும் தெளிவு படுத்துகின்றது.

"பாய்பரி யொன்றந்தப் பரமாநந்தப் பரனை
தூயதிரு வாய்மலரால் சொல்செய்து—மாயக்
கருவாதை யாமறியா வாறுசெய்தான் கண்டாய்
திருவாத வூராளும் தேன்":—திருக்களிற்றுப்படியார்.

"தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்—கோவைத்
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்" —ஔவையார்.

தொல்லை யிரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத்(து) ஆநந்தம் ஆக்கியதே—எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எம்கோன்
திருவா சகம் என்னும் தேன்.

வாழ்க உலகம்

ஓம்.

## திருமறை நாயகர் திருக்கோயிலில் உள்ள திருவாபரணங்கள்

1. திருமறை நாயகர்க்கு—நாகாபரணம்.
2. ஸ்ரீ ஆரண வல்லியார்க்குக் கவசம்.
3. மூலஸ்தான ஸ்ரீ மாணிக்க வாசகர்க்குக் கவசம்.
4. உற்சவ அலங்காரத்திற்கு,

இரத்தின கிரீடம், தங்கக் காசு மாலே, வில்வ சரம், மகரி பதக்கம், ஐப மாலே, மோகன மாலே, ருத்ராட்ச குவளை, திருத்தோடு, இருதலேப் பட்சி பதக்கங்கள், பச்சைக் கல் பதக்கம், முத்துக் கொண்டை, முத்துக் கிரீடம், இதர அலங்கார சாமான்கள்.

## ஆதி சைவர்கள்

திருமறை நாயகர் திருக்கோயில் வழிபாடு, நலம் மிக்க ஆதி சைவ அந்தணர்களால் நடைபெறு கின்றது. மதுரை ஸ்ரீ சுந்தரேசரே திருவாதவூரிலும் எழுந்தருளியுளர் எனும் ஐதிகத்தால், அன்று அங்கு வழிபட்டிருந்த பரம்பரையரே, அன்று முதல் இன்று வரை ஸ்ரீ வேத நாதரை வழிபட்டு வருகின்றனர்.

## திருக்கோயிலில் நாள் வழிபாடு

1. திருவனந்தல் — பள்ளியறையி லிருந்து காலே ஆறு மணிக்குத் திருவடி நிலேகள் மூலஸ்தானத்திற்கு எழுந்தருளல்.
2. காலே சந்தி —காலே ஒன்பது மணிக்கு அபிஷேகம் முதலியன.

3. உச்சிக் காலம் — பகல் 12 மணிக்கு
4. சாயரட்சை — மாலை 5½ மணிக்கு
5. அர்த்த ஜாமம்— இரவு 8 மணிக்குத் திருப் பள்ளியறைக்கு எழுந்தருளல்.
6. பிரதோஷம் —சுவாமி புறப்பாடு; வெள்ளி ரிஷப வாகனம்.

## திருவிழாக்கள்

1. சித்திரை இறுதியில்—பிடாரியம்மன் உற்சவம்.
2. வைகாசி—பிரமோற்சவம் பத்து நாள்.
3. ஆனி—அன்னம் பாலிப்பு.

   அன்புருவம்; அருள் உள்ளம்; இரண்டாவது குமர குருபரர்; சர்வசங்க பரித்யாகர்; இன்றைய உலகில் ஒளிவளர் சிவ விளக்கை நினைவுறுத்தும் உத்தம அடிகள் என்று, என்றும் எளியேம் இதயத் தெண்ணும் திருப்பனந்தாள் காசி மடத்தலைவர் **காசிவாசி ஸ்ரீ அருணந்தி தம்பிரான் ஸ்வாமிகள்** அவர்கள், ஸ்ரீ மாணிக்கவாசகர் திரு நட்சத்திரத்தன்று, சிவ வேதியர்கள், மகேஸ்வரர்கள், ஏழைகள் முதலினோர்க்கு அன்னம் பாலிக்க, உரிய அறக் கட்டளை ஒன்று நிறுவி யிருக்கிறார்கள்.
4. ஆடி—ஆடிப்பூர விழா.
5. ஆவணி மூலம் —பிட்டுத் திருவிழா; ஸ்ரீ மாணிக்கவாசகர் மதுரைக்கு எழுந்தருளல்.

6. புரட்டாசி—நவராத்திரி உற்சவம்; பத்தாம் நாளன்று, ஸ்ரீ மாணிக்க வாசகர் அம்பு போடுதல்.

7. கார்த்திகை — திருக் கார்த்திகை யன்று பஞ்ச மூர்த்திகள் புறப்பாடு; கடைசி சோம வாரத்தன்று சங்காபிஷேகம்.

8. மார்கழி—திருவெண்பாத் திருநாள்; ஒன் பதாம் நாளன்று, ஸ்ரீ மாணிக்க வாசகர் சட்டத் தேர். முப்பதாம் நாள் திருப்பள்ளி யெழுச்சி

9. மாசி— சிவராத்திரி; இரவு நான்கு காலமும் நடைபெறும்.

திருவிழாக்களில் பக்தர்கள் திரளாகக் கூடுவர்; சேவிப்பர்; பேருன திருவருளைப் பெறுவர்.

"தானே முத்தி தருகுவன் சிவன்; அவன்
அடியன் வாத ஊரனைக்
கடிவின் மனத்தால் கட்ட வல்லார்க்கே."

சுபம்

மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் தேவஸ்தானத்தைச்
சேர்ந்த திருவாதவூர்

# திருமறைநாத ஸ்வாமி திருக்கோயில்

## திருப்பணிக் குழு

தலைவர் உயர் திரு P. T. ராஜன், Barrister-at-law, M.L.C.

மதிப்பிற்குரிய உறுப்பினர்

1. திரு. V. சங்கரன், B.A., B.L., M.L.A.
2. திருமதி. N. புஷ்பம் நடராஜன்.
3. திரு. A. சிதம்பர முதலியார், M.L.C.
4. ,, K. M. S. L. நீலகண்டன்.
5. ,, P. மருதையா.
6. ,, P. ரங்கஸ்வாமி நாயுடு, B.A. B.L.
7. ,, டாக்டர். P. வடமலையான், M.B. B.S.
8. ,, P. V. விநாயக மூர்த்தி நாடார்.
9. ,, N. இராமச்சந்திர ஐயர், B.A., LL.B.
10. ,, N. V. C. நாராயணன் செட்டியார்.
11. ,, K. நடராஜ பிள்ளை.
12. ,, P. C. M. கணபதி செட்டியார்.
13. ,, A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார்.
14. ,, V. V. C. R. முருகேச முதலியார்.
15. ,, R. நாகராஜ்.
16. ,, M. K. சுந்தரேச பட்டர்.
17. ,, L. சசிவர்ண தேவர். M.L.A.
18. ,, P. நல்லமணிஅம்பலக்காரர். B.A. B.L. மேலூர்
19. ,, AL. SP. PL. திருநாவுக்கரசு செட்டியார், தேவக்கோட்டை, இராமநாதபுரம் ஜில்லா.
20. ,, TS. PL. P. CT. சுப்ரமணியம் செட்டியார்.
21. ,, AR. AR. வீரப்ப செட்டியார் ,,
22. ,, OA. PR. M. அருணாசலம் செட்டியார், பள்ளத்தூர் ,,
23. ,, O. RM. M. SP. SV. M. மெய்யப்பச்செட்டியார், தேவக்கோட்டை. ,,

# திருவாதவூரில் உள்ள கி.பி. 1232—திரிபுவன சக்ரவர்த்தி காலக் கல்வெட்டு

No. 423 (A. R. No. 136 of 1903)

On a slab set up at Tiruvadavur, same Taluk and District.

TIRUVADAVUR

1. ஸ்வஸ்த்ஸ்ரீ [॥ *] கொமாறவ[ன்மரான திரி புவனச் சக்கரவர்த்திகள் சொ[ணா]டு கொண்- 2. [டு]முடி கொண்[ட] சோழபுர[த்து] விராஹஷெக மும் வி[ஜயாபிஷெ]ஷகமும் பண்ணிய[ரு]- 3. [ளி]ய ஸ்ரீ ஸுந்த[ர]பாண்டிய தெவற்கு யாண்டு பரு- வதின் எதிராமாண்டும[து]ரொ-தய[வ]- 4. ளநாட்டு இராசிங்கன் குளக்கீழ் அம்பலத்தாடி நல்லூர்மும்முடி சொழன் [பூ]வணமு- 5 [நிவ]ஞன அ[திகைமான்] தெவனென் திருப்பரங்குன்ற [நா]ட்டு பா[ண்ட] னம்- பலங்கா- 6. ட்டின பெருமாள் திருமடத்து முதலியார் பரா[க்] கிறமதெவற்குப் பி[ர]மாணம் [ப]ண் 7. ணிக்குடுத்த [பரிச]ாவது [ । *] [தெ]ன் [ப]றம்ப நாட்டுத் திருவாதவூரில் [திரு]வா[தவூர்] பெருமாள்[சி]- 8. பாதத்துத் திருமடவி[ளாகத்து] தான் வி[லை] கொண்டு [டையநில]ம் தரவு எடுத்த 9. மடத்துக்குக் கிழல்லைக்குக் கிழல்லை சாலை [தெ]ன் மெல் [தெரு]க்கு மெற்[கு] 10. ம் தென் எல்லை தெருவுக்கு [வ]டக்கும் [மெ] லெல்[லை] நாயி[ஞர்பக்கல்] வி[லை-கொ]ண்ட எல்லை- 11. யெ எ[ல்]லையா[வு]தாகவும் விட்ட பல[நில]ம் நா[யி]ஞர் [பக்கல்] விலைகொண்ட எல்லை(யெ) 12. எல்லை யாவுதாகவும் இன்ஞன் கெல்லைக்கு [ட்பட்டநில]. மும் நத்[த]மும் நத்தப் பாழு- 13. [ம்பு]ன் செய்யும் மற்றும் எப்பெர்ப்பட்டினவும்..........ங்களும் [தாந்] திருவாதவூ[ர்] 14. ப்பெருமாள் பக்கல் விலை கொண்ட நிலம் நான்....யெல்லை........த்த அற[சு]வு-

15. க்கெ எப்பேர்பட்டனவும்...மாவுதாகவும்....ளந் தப்படி 16. ந்நிலம் நாங்.........காங்[கெய]ன் பக்கல் விலைகொண்ட 17. ... மு[ம்*] முடி சொ[ழன்] குடிக் காட்டில்........குளமும்[குள]- 18. ப் பரப்பும் நத்த மும் நத்தப்பாழும் மெனெ[க்கி]ய [மரமும் கிழ்] னெக்கிய கிணறும் ம 19. ற்றும் எப்பெர்ப்பட்டன வும்...........பக்கல் விலைகொண்ட 20. [நி]லமும்........ ........பக்கல் விலைகொண்ட [கொல்லை] நிலம்....மற்- று[ள்ள]கில- 21. [முத]ல் கடமை வினியொகமும் மற்றும் எப்பெர்ப்பட்டன........வெற்றிலை 22. ...... முன்றத் தொன்று நிலம்..........த்து இவ்வூர்.......... 23. லத்தால் கொண்ட நிலம் காலெ..........க வெண் டுமவையிட்ட 24. [ட்ட] வையா........க்கு........வாக ..........ங்குளத்தில் நிக்கி[நி]ன்- 25. ற இருகூத்து நஞ்சையும் புஞ்சையும் கடமையும் மற்றும் எ- 26. ப்பெர்ப்பட்ட கடமை..............பாவி நான் ஒற் றிக்கொண்டெ- 27. [கா]ல்லன் [கு]ளத்தில் ஒற்றி ...........க்கெசெ[ர]ம்மாய் எழு- 28. ந்தருளி இருக்கும் தவசியர்க்கு....................யாய் இம்மடத்திலே [இ]- 29. ந்த நாயனரைப் பூசித்து நாலு திருப்பெர் நாளாசறுதி [அ]முது செய்- 30. வதாகவும் இப்படி சம்மதித்துக் கல்லிலும் செம்பிலும் வெட்டி- 31. கொள்வாராகச் சம்மதித்து [த்தன்மதா]னம் பிடிபாடுபண்- 32. ணிக்குடுத்தென் முதலியார் ப [ராக்]கிறம தெவற்கு மும்முடி சொழ 33. ன்[பூ] வணை முனிவனை அதிகைமாங் தெவனெங் 2 இப் படிக்கு 34. இவை மும்முடி சொழன் பூவணமுனிவ னை அதிகைமாங்தெவன்எ- 35. ழுத்து உ இப்படி கல்லில் வெட்டினென் இவ்வூர் சிற்பாசாரியன் வி- 36. ச்சாதிரன் உய்யவந்தானை புஷ்பவன ஆசா ரியன் எழுத்து[*] 37. இது ஸ்ரீ மாஹெஸ்வர ரக்ஷை.

## இக் கல்வெட்டு ஏறக்குறைய கி. பி. 1550 ஆக இருக்கலாம் என்பது யூகம்

No. 424 A. R. No. 137 of 1903

On A slab Lying in the Big tank in the Same Village

TIRUVADAVUR

1. [ஸுபமஸ்து] [ ‖ *] [இராக்கத]
2. ஷு பங்குனி [மீ]
3. சுவாமி விசுவநாத
4. நாயக்கர் முத்துவீ [ர]-
5. ப்பநாயக்கர் அய்ய [ன்]
6. புண்ணியமாக திருவ-
7. ாத[வூர்] திருமறை நா[த]-
8. ர்[த]ம்பிரானுர் தெவத-
9. ானமான மேற்படி யூ-
10. ர் பெரியகுளத்[துப் பா]-
11. சிவிலெ குளத்திலே யி-
12. ட்டு வெ[ட்டி]க்கொல்லிக் க-
13. ட்டளை யிட்டபடி செ[ய]-
14. [ரி] செழியர் கொ[ன்] நாய-
15. ன் பிள்ளை ஆண்-
16. டி அதிகாரியார் ப-
17. ா[ர] பத்தியத்தில் க-
18. ட்டளை இட்டபடி-
19. யினுலே வருச வ-
20. று[சந்]தொறும் ச-
21. ந்திராதித்தவரை-
22. (யு]ம் குழத்திலெ யிர-
23. ..............................
24. க்கட-
25. [வதா]கவும்

26. இந்த தன்-
27. மத்[துக்கு அ]
28. குதம் பண்
29. [ணினவன்]
30. செ[ங்]கை-
31. க்கரை[யிலெ]
32. கா[ராம்பசுவை]
33. வக் கொ[ன்]-
34. ற தொஷத்தி-
35. லும் மாதா
36. பிதாவைக்
37. கொன்ற [தெ]
38. ாஷத்திலு-
39. ம் பிறுமகத்-
40. திபண்ணி-
41. ன தொஷ-
42. த்திலும் பொக[க்*] கட்-
43. வாஜகவு-
44. [ம்]

Two other pieces read

1. ண்ணப்பம்
2. லம் புழல்க் கொட் [ட*]-
3. ம் தன்மபெருமா[ள்]
4. தம்பி ச[தாசி II வ*] முதலி[ய]-
5. ார் பார [ப] த்தியமா [க]
6. திருவாதவூ[ர்*] கொ யி[லுக்]-
7. கு சந்தனக்கா[ப்பழ]
8. கி[யார்] செஜபதிப் 1 [பெ]-
9. ருமாள் எழுத்து [|*]
1. தம்பிரான் குட்டி யாதி-
2. சத்தி ஆள்விட்டு மணி
3. பிடிக்கவும். உ.



பதினாறுகால் மண்டபம்